காந்தீப வழியில் சாந்தி

"கிழக்கு வெளுத் தது கருணை யருட் ஜோதி யுதயங்
கிடைத்த தென துளக்கமலங் கிளர்ந்த தென தகத்தே
சழக்கு வெளுத் தது சாதி யாச்சிரமா சாரஞ்
சமயமதா சாரமெனச் சண்டை யிட்ட கலக
வழக்கு வெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம் வெளுத்து வாய்வெளுத்து வாயுற வாதித்த
முழங்கு வெளுத்தது சிவமே பொருளெனுஞ் சன்மார்க்க
முழுநெறியிற் பரநாத முரசு முழங் கியதே!"

— வள்ளலார்

சி. இராமச்சந்திரன், B. A. (Hons.)

காந்தீய வழியில் சாந்தி

★

சி. இராமச்சந்திரன், B. A., (Hons.)
மெய்யுணர்வுத்துறை,
ஸ்ரீபழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

★

திருமதி இரா. வேலம்மாள்.
'அருள் ஆறுதல் இல்லத்தார்'
தொண்டர்குலம்,
பழனி.

விலை ரூபாய் ஒன்று

விஜயா, மதுரை-68.

நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"– என்பது தமிழ்மறை

இந்த நூல் வெளிவர ஊக்கமும், உதவியும் நல்கி ஆக்கபூர்வ மான ஆசி நல்கிய என் அன்பு சகோதரியார் திருமதி. சு. புஷ்பம் அவர்களுக்கு உளம் நிறைந்த நன்றி கடப்பாட்டினைச் சமர்ப்பித்துக் கொள்வேன்.

இந்த நூலில் பல ஆசிரிய பெருமக்கள் கருத்துக்களையும் தாராளமாக எடுத்துக் கையாண்டுளேன். அவர்கள் தம் கருத்துக் கொடை பெருந்தகைமைக்கு நன்றிக் கடனுடையோன்.

நூலினைச் சரிபார்த்து, சிறப்பான திருத்தம் பல செய்துதவிய பேராசிரிய நண்பர் திரு. அ. ம. பரிமணம், M. A., M. Litt., அவர்களுக்கு நன்றி உணர்வைப் புலப்படுத்திக் கொள்வேன்.

எனது மாணுக்கர் திரு. த. குமாரசாமி, B, A., (B. L.), படியெடுத்து உதவினமைக்கு நன்றியுடையேன்.

அச்சுப் படிகளைத் திருத்தம் செய்து உதவிய சர்வோதய மண்டல் தொண்டர்கள் திரு. நடராசன் அவர்களுக்கும், திரு. சங்கரசுப்பு அவர்களுக்கும் உளமார்ந்த நன்றி.

இந்த நூல் இவ்வளவு சிறப்புடன், மாநாட்டில் வெளிவர பெரும் துணையாய் நின்ற 'விஜயா பிரிண்டர்ஸ்' உரிமையாளர் திரு. க. இராமன் அவர்களின் பெருந்தகைமையும், மற்றும் பணியில் கைதேர்ந்த அன்பர்களின் உதவியும் ஞாலத்திலும் சிறந்த காலத்தால் செய்த உதவி. இவ்வாறு பல வகையிலும் துணை புரிந்து உதவிய அன்பர்கள் அனைவருக்கும் என்றும் எனது நன்றி மிக்க வணக்கம் உரித்தாகுக.

––சி. இராமச்சந்திரன்.

பொருளடக்கம்

அருட்பெருஞ்ஜோதி ஓம் அரிஓம் தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி அம்மை அப்பா துணை! அருட்பெருஞ்ஜோதி

காணிக்கை

''உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே''

என்பது தொல் புகழ் மணக்கும் சங்க கால வாழ்வியலை எடுத்தியம்ப வந்த புறநானூற்றுப் பாடல். பாடியவனோ 'வெறும்' புலவனல்ல! பாண்டிய மன்னன் இளம் பெருவழுதி. பண்பில் சிறந்து விளங்கிய பண்டை மன்னன், ''தனக்கென வாழாது பிறருக்கென்றே வாழும் பண்பாளர்—அருளாளர் காரணமாக உலகம் நிலை பெற்றுள்ளது!'' என்ற கருத்தைக் கொண்டிருந்தான் என்று தெரிகிறது.

''பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம்; அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்பது வையத்தை வாழவேண்டிய முறைக்கு நெறிப்படுத்த வந்த வான்புகழ் வள்ளுவப் பேராசான் நம்பிக்கை. தமது மறையில் கடவுள் வாழ்த்துக்கு முதலிடம் கொடுத்து, அடுத்து வான் சிறப்புக் கூறி, நீத்தார் பெருமை பாடுகின்றார். அறத்தின் பெற்றியினை கூறப்புகுமுன் அருளாளர் புகழினை மெச்சுகின்றார்!

'ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு, என்ற கருத்துக்கு சான்று பகர்வதாய் வாழும் ஒரு பெரியார் வல்ல நாட்டினைச் சேர்ந்த புனிதர் சிதம்பரசாது! நிறைமொழி மாந்தரின் மறைமொழிக்

கேற்ப இன்று வையம் வாழ்கின்றது என்றால் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வல்ல நாட்டார் இருக்கின்றார் என்றே கூறலாம்!

நமது தேவை-வையத்தவர் தேவை பூர்த்தியாகும் வரை தாம் பிறக்க ஆசைப்படுவதாய் சொல்லும் உத்தமர்!

தமது 'தொழில்' பற்றி குறிப்பிடும் போது சொல்வார், 'எனது தொழில் பயிர்த் தொழில். பார்க்கப்பட்ட உயிர் களெல்லாம் எனது பயிர். களைகள் நிறைய கிடக்கின்றன. களை களைக் களைவது எனது தொழில். எனது தொழில். பயிர்த் தொழில் என்ற பெருமகனார்.

தங்களைப் பார்த்தால் சாமி மாதிரித் தெரியவில்லையே என்ற கூற்றுக்கு, 'சாமி யார்?' என்று என்னைக் கேட்கின் றனர். 'நீங்கள் அனைவரும் சாமி என்கின்றேன் நான் என்ற பெருந்தகையினர்!

'அமைதி கெட்டு, அல்லல்பட்டு உழலும் உலகினுக்கு 'அருள் ஆறுதல்' வழங்கும் வள்ளல் அவர். வழிபாடு பற்றியும் வாழும் துறை முறை பற்றியும் அறியாதவர்க்கு 'தொண்டே தூய்மை.' 'சேவை செய்வதே சிவன் வழிபாடு' 'ஆளை மதிப் பது ஆண்டவனை வணங்குவது, 'வெறும்' ஆலயத்தையே மதிப்பது, ஆண்டவனது மக்களைச் சுரண்டுவது! என்னும் வழிகாட்டியாவார்!

'அன்பே – அருட்பெருஞ் ஜோதி! தயவே – தனிப்பெருங் கருணை! செனனம் எடுத்ததற்கழகு ஜீவகாருண்யம் அவசியம், ஜீவகாருண்யம் இல்லாத பக்தி மாயாஜாலம்' பக்தியே சீர்திருத்தம்; சீர்திருத்தமே பக்தி!

'தான் உண்டன் மண் உண்டது, பாவத்தைக் கொண்டது. பிறர் உண்டது, பரம் உண்டது, புண்ணியத் தைக் கொண்டது.

'பணமும் பசியும் பொது; போலிப்பொருளைக் கொடுத்து உண்மைப் பொருளைப் பெறவேண்டும்! அன்றாடம் சந்திக்கும் மக்களே ஆண்டவராவார்; ஒருவருக் கொருவர் உதவிக் கொள்வது ஆண்டவனது ஏற்பாடு!'

'சகோதரத்துவம், சமத்துவம், சமரசம், சன்மார்க்கம் இதை வளர்ப்பவர்களே மனித இனம், அரன் வாரிசு; அல்லாதவர்களெல்லாம் விலங்கு இனம், அசுர வாரிசு!

'ஒன்றே குலம் – தொண்டே தெய்வம்! ஒரு நாமம், ஒரு ரூபம் இல்லாது எங்கும் நிறைந்தும், மறைந்தும், கடந்தும், எல்லாமாயும் நின்றிலங்கும் பரம்பொருளான ஆரூபி, உருவத்தோடும், நாமத்தோடும் கொடுத்துள்ள நமது தாயும், தந்தையுமே, வழிபடுவதற்குரிய தெய்வம்!'

'தெய்வ வழிபாடு தீபத்தில் செய்வது; ஏனையவை யெல்லாம் ஆன்மீயத்திற்குப் பயன்படாது, மாயைக்குச் செய்வதே! பலனுக்கெல்லாம் அப்பாற்பட்டது கடவுள் பக்தி! 'காவியை விட கதர் உயர்ந்தது. காந்தி அடிகள் வழி கடவுளை அடையும் வழி. காந்திபமே உலகை இரட்சிக்க வந்தது! பரம்பொருளை அடையும் வழியும் அதுவே. கருவிலிருக்கும் குழந்தைக்கும் காந்திபம் தேவை. காந்திபம் கொண்ட ஆட்சி ஆயுள் வளர்ச்சி கொண்டது. காந்திபம் இல்லாத ஆட்சி பூச்சியமே பெறும், பூரணம் பெறாது. சாந்திக்கு காந்திபம் துணை! — என்றெல்லாம் தெளிவுரை நல்கும் ஞான சிதம்பர நாட்டார் பொற்பாத மலரடிகட்கு, வள்ளுவனின் பனுவலின் துணிபின்படி இந்த நூலினைக் காணிக்கையாக்கு கின்றேன்!

ஆசிரியன் முன்னுரை.

இந்த நூலுக்கு மதிப்புரை கேட்ட போது, வடலூரில் ஓய்வு பெற்றுவரும் முன்னாள் சென்னைமாநில முதல் அமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள், காந்தியடிகள் கொள்கைபற்றி ஞானிகளல்லவா எழுத வேண்டும்? என்றார்கள்.

'ஞானி அல்லேன்' என்று அப்பர் அடிகளே தம்மைச் சொல்லிக் கொள்வார்.

ஒரு தேவாரப் பாடலில் சொல்வார் :

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே."

இவ்வாறு ஞானிகளும் தம்மை 'ஞானி அல்லேன்' என்று சொல்லிக் கொள்ளும்போது, என்னைப் போன்றோர் என்ன சொல்வது என்பது தெரியவில்லை! ஆயினும் எண்ணியதை சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் சொன்னதே இந்த நூல். 'பித்தனேன், பேதையேன், பேயேன், நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே' என்று யானும் வையகத்திற்கு தேவையான மாமருந்தாம் காந்திபத்தைப்பற்றி சொல்ல ன்வந்தேன். 'பெரியவர்கள் பிழை பொறுக்க!'

இந்த யுகத்தில் மனித வரலாற்றின் போக்கில் திட்டவட்டமான திசைமாற்றம் கண்டாக வேண்டும். இந்த அணுயுகத்தில், நம்மை, நமது முன்னேற்றத்தை, நமது நாகரிகத்தைப் பற்றிய நமது கோட்பாடுகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, நமது போக்கில் திசை மாற்றம் காண வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டுள்ளோம். முன்னேற்றத்தின் பேரால் வழிதவறி எங்கேயோ சென்று, இந்த விஞ்ஞானம் வளர்ந்தோங்கிய காலத்தும், அஞ்ஞான இருளில் அவதிப் படுவதான ஒரு அவலநிலைக்கு ஆட்பட்டுள்

ளோம். நமது வளர்ச்சிப் போக்கை அல்ல, நமது வீழ்ச்சியை காலமுள்ள போதே தக்கமுறையில் ஆராய்ந்து, திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டிய கடப்பாடு இன்றைய – இனிவரும் தலைமுறையினருக்கு உண்டு!

ஆங்கில நாட்டின் வரலாற்றுப் பேராசிரியர் அர்னால்டு டாயின்பி, தமது பத்துத் தொகுதிகளைக் கொண்ட 'வரலாற்றினைப் பற்றிய ஒரு ஆய்வு' (A Study of History) என்ற நூலில், இன்றைய யுகப் பிரச்சினைகளை ஆய்ந்து, மேலை நாடுகளின் நாகரிகம் 'தன்னகந்தை மயக்கம்' (ego-centric illusion) என்பதாயும் 'எந்திர வெற்றிகளின் வளர்ச்சி ஓங்குமளவு ஆன்மீய நலம் குலைவுறும் அபாயத்திற்கு நம்மைத் தள்ளுவதாகும்' என்றும் கணிக்கின்றார். அவரது ஆய்வு மேலை நாட்டு நாகரிகத்தின் 'தோற்றம், வளர்ச்சி அத்துடன் அதன் வீழ்ச்சி' என்ற பாணியில் செல்வதாயுள்ளது.'

டாயின்பியின் கொள்கைப்படி, மனிதனின் மாண்பு, 'மனிதப் பண்பு சிறக்க முடியாத இயற்கையின் மீது மனிதனின் ஆளுகை, என்பதில் அல்ல என்றும், தன்னையும், சகோதரர்களையும், ஆண்டவனையும் பற்றிய ஆன்மீய விவகாரங்களே யொழிய, மனிதப் பண்பற்ற தான்தோன்றிப் போக்கினைப் பொருத்த எந்திரநுட்ப பிரச்சினைகளில் அடங்குவதல்ல' வென்றும் தெளிவு படுத்துவார்.

'புதிரான மனிதன்' (Man the unknown) என்ற நூலினுக்கு நோபல் பரிசினைப் பெற்று உலகப் புகழ் பெற்றிலங்கும் விஞ்ஞானி அலெக்ஸி கார்ல், 'மனிதனைச் சீர்திருத்துவது' என்ற தலைப்பில் கீழே தந்துள்ள முறையில் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார்!

"இன்று நமது அறிவாற்றல்மிக்க கூட்டத்தின் தலைவர்கள் ஐயுறத் தொடங்கி விட்டனர். நெருக்கடிகளின் காரணங்கள் பொருளாதார – நிதி சம்பந்தமானவைகள் தாமா? இலஞ்சம் முட்டாள்தனம் இன்னபிற குற்றச் சாட்டுக்களை அரசியல் வாதிகள், வணிகர்கள் மீதும் அறியாமை, மதிமயக்கம், ஆகிய குற்றங்களைப் பொருளாதார வாதிகள் மீதும் நாம் சுமத்துவதில்லையா? நவீன வாழ்க்கை முறை நாட்டின் அறிவு ஒழுக்கங்களைத் தாழ்த்தியுள்ளதைக் காணவில்லையா? குற்றவாளிகளின் மீது போர் தொடுக்க ஒவ்வொரு ஆண்டும் பலகோடி டாலர்களை நாம் ஏன் செல

விட வேண்டும்? கொள்ளைக் கூட்டங்கள் வங்கிகளைத் தாக்கியும், போலீசு படையினரைக் கொன்றும், குழந்தைகளைக் கடத்தியும், பணயம் கொண்டும் அன்றி கொலை செய்தும், நிகழ்த்தும் காரியங்களுக்கு எதிர் நடவடிக்கைக்காக நமது பெருவாரி செலவுகளையும் மீறி வெற்றியுடன் தொடர்ந்து நடப்பானேன்? நாகரிகமடைந்துள்ள மக்களிடையே மூளை பலவீனமும், பைத்தியமும் ஏன் மலிந்து காணப்பட வேண்டும்? பொருளாதார காரணங்களையெல்லாம் விட தனிப்பட்டதும் சமூகத் தன்மையுமுள்ள காரணங்களை உலகின் நெருக்கடி சார்ந்துள்ளதென்பதில்லையா? பேரழிவின் காரணங்கள் நம்மிடமே யில்லையா? நமது தாபனஅமைப்புகளிலும் இல்லாதிருக்கின்றன போன்றவற்றைஎல்லாம் நிச்சயிக்கவும், திருத்திப் புதுப்பிக்கவும் வேண்டிய அவசியமான கடப்பாட்டினை விழ்ச்சியுற்றுவரத் தொடங்கியுள்ள நாகரிகக் காட்சி, உறுதியாகவும், முழுமையுடனும் நமக்கு உணர்த்தக் கூடுமென்று நம்புவோமாக!''

இவை அமெரிக்க நாட்டினைப் பார்த்து அலெக்ஸி கார்ல் எழுப்பிய வினாக்களே ஆயினும், இவை உலகின் எல்லாத் திக்கிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் வினாக்களே!

ஒருபுறம் இப்படி இருக்க, இன்னொரு பக்கம் 'சமதர்மம் பொதுவுடைமை' என்ற மயக்கந்தரும் சொல்லோவியங்களுக்குள் மறைந்து வளரும் எந்திரமோக அஞ்ஞானப் போக்கினைக் காண்கின்றோம்!

வான்புகழ் கொண்ட வள்ளுவர், அனைத்துயிருக்கும் அருள் நெறியை ஓதிய வள்ளலார் இவர்தம் ஆன்மநேய உரிமை வழியினில் நின்று இன்றைய யுகப் புதிர்களை விடுவிக்கக் கூடுமா? என்று ஆராய்ந்தேன். வள்ளுவர்-வள்ளலார் இதயத்தை இன்றையக் கால நிலைமைகளுக்கு ஏற்பப் புரிந்து கொள்ளும் முயற்சி ஒருவரைக் காந்தியடிகளிடம் கொண்டு வந்து சேர்ப்பது இயற்கையே! ஏனெனில் அவர்களெல்லாம் 'வெறும்' சமுதாயச் சிந்தனையாளர்கள் என்ற தகுதியை மாத்திரம் கொண்டு நின்றுவிடாது, பழமையான ஆன்ம உரிமையிலும் நின்று, ஞானநுபவத்துடன். மாறிச் சூழலும் உலோகாயுதத்தின் மாயப்பிடியினின்று அகன்று, உலகியலை ஆன்மிய நோக்க வளர்ச்சிக்காக நெறிப்படுத்திய நித்திய முத்தர்கள்!

உலக வரலாற்றின் மிகமிக நெருக்கடியான காலக் கட்டத்தில் காந்தியடிகள் வாழ்ந்தார். இந்த நாட்டின் ஆயிரமாயிரம் ஆண்டுக் காலத்திய தொன்மை நயமிக்க ஆன்மானுபவ ஞானம் காந்தியடிகளிடம் சிறந்து ஒளிரக் கண்டோம். 'உயிர்க் கொலையும், புலைப்புசிப்புமுடைய' இந்த யுகத்திலும் உலகம் நின்று நிலைபெற்றுள்ளது என்றால் அது 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்ற வள்ளுவரின் மெய்மையுரைப்படியே நீடித்து இலங்குகின்றது என்று அறிய வேண்டும். 'எச்சார்புமாகி உயிர்க்கு இதம் புரிதல் வேண்டும், எமை அடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும், இச்சாதி சமய விகற்பங்கள் எல்லாம் தவிர்த்தே, எவ்வுலகும் சன்மார்க்கப் பொது அடைதல் வேண்டும்! என்ற அருள் நெறியை இந்த அணுயுகத்தில் வாழ்ந்து காட்டிய வித்தகராம் காந்தியடிகளைப் பின்பற்றியே உலகியல் திருத்தமுறல் வேண்டும். மனித மேம்பாட்டைக் காந்தீபம் பண்பினிலேயே ஒளிரச் செய்ய முடியும்.

காந்தியடிகள் மறைவு குறித்து டக்ளஸ் மக்ஆர்தர்—ஜப்பானில் நேச வல்லரசுகளின் கூட்டு இராணுவத்தின் 'தலைமைத் தளபதி' பதவியை வகித்தவர், சொன்னது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது!

''மனித நாகரிகம் பரிணமம் அடைந்து வருகின்றது, அது அழிந்து விடாது தொடர வேண்டுமானால், காந்தி கொண்ட ஒரு நம்பிக்கையை இறுதியில் எல்லோருமே ஒப்புக்கொண்டாக வேண்டும். மனிதர்களுக் கிடையிலே விவகாரம் உண்டாக்கிய பிரச்சினைகளைத் திரளான சேனை யுடன் பலாத்காரத்தைப் பயன்படுத்தித் தீர்க்க முயல்வது அடிப்படை தவறு. அது மட்டுமல்ல; அந்த முறையில் தனக்குத்தானே அழிவு தேடிக் கொள்ளும் வித்தும் அடங்கும்''. சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் வெளியிட்டதும் நமது சிந்தனைக்குரியது.

'' ஜட சக்திகளை ஆத்ம சக்தி ஆட்டிவைக்கக் கூடியது என்று காந்தியடிகள் நிரூபித்தார். அவரைப்போல் மிக்க வலிவோடும், திருப்திகரமாயும் அதை நிரூபித்த மாமனிதர் வேறு எவரும் இல்லை. எந்தக் காலத்திலும் இருந்ததுமில்லை அண்மை வரலாற்றுக் காலத்தில் இல்லவே யில்லை! நம்மைச் சுற்றிலும் ஜட சக்திகளே சூழ்ந்து ஆத்ம சக்தியை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கின்றது. திடீரென்று அவருடைய

மறைவு வீசிய மின்னொளி நம்மை அகண்டா காரமாய்ச் சூழ்ந்துள்ள இருளை நமக்குக் காட்டிவிட்டது. மிக நீண்ட காலமாய்ச் சத்தியத்தைக் கடைப்பிடித்து, அன்பையே சொரிந்து, தன்னலத்தை அடியோடு துறந்து, அடக்கமே அணிகலனாக, தொண்டே கடமையாக, அகிம்சா தர்ம விரதம் பூண்டு அவர் வாழ்ந்தார்; வலிமை மிகுந்த எதிரிகளோடு கடினமான போரை நடத்தினார். அவருக்குப்பின் இன்று உயிர் வாழ்வோரில் வேறு எவரும் இவ்வளவு சிரமப் பட்டுச் செயல் புரிந்ததில்லை; இவ்வளவு வெற்றி கண்டதுமில்லை. தம் நாட்டிலே ஆங்கிலேயர் ஆட்சியை அவர் எதிர்த்து ஆர்வ மிகுதியுடன் ஓயாது போராடினார். ஆயினும், அந்தப் போராட்டத்தின் நடுவே, தம் கைகளைத் தூய்மையாய் வைத்துக் கொண்டார். யாரிடமும் குரோதம் கொள்ளாமலும், யாருக்குமே துரோகம் செய்யாமலும், யாரையும் பகைக்காமலும் அவர் போராடினார்!''

இந்தியாவின் கடைசி ஆங்கில அரசப் பிரதிநிதியான லார்டு (அட்மிரல்) மவுண்ட் பாட்டன் பின்வருமாறு சொல்வார்.

''காந்தியின் உன்னதமான உதாரணத்தைப் பின்பற்றினால், இந்தத் தொல்லைகள் நிறைந்த உலகம் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ளும்!''

இந்த அறிவும், தெளிவும் காந்திப ஒளிவழியின் ஏற்றத்தை மெய்ப்பிக்கும்.

'காந்தியம்', 'காந்திஇசம்', என்று அழைக்காமல், 'காந்திபம்' என்று அழைப்பது கருத்து நயமும் கொண்டிலங்கும். 'காந்திபம்' என்ற சொல்லாட்சி எங்களது சற்குருநாதர் கையாளும் ஆட்சியாகும்.

காந்தீய வழியில் சாந்தி!

புதுமையும் பழமையும்

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் பெற்றியனே!

பழம் பொருளாம் பரம் பொருளை, மாணிக்கவாசகப் பெருந்தகை வாழ்த்தும் பான்மை இது! பழமைக் கெல்லாம் பழமையாயும்-அதே நேரத்தில், வரப்போகும் எக்காலத்துப் புதுமைக் கெல்லாம் புதுமை நலமிக்கொளிரும் புதுமையாயும் நின்றொளிர்வது மூலப் பழம் பொருளின் இயல்பு!

பழம் பெரும் நாடாம் பாரதம், பூரண ஞானம் பொலியும் நன்னாடாம் பாரதம், 'பாருக்குள்ளே நல்லநாடு' என்பது பாரதியார் கண்ட முடிவு. பண்டை நலமிக்க பாரதத்தை வரலாற்று வழியில் 'திராவிடம்' என்று சொன்னாலும் பொருத்தமே! இந்தப் பழம் புகழ் மிக்க நாடும், புதிய பாரதம் – இளைய பாரதம் என்பதாய் அழைக்கப் படுவதாயும் அமைந்தொளிர்வது ஆகும்! இஃதோடு இந்த நாட்டில் போற்றிக் கொண்டாடப்படும் கொள்கையும் – இலட்சியமும் இத் தகைய பண்பு நலங்களால் – பழமையில் புதுமையும், புதுமையில் பழமையும், சிறந்து இலங்குவதை வரலாறு நிலை நாட்டும்!

'புவிக்குள்ளே முதன்மை யுற்றாய்!' என்று பாரதியால் வாழ்த்தப் பட்ட, வைய வாழ்வின் நல்லற வழிகாட்டியாம் காந்தியடிகள், வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறை கண்ட மனித குலமேதை. அவர் வழங்கும் சன்மார்க்க மணம் வீசும் சர்வோதயம், பழம் பெரு நாட்டின் பண்பாட்டு வழியில் நின்று, என்றும் குன்றாப் புதுமை நலங்களோடு ஒளிவீசும் ஒரு இலட்சிய ஓவியம்! மானிட இனம் ஈடேறுவதற்கு உள்ள ஒரே வாழ்க்கைத் தத்துவம்!

"எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்" 'என்ற அமரகவி

பாரதியின் வாக்கும் பொய்யாகாது, முக்காலும் உண்மை என்பதை வளரும் வரலாறு உறுதிப்படுத்துவது திண்ணம்.

'காந்தீபம்' – என்னும் 'சன்மார்க்க சர்வோதயம்' பாரதத்தின் ஒரு குறிப்பிட்ட விடுதலை போராட்டகால வரலாற்றுச் சூழ்நிலையி லேயே வடிக்கப்பட்ட ஒரு தத்துவமாயினும், அது ஒரு கால எல்லைக் குட்பட்ட நோக்கத்தை மாத்திரம் நிறைவு செய்வதும், பின்பு 'செல்லாக் காசா'வதுமான ஒன்றன்று. புத்த பிரானும், ஏசுநாதரும், நபி நாயகமும் எந்த வழியில் வைய வாழ்வு அமையவேண்டுமெனப் பாடு பட்டனரோ, அந்த மரபில் – வாழையடி வாழையாய் வந்த மரபினில் தோன்றிய வள்ளல் காந்தி, அவர்கள் காட்டிய கொள்கை வழியில் நின்று, இனிவளரும் வரலாற்று வரம்பினையெல்லாம் தாண்டி நிலை பெற்றிருக்கும் தன்மையினைக் கொண்ட ஓர் தத்துவத்தை – சாந்தி மார்க்கத்தை வழங்கிய பெருந்தகை யாவார்! மனித குலத்தின் எல்லாக் காலத்துக்கும் மேம்பாடு பயக்கும் கொள்கையாகவே மிளிர் கின்றது இந்தக் காந்திபப் படையல். உண்மையிலும், உய்யும் வழி யிலும் உறுதியான நாட்டம் கொண்டவர்கள் காந்தீப வழியில் ஒளி பெறவே செய்கின்றனர்.

விஞ்ஞான விந்தைகள் பெரும் பெரும் சாதனைகளைச் சாதித்து, இன்னும் அதிசயமான 'இலட்சிய உலகினுக்கு' மனிதனை அழைத்துச் செல்லத்தக்க நம்பிக்கை யூட்டிவருகின்றது! விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில், வான வெளியினைக் கடந்து அண்ட வெளியின் அதிசயங் களைக் கண்டு அளவிடும் முயற்சியையும் சாதனைகளையும் காண்கின் றோம். இன்னொருபக்கம் விஞ்ஞான யுக மனிதன் அரசியல்–பொரு ளியல் நோக்கில் அரைகுறை நோக்கினோடு சமுதாய வாழ்க்கையை அணுகும் போக்கினையும் கண்டு வருகின்றோம். மேலும் நாடுகளிடையே பகைமையும் பயமும் கொண்டு, மானிட இனத்தோடு ஏனைய உயிரினங் களையும் இமைப் பொழுதுள் நீராக்கி விடும், நாகரிகப் பண்பாட்டின் புதிரான அணு – நீர்வாயு நூறு மெகாடன் குண்டு முதலிய கொலைக் கருவிகளைக் கண்டு, 'மக்களின் தேர்வு' முத்திரை பெற்றுள்ள, 'அரசியல் மேதைகள்', பலப் பரிட்சை செய்துவந்த, வரும் கதையையும் அறிவோம். இவ்வாறு மக்களோடு ஏனைய உயிரினங்களுக்கும் தாயாக விளங்கும் இயற்கைச் சூழ்நிலையே பாழ்படும் படியான சோதனை விளையாடல்களில் இறங்கி, அஞ்ஞான இருளில் வையத்தை ஆழ்த்திவந்த வரலாற்றைக் கண்டும், கேட்டும் வந்தோம். மாபஸான் என்னும் பிரெஞ்சு நாட்டுக் கதாசிரியன் ''போர் என்னும் சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் சமுதாயம் முழுவதுமே வெறுத் தொதுக்காது இருந்தது மிகமிக அதிசயமான ஒன்று! ''என்று கூறினான். அதி லும் இந்த நூறு மெகாடன் கொலைக் கருவி—பலகோடி மக்களைத் தீர்த்துக் கட்ட வல்லது கண்டு, உலகைப் பயமுறுத்திய செய்தி அதிசயத்திலும் அதிசயமாத்திரமல்ல, கற்பனைக்கு புரியாத பயங்கரம்! நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஒன்பதின்மர் உள்ளிட்ட, பதினொரு

விஞ்ஞானிகள் கையொப்பமிட்ட 'இரஸ்ஸல் – ஐன்ஸ்டீன் அறிக்கை' யானது 18 ஏப்ரல் 1955ல் வெளிவந்ததும், அணுமுதலிய ஆயுதப் பரிசோதனை இவ்வளவு தூரம் வளர்ந்து வந்தது மிகவும் அதிசயமான புதிர்தான்! அணு சோதனையின் அபாயத்தினை மக்களுக்கு உணர்த்திய பணிக்காகக் கலிபோர்னியாவின் விஞ்ஞானி டாக்டர் லினஸ் பாலிங் என்பவர் 1962ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்றார். அவர் 11,000 விஞ்ஞானிகளின் கையொப்பம் பெற்று, அணுச் சோதனையைத் தடைபடுத்தும் அறிக்கையை ஐக்கிய நாட்டு சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதும் மிகவும் வியப்புக் குரியதே!

வையத்தின் இத்தகைய நெருக்கடியான நிலைமைகளைக் கண்ணுற்றபின், நமது பார்வை தெளிவோடு கூடிய 'வைய மளாவிய பார்வையாக' – ஏன்? 'அனைத்துயிரும் ஒன்றென்னும்' அத்துவிதப் பார்வையாக மலர வேண்டுவது மிகமிக அவசியமாகிறது. ஆனால் காந்தியடிகள் வழியாம் 'சன்மார்க்க சர்வோதயம்' இந்தப் பிரபஞ்சமளாவிய போக்கினைக் கொண்டுள்ளது தானா? 'குறுகிய காலங் கடந்த நோக்கினைக் கொண்டது போல் ஒலிக்கின்றதே என்று 'முற்போக்கு – விஞ்ஞானச் சிந்தனையாளர்கள்' ஒருவித அலட்சியப் போக்கில் – ஏனோ – தானோ போக்கில், மதிப்பிடுவதையும் பார்க்கவே செய்கிறோம். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற மேம் போக்கான பார்வையுடன், ஆழ்ந்த ஆராய்ச்சியும், சமுதாயப் பொறுப்புணர்ச்சியில் போதிய அக்கறையும் இல்லாத வரட்சியான சிந்தனையின் விளைவே அவர்களுடைய தவறான குறிக்கோளினைக்கொண்ட ஆதார நியாயங்கள்! நமது முற்போக்கு விஞ்ஞானச் சிந்தனையாளர்கள் போற்றும் கருத்தும் – கொள்கையும் விஞ்ஞானமே எதிர்பார்க்கும் தொலை நோக்கிய பார்வையின் பாற்பட்ட அடிப்படைகளைக் கொண்டதல்ல!

தவறுடைய – சிதைந்து நொறுங்கி விடத்தக்க அடிப்படையில் இன்றைய நாகரிகம் உருவாகியுள்ளது. மனிதன் தானாக விதித்துக் கொண்ட பண்பாடு மிக்க விதிகளால் உருவாகும் சமுதாய அமைப்பையே நாம் இனிபோற்ற முடியும். இதற்கு மாறாக, மனிதனின் பலவீனத்திலும் – அறியாமையிலும் – ஆசைக் கோளாறுகளிலும் உருவாக்கப்பட்ட – உருவாக்கப்பட்டு வரும் இலட்சியமொன்றை இன்றைய 'இயந்திரக் கிறுக்குப் பிடித்தலையும்' (Techno crazy) உலகம் குறிக்கோளாகக் கொண்டு தாறுமாறாக நடந்து வருகிறது! அதன் விளைவே இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சியிலும் மேலோங்கி நிற்கும் அஞ்ஞானம் – நோக்கமற்ற சுயநலம் – விவேகமற்ற ஆணவமாகும்! மிகமிக அற்பக் குறிக்கோளுக்காக உலகினையே நாசமாக்கத் துணிந்துள்ள இன்றைய விஞ்ஞான முத்திரை

தாங்கிய 'நூதனமான பிற்போக்கு, சரியான திசையில் நடக்கப் பழக்கம் குறைந்துவிட்ட மனிதன் காந்தியடிகளின் நோக்கத்தைத் தெளிவுடன் உணர்ந்து கொள்ள முடியாத பரிதாப நிலைமையில் நிற்கின்றான். அவசர கோலத்தில் வளர்ந்துவிட்ட – வளர்க்கப்படும் இயந்திர (அ)நாகரிம் வேறு உயர்ந்த நோக்கத்தைக் குறிக்க எப்படி ஆற்றல் கொண்டிருக்க முடியும் ?

'வெறுப்பின் வழியில் சென்று வையம் சலிப்படைந்துள்ளது. மேலை நாடுகளில் இந்த அலுப்பும் சலிப்பும் மேலோங்கி வருவதை நாம் கண்ணுற்று வருகிறோம். வெறுப்பினை வளர்க்கும் பாடல் மனித இனத்திற்கு யாதொரு பயனையும் இதுவரை அளித்ததாகத் தெரியவில்லை. இந்தியா ஒரு புதிய திருப்பத்தை நல்கி, ஒரு பாடத்தை உலகினுக்கு வழங்கிய பெருமை பெற்றோங்கட்டும்!'' என்பார் காந்தி யடிகள். அந்தப் பணியையும் தொடங்கிவைக்கும் தகுதியும் – பெருமையும் அடிகளையே சாரும்! காந்திய சன்மார்க்க சர்வோதயமே மனிதாபிமானத்துடனும், அடக்கத்துடனும் வையத்தின் சிக்கல் களுக்கு, வையம் மறந்துவிட்ட தெளிவான பாதையை இன்றைய விஞ்ஞான இயந்திரச் சலசலப்புக் கிடையே புத்துணர்வுடனும், புதிய தெம்புடனும் காட்ட முன்வந்துள்ளது.

முதிர்ந்த நாகரிகப் பண்பாட்டிலும். ஆன்ம நேய ஒருமைப்பாட்டி லும், தன்னில் வையத்தையும், வையத்தில் தன்னையும் காணும் ஆழ்ந்து அகன்ற மெய்ஞானப் பாதையை அடிப்படையாகக் கொண் டதே காந்தியடிகளின் 'சன்மார்க்க சர்வோதயம்'. மனித ஒழுக்கத் திலிருந்து மனிதப் பிறவியின் விழுமிய நோக்கத்திற்கு ஒப்ப எழுந்ததே 'சன்மார்க்க சர்வோதயம்' என்னும் காந்தீபப் படையல். அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது! என்ற ஔவையின் மெய் மொழிப்படி மானிடப் பிறவியின் அரும் பெரும் நோக்கத்தை ஈடேற்ற வந்ததே காந்தீபம். வையத்தில் தோன்றிய அத்தனை உயிர்களையும் உயிரற்றதாகக் கருதப்படும் பொருள்களையும் கூட இயற்கை-உண்மை விளக்கத்தால் இரக்க நெகிழ்ச்சியுடன் தழுவிக் கொள்ளும் இந்த அன்பு நெறி வையத்திற்குரிய ஒரே நெறியாகும். மனித குலத்திற்கே உரிய சொந்தமான நெறி.

ஏனைய வழிதுறைகளெல்லாம், தற்காலிகக் குறிக்கோளினைக் கொண்டும் – கட்டுப்பாடற்ற சமுதாய அமைப்பில் உருவாகியும் – தொலை நோக்கும் பார்வைத் தெளிவினைக் கொள்ளாத பயங்கரச் சித் திரம்! கலக்க மடைந்த நாகரிகத்தின் விளைவால் எழுந்ததே சிலர் போற்றவும், பின்பு வந்த தடம் தெரியாது அடித்துச் செல்லப்படுவது மான 'விஞ்ஞான – முற்போக்குப் பார்வையாகும்'! ஆய்ந்து அறிந்து அடங்கிய தெளிவை அதில் காணமுடியாது.

காந்திப நெறி சுட்டும் தெளிவுமிக்க பாதை அமைதியான வழியில் அன்பினை உயிருக்கு ஆதாரமாக்கி – அறத்தை நோக்கமாகக் கொண்டு மனிதனின் எழில்மிக்க இலட்சியத்தைக் காட்டும். அது வையத்தில் வாழ்வாங்கு வாழ்விக்கும் ஒளிமிக்க திட்டம். எனவே இதன் எளிமை யைக் கண்டு தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. அளவிடமுடி யாத ஒன்றை அளவிட்டு விடலாம் என்று மனக்கற்பனை கொண்டு விடக்கூடாது.

ஆண்டவனும் – ஆன்மாவும் நித்தியமானவைகள். 'என்று நீ அன்று நான் உன் அடிமை!' என்பது தாயுமானவர் அருள் மொழி. அனாதியான ஆன்மாவின் பழமைக்கு ஒப்ப சன்மார்க்க சர்வோதய வழியும் பழமையான அடிப்படையில் உருவாகிவந்த வாழும் வழியாகும். ஆயினும் இன்றைய தவறான மதிப்பீட்டில் கணிக்கப்படும் புதுமை யாவற்றையும் விட புத்தம் புதிய வழிமுறை! பழமைக்குப் பழமையும், புதுமைக்குப் புதுமையும் கொண்டு பொலிவுறும் வழி.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்'' – என்பது தொல்காப் பிய மரபியல்! அந்த முதல் நூல் மரபு வழக்கு பற்றி திருமந்திரம், திவ்ய பிரபந்தம், தேவாரம், திருவாசகம் ஆகிய சமய நூல்களும் எடுத்து இயம்பக்காண்கின்றோம். ''அருந்தவருக் கன்றாலின் கீழ் அறமுதலா நான்கினையும் இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம் பேடி அருந்தவருக் கறமுதனுன் கன்றருளிச் செய்திலனேல் திருந்த வருக் குலகியற்கை தெரியாகாண் சாழேலோ'' — திருவாசகம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நெறிமுறை பண்டு தொட்டு நமது மக்கள் வாழ்வியலை புரிந்து கொண்ட பாங்கினை உணர்த்த வல்லது!

ஆன்மீய ஒளி விளக்கை உலகினில் முதன் முதலில் ஏற்றிவைத்த இந்தப் பழம் பெருநாடு, திசை கெட்டு, தவறுதலாய் வெகுதொலை நடந்து, பேராபத்தை எதிர்நோக்கியுள்ள மனித குலத்திற்குச் சரியான பாதையை மீண்டும் சுட்டிக்காட்டி, சாகாத நாகரிகத்திற்கு மனிதனை அழைத்துச் செல்ல முன்வந்துள்ளது உலகியல் – வாழ்க்கையை ஆன்மீய நோக்கத்திற்கு ஈடேற்றும் திறனற்ற இதற்கு குறைந்த வெறெந்தத் தத்துவமும், மனித இலட்சியத்திற்கு உகந்த தாகாது. இலௌகீகத்தையும், ஆன்மீயத்தையும் பிரிக்க முடியாத ஒரு எழில் மிக்க இணைப்பினைத்தான், தொல் மரபு வழியில் நின்றெழுந்த காந்திபத்தில் காண்கின்றோம்!

1038

'மெய் ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
அஞ் ஞானந் தன்னை அகல் விக்கும் நல்லறிவே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே' – என்ற மணிவாசகப் பெம்மானின் சொல் ஓவியத்தைக் கொண்டே, காந்தீப ஒளிச் சுடரை வழிபடலாம்!

காந்தியடிகளின் வாழ்க்கை!

அறிவியல் அணுயுகத்தில் வாழ்ந்தவரே காந்தி அடிகள். பாரதத்தில் தோன்றிய அடிகள் (1869), எந்திர நாகரிகத்தை உலகினுக்கு அறிமுகம் செய்து வைத்த ஆங்கில நாட்டின் தலைநகரில் வாழ்ந்து, உள் வீடற்ற அதன் நாகரிகப் பண்பை உணர்ந்து (1891) பாரிஸ்டராகப் பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினர். வழக்கறிஞராகத் தொழில் புரிந்தும், நியாய உணர்வுடனேயே நடந்து, ஆண்டொன்றுக்கு 25,000 பவுன் தேடுமளவுக்கு, செல்வாக்குடன் உயர்ந்தார். 1893ல் தென் ஆப்பிரிக்கா சென்று 1914 வரை வெள்ளை நிறத்தவரின் திமிர் வாதத்தினை இனவெறியை எதிர்த்து அறவழியில் நின்று போரிடும் முறையை கண்டு தேர்ந்து, வெற்றியும் கொண்டார். இவரது எதிரியான தளபதி சுமட்ஸ் இறுதியில் இவருக்கு அடிபணிந்து கூறியது:

உம்முடன் வேறு என்னதான் செய்யக்கூடும்? எங்களது தேவையை உணர்ந்து உதவினீர். உம்மீது எவ்வாறு கை வைக்க முடியும்?... உமது எதிரியையும் துன்புறுத்த மறுக்கின்றீர்... தாமே வலிந்து இன்னலை ஏற்று, மரியாதையும், கண்ணியமும் பிறழாத நெறியை நீவிரே தோற்றுவித்துக் கொண்டு, அதனின்று விலகாது வெற்றிகாண விரும்புகின்றீர். அது எங்களை வலிமை இழக்கச் செய்து விட்டது"

இவ்வாறு அரசியலில் மாத்திரமன்றி, வேறுபல துறைகளிலும் அறநெறியிலே நின்று புதுமை கண்டார். தனக்கென்றிருந்த உடமைகளையெல்லாம் வழங்கி 'டால்ஸ்டாய் பண்ணை' நிறுவினர். இரஸ்கின் காட்டிய 'கடையனுக்கும் உதயம்' என்ற சர்வோதயக் கொள்கையில் நின்று 'விவசாயத் தொழிலாளர் குடியரசு'க்கான நிறுவன உறுப்பினராகி விட்டதாகக் காந்தியடிகள் அன்பர் ஒருவரின் வினவுக்கு விடையளிக்கும் போது வெளியிட்டுள்ளார்.

பின்பு பாரத நாட்டினுக்குத் திரும்பி. இந்த நாட்டின் அரசியல் வானில் ஒரு திட்டவட்டமான திருப்பத்தை உண்டாக்கி, 1919 ல் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தி லிருந்து, 1948-ல் அவர் அமரத்துவம் அடையும் வரையிலும் பல போராட்டங்களிலும் தன் நிகரற்ற முறையில் தலைமை வகித்து ஆன்மீய வழியிலேயே வைய

வாழ்வினைத் திருத்தும் வழிவகையினை ஆராய்ந்தார். 1921 லிருந்து அடிகளை 'மஹாத்மா' வென்று உலகம் தெரிந்து கொள்ளத் தொடங்கியது! அடிகள் இன்றைய அரசியல் – பொருளாதார – சமுதாயு சிக்கல்களுக் கெல்லாம் ஆன்மீய பலத்தைக் கொண்டே தீர்வுகள் காட்டியும், பகைவனுக்கும் அன்பினையே வழங்கியும், இந்த நாட்டின் பண்புமிக்க கொள்கைக்குத் தம்மையும், இந்த நாட்டினையும் இலக்கணமாக்கிக் கொண்ட மாமேதை! உலகினை இன்று பிடித்துள்ள பிணியை நன்கு உணர்ந்தும், நாகரிகத்தின் பேரால் நிகழும் வன்முறைகளையும் – கொலைகளையும் உலகினுக்கு உணர்த்தியும், பண்பியல் வழியில் உலகினை உருவாக்கவும், அன்பின் வழியிலேயே உயிர் வாழ்க்கையை நெறிப்படுத்தவும், வழிகாட்டிய இன்றைய யுகத்தலைவர் காந்தியடிகள்!

வையவாழ்வும் மானிடப் பிறவியும் நித்தியமான உண்மையைத் தேடிக் காண்பதற்கான ஆய்வுக்கெனவே அமைந்தனவாகக் கண்டு, கையாண்டு 'அருளே நம் இயல்; அருளே நம் உரு' என்று காட்டி, இதற்கு அன்னியமானவை நமது இயல்புமாகா; நமது உருவுமாகா வென்பதைத் தெளிவுபடுத்திய ஒப்புயர்வற்ற அருளாளர் காந்தியடிகள்.

மாணிபூதனர், திருவள்ளுவமாலையில்;

"அறன் அறிந்தேம், ஆன்ற பொருள் அறிந்தேம்,
இன்பின் திறன் அறிந்தேம், வீடு தெளிந்தோம்" என்று கூறியது போல, காந்தியடிகளின் சிறப்புமிக்க வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் இன்னதென்பதைக் கண்டு தெளிந்தோம்!

'காந்தீபம்' பற்றிக் காந்தியடிகள்

காந்தியடிகள் தமக்குப்பின் தம்பேரால் ஒரு சித்தாந்தத்தையோ அல்லது ஒரு அமைப்பையோ விட்டுச் செல்ல விரும்பவில்லை. ஆயினும் 'வரலாற்று மாமனிதரான' காந்தியடிகளின் பெயரைச் சுற்றி அவர் கொள்கையும், அதைக் காணத் துடிக்கும் ஒரு அமைப்பும் தவிர்க்க முடியாது வளர்ந்தே வந்துள்ளன. ஒரு சமயம் காந்தியடிகளிடமே ஒருவர், அவர் தம் கருத்துக்களை முறைப்படுத்தித் தத்துவமாக வெளியிட ஆலோசனை கூறினர். காந்தியடிகள் தந்த மறுமொழியாவது:

'எனக்கு அதற்கான நேரம் இல்லை யென்பது ஒருபக்கம். இன்னும் பரிசோதனை செய்தறியும் நிலையிலேயே யிருக்கின்றேன்

என்பது மற்ருெரு பக்கம். எனவே, அப்படி ஏதாவது கொள்கை யென்று ஒன்று இருக்குமானல், மெதுவாக அதுதானகவே மலரட்டும்!

மற்றுமொரு சமயம், தமது விருப்பத்திற்கு மாருக, தம் பேரால் உருவாகிவரும் கொள்கை குறித்து, காந்தியடிகள் சொல்வார்.

'காந்திபம் என்ற ஒன்று கிடையாது. எனக்குப்பின் அப்படி ஒரு கொள்கை யொன்றை விட்டுச் செல்ல விரும்பவில்லை. புதிய கொள்கையோ அல்லது கோட்பாடோ படைத்ததாயும் நான் சொல்லிக்கொள்ள முடியாது. நித்தியமான உண்மைகளை எனது போக்கில் நமது தினசரி வாழ்க்கைக்கும், பிரச்சினைக்கும் கொண்டு வரவே ஒருவாறு முயன்றேன்......நான் கொண்டிருந்த கருத்துக்களும், கண்ட முடிவுகளும் முடிந்த முடிவுகளல்ல. நாளைக்கே நானே மாற்றிக் கொள்ளவும் நேரலாம். புதிதாக நான் உலகினுக்குப் போதிக்கும்படி என்னிடம் யாதொன்றுமில்லை. (சத்தியம்) உண்மையும், (அகிம்சை) அன்பும் குன்றுகளைப் போல் பழமையானவைகள். நான் செய்த தெல்லாம் என்னல் முடிந்தளவு எவ்வளவு விரிந்தளவுக்குப் பரிசோதனை செய்ய முடியுமோ அவ்வளவிற்கு முயன்றேன். இவ்வாறு செய்யும் போது, சில சமயங்களில் தவறும் நேர்ந்துள்ளது. தவறிலிருந்து கற்றுக் கொண்டிருக்கின்றேன். எனவே வாழ்க்கையும், அதன் பிரச்சினைகளும் உண்மை, அன்பு ஆகியவைகளை நடைமுறையில் பரிசோதித்தறிவதற்காகவே எனக்கு பயன்பட்டுள்ளன. 'உண்மை' யில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது உள்ளுணர்ச்சியின் பயனகவே. ஆனல் (அகிம்சை) அன்புள்ளவனக ஆனதும் அவ்வாறே என்றும் சொல்லிக்கொள்ள முடியாது. உண்மையினைத் தொடர்ந்து செல்லும் போதே அன்பையும் கண்டு கொள்ள முடிந்தது என்று மாத்திரம் கூறுவேன்... நல்லது, எனது தத்துவ ஞானமெல்லாம், அத்தகைய பாவனையின் பேரால் அழைக்கப்படுவதானல், நான் மேலே சொன்னவைகளில் அவை அடங்கும். நீங்கள் அதனைக் 'காந்திசம்' என்று அழைக்க முடியாது. ஏனென்ருல், அப்படி ஒரு 'இசம்' இல்லை என்ற காரணத்தால்...! (அரிசன், 28 மார்ச்சு'36)

இவ்வாறு தாம் ஒரு சித்தாந்தத்திற்குக் கர்த்தா வல்லவென்று சொல்லிக் கொள்ளும்போது, காந்திப வழியின் சிறப்பு மேலும் சுடர் விட்டு ஒளிர்வதாகவே யிருக்கின்றது. அதிலும் நித்தியமான கொள் கைகளை நடைமுறை வாழ்க்கைக்குக் கொண்டு வரவும், பெருமளவில் பயன்படுத்தி அவற்றின் பலாபலன்களைக் கண்டு கையாண்ட பெருமை வரலாற்றில் வேறு யாரையும்விட காந்தியடிகளையே சிறப்பாகச்சாரும். எனவே காந்தியடிகள் நல்கியது வெறும் வாய் வேதாந்தமுமல்ல, வரட்டுவாதமுமல்ல. என்றென்றும் மாருத நித்திய வாழ்வினுக்குரிய

ஆன்மிய விதிகளை நடைமுறை சமுதாய வாழ்வினுக்குக் கொண்டு வரும் விஞ்ஞான பூர்வமான முயற்சியும், சோதனையுமாகவே சொல்ல வேண்டும். சோதனைகளின் பலாபலன்களைக் கொண்டு தத்துவச் சிறப்பினை நிலை நாட்டலாம். பல அறிஞர்களும், ஞானிகளும், மேதைகளும் தங்களது சொந்த அனுபவ வாயிலாக, இதன் சிறப்பினைக் கண்டு கையாண்டு வருகின்றார்கள். காந்தியடிகள் கையாண்ட வழிமுறைகள் தென் ஆப்பிரிக்காவில் பயன் படுத்தப்படுகின்றன. அமெரிக்க நீக்ரோக்கள் பயன்படுத்துகின்றார்கள். ஆப்பிரிக்காவின் விடுதலை இயக்கத் தலைவர்கள் சிலர் ஊக்கம் காட்டிவருகின்றனர். அல்ஜீரிய போருக்கு எதிராகப் பிரான்சில் அகிம்சை வழியில் சட்ட மறுப்பு இயக்கம் நடத்தினர். உலகப் பேரறிஞர் இரஸ்ஸல் மறியல் செய்து பலமுறை சிறை சென்றுள்ளார். 1961 செப்டம்பர் 12ல் விசாரணையின் போது, 'அகிம்சை சட்டமறுப்பு தவிர்க்க முடியாத இயக்கமாகி விட்டது' என்று ஒத்துக் கொண்டார். இரஸ்ஸல் காந்திய முறையில் இந்தக் கொள்கையை மக்களுக்கு மாத்திரமல்லாமல், அரசுகளுக்கும் எடுத்துச் சென்றுள்ளார். ஐக்கிய அமெரிக்கா பசிபிக்கடலில் அணு சோதனை செய்வதாக அறிவித்தபோது, இந்தப் போக்கை எதிர்த்துத் தம் கப்பல்களை அவ்விடத்திற்கு அனுப்பிவைக்குமாறு எட்டு நடுநிலை நாடுகளை வேண்டிக் கொண்டார். எந்த ஒரு நடுநிலை நாடும் அப்படிச் செய்ய முன்வராத போதிலும் கூட, அக்கொள்கையின் மாண்பு இன்று உணரப்பட்டே வருகிறது. இன்று ஐக்கிய அமெரிக்கா, சோவியத்து ரஷ்யா, பிரிட்டன் ஆகியவை அணுசோதனையை நிறுத்திக் கொள்ள உடன்படிக்கை செய்துகொண்டது, உலகப் போர் நிலைமைகளில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வருவதாகவும் காந்திய வழியின் சிறப்பாக அமைந்துள்ளது. எனவே இன்று வையத்தின் போக்கு இந்தக் கொள்கைக்கு உணர்வு பூர்வமாகத் திரும்பி வரவேண்டிய கட்டாயத்திலேயே இருக்கின்றது என்பதை நிகழ்ச்சிப் போக்கு உணர்த்தி வருகின்றது.

மார்க்சும், காந்தியும்!

'காந்தியும், மார்க்சும்' என்ற தலைப்பில் காந்திய சீடர்களில் ஒருவரான மஷ்ருவாலா எழுதிய நூலுக்கு, அறிமுகம் வரையும் காந்தியடிகளின் தலைமைச் சீடர் வினோபா அடிகள் கீழ்க்கண்டபடி தமது தீர்ப்பை வழங்குகின்றார்.

'(மகாத்மா) புனிதராகிய காந்தியின் கொள்கையையும், (மாமுனிவர்) பெரும் சிந்தனையாளர் மார்க்சின் கொள்கையையும் ஒப்பு நோக்கி ஆராய்வது போல் சுவையான வேறு ஆராய்ச்சி இந்த யுகத்தில் இருக்கத்தான் கூடுமா? கடந்த நூறு ஆண்டு காலத்தில், மனித வர்க்கத்தின் சமுதாய வாழ்க்கையைப் புடம் போட்டுப் பார்த்

தால், எஞ்சி நிற்பவை இந்த இருபெரும் பெயர்களாகவே இருக்கக் கூடும். லெனின் மார்க்சில் மறைந்து விடுவார். டால்ஸ்டாயின் நிழல் காந்தியடிகளின் மீது படரும். இந்த இருவேறு கொள்கை களும் எதிரெதிராக நின்று, ஒன்றை யொன்று விழுங்கி விடவே தயா ராக நிற்கின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், இரு பெரும் போட்டியாளர்கள் இரஷ்யா தலைமையிலுள்ள பொதுவுடைமை யினரும், ஜனநாயக முகமூடி தாங்கிய ஐக்கிய அமெரிக்காவின் கீழுள்ள முதலாளிகளும் என்பதாகவே தெரியலாம். ஆனால் கோட்பாட்டு வழியில் பின்னது தனது வலுவெல்லாம் இழந்து விட்டது! இராணுவ பலத்தைக் கொண்டு கணித்தால், மிகவும் திடமாகத் தோன்றிய போதிலும், பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரான போட்டியாக உண்மையில் நான் அதனைக் கருதவில்லை. மற்றொரு பக்கம் காந்தீபக் கோட்பாடோ வென்றால், சீராக்கி உருவாக்கப்பட்ட கொள்கையாக நிற்க முடியாது போயினும், சரியான வழியில் வலுவுடன் பிறந்துள்ளது என்ற காரணத்தால், முடிவில் காந்தீபத்தோடுதான் பொதுவுடைமை நேரடி போட்டியில் இறங்க நேரும் என்று நம்புகிறேன்!''

இந்தக் கணிப்பு இனிவரும் கால நிலைமைகளில் நன்கு உணரப் படும். இன்றையத் தலைமுறையினரும், இனிவரும் தலைமுறையினரும் இந்த உண்மைகளை உணரத்தான் போகிறார்கள்!

மார்க்சிச சமுதாய விஞ்ஞானம்!

மார்க்சிச - பொதுவுடைமையினர் இயற்கைப் பூதபௌதிகத் தோற்றமாதிகளை ஆளும் விதிகளை, இயங்கும் பௌதிக வியல் (Dialectical Materialism) என்றும் மனித சமுதாய வளர்ச்சிப் போக்கை (Historical materialism) 'சமுதாய வளர்ச்சிப் பௌதிக வியல்' என்றும் வரையறுக்கின்றனர். இதில் சிறப்பாக அழுத்தம் பெறுவது சடவிதியே! இயற்கைத் தோற்றமாதிகளில் நிகழும் போக்கை மாத்திர மன்றி, மனித வரலாற்றில் நிகழும் போக்கையும் வெறும் சடவிதி யாகவே கருத்துரைக்கின்றனர். மார்க்சிசம் ஒரு விஞ்ஞான பார்வை யைக் கையாள்வது என்பதனாலேயே அதன் சீரும், சிறப்பும் உயர்ந் துள்ளது என்பது பல 'முற்போக்குச் சிந்தனையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. விஞ்ஞானப் பார்வை யென்பது யதார்த்த நிலை மைகளை அப்படியே எடுத்து ஆராய்வது. சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை - சிக்கலை அந்தப்படியே சடவிதிகளாகக் கணித்து, அதில் தனிமனிதன் அல்லது சமுதாயத்திற்கு உள்ள அறிவு பூர்வமான பங்கி னையும் முடிவில் வெறும் சடவியல் விதிகளாகக் கருதி (Objective Realism) மதிக்கின்றது. வெறும் பிரத்தியட்சப் பிரமாணத்தையே-கண் கூடான காட்சி அளவியல், மையமாகக் கொண்டுள்ள இந்தப் புறநிலை

யதார்த்தவாதம், மனிதனின் ஆன்மீயப் பண்புச் சிறப்புக்களை கருத்தில் எடுத்துக் கொள்ள மறுக்கும் வெறும் 'சடவாதமே!'

"அகத்தே கருத்துப் புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திட—அவரும்
இகத்தே பரத்தைப்பெற்று மகிழ்ந்திடுதற் கென்று யென்னை இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க வுற்றேன். அருளைப் பெற்றேன்"

என்ற அருளாளர்கள் வாழ்ந்து புனிதமாக்கிய நாடு நமது நாடு! நிறை மொழி மாந்தரும், மறை மொழியும் கொண்டிலங்கும் நாடு இது!

இந்த நிறைமொழி மாந்தர் – ஞானிகள் தமது பரஞான மெய் யுணர்வினால் காணும் காட்சிகள் வெறும் 'பாச ஞா ன'மான உல கியல் விதிகளின் வசப்பட்டுச் சிந்திக்கும் சிந்தனை யாளர்களுக்குப் புலனாகாது. வெறும் உலகியலைப் பற்றிய ஞானம் 'பூரண ஞான' மாகி விடாது. உண்மை உலகியலோடு முடிந்து விடுவதில்லை.

'தன்னையே அறிவாய்' (Know thyself) என்றான் சாக்ரட்டீஸ் என்னும் கிரேக்கப் பேரறிஞன். தன்னை அறியும் அறிவும் முழுமை பெற்றதல்ல; தன்னுணர்வும் கெட்டு, பரவுணர்வில் எழும் ஞானமே முழுமையுடன் பொலியும் ஞானமாகத்திகழ முடியுமென்பது ஞானிகள் உணர்த்துவது. 'கற்றதனால் ஆய பயனும், தூய்மையான அறிவின னை பரம்பொருளைத் தொழுவதே! என்று வள்ளுவர் ஞானஉரை அருளுவார். மேலுமவர் பொருள் அல்லாதவற்றை 'பொருள்' என்று உணரும் 'மருள் ஞானத்தை' விடுத்து, 'மெய்ப் பொருள்' கா ணும் அறிவே தெருள் ஞானம் என்றும் மெய்ம்மையுரை அருள்வார்; இகத்தே நாமெல்லாம் பரத்தைப் பெற்று உய்விக்க அவதரித்தவர் களே வள்ளுவர் – வள்ளலார் போன்ற அருளாளர்கள்! எனவே 'சிறப்பு' என்னும் 'செம்பொருள்' காட்சி அறிவினைக் கொண்ட ஞானிகளே உலகியல் – உயிரியல் பற்றிய பூரண ஞானம் கொண்டவர் கள் என்னலாம். வெறும் 'பகுத்தறிவும்' 'விஞ்ஞான அறிவும்' "முழுமை" நலங்கொண்ட அறிவாய்த் திகழ முடிவதில்லை. இன்றைய விஞ்ஞானிகளும், சமுதாயச் சிந்தனையாளர்களும் தத்தம் போக்கில் போய் திசை தெரியாது, திரும்பி வந்து இன்று கண்டு தெளிந்து வரும் பாடம் இது!

இந்த நாட்டின் ஞானிகள் மனிதனை 'ஆன்ம சொரூபி'யாகக் கண்டார்கள். ஆன்ம இயல்பில் இச்சை–கிரியை–ஞானம் (உணர்வு விருப்பம்–செயல்–அறிவு) ஆகிய சிறப்புமிக்க விதிகளும் இயங்குவதற் கான பெற்றியினைக் கண்டார்கள். ஆனால் மார்க்சிசம் இந்த ஆன்ம மேம்பாட்டு இயல்புகளை சரிவர மதிப்பிடத் தவறுவது இயல்பே.

பிளேட்டோ-அரிஸ்டோட்டிலிருந்து, காப்ஸ்-ரூஸ்ஸோ வரை உள்ளவர்களும் பின்பு லாக்-மில் போன்ற அரசியல் சமுதாய சிந்தனையாளர்களும் மனித இயல்பை ஓரளவு கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார்கள். மார்க்சும் தொடக்கத்தில் தமது தத்துவக் கட்டுரைகளில் மனித இயல்புகள் குறித்து ஆராய்ந்திருந்த போதிலும், சித்தாந்த-மார்க்சிசமாகத் தமது கொள்கை உருவாகும்போது, அதிலிருந்து நழுவி விடுகின்றார். எந்திரப் புரட்சி தோற்றுவித்திருந்த சமுதாயச் சூழ்நிலைகளில் எழுந்த இவர் தம் சடவாதம் மனிதனை வெறும் பூதபௌதீகச் சேர்க்கையின் விளைவால் உருக்கொண்ட உடல்தான்! – என்றே கருதுகிறது. ஓரளவு மனிதனின் எண்ணம், இச்சை ஆகிய பண்பு நலன்களை அங்கீகரித்த போதிலும், நித்தியமான அழிவற்ற 'சன்மார்க்க சொரூபி' யென்ற கொள்கையில் வேரூன்றாத காரணத்தால், இயற்கைப் பௌதீக விதிகளை ஆராய்வது போல, மனித சமுதாய வளர்ச்சியினை ஆளும் விதிகளையும் ஆராய்வதே மிக முற்போக்கான விஞ்ஞானக் கண்ணோட்டம் என்று முடிவு கட்டத்துடிக்கின்றார். டார்வின் போன்ற விஞ்ஞானிகள் புற ஆதாரங்களைக் கொண்டு நிலைநாட்ட வந்ததும் சோவியத்து நாட்டு உயிரியல் விஞ்ஞானி ஓபரின் நிலைநாட்ட முன்வந்ததும், அக இயல்பின் சிறப்பினை வெளிப்படுத்தும் முயற்சியாக உயரவில்லை. புறவியலை வலியுறுத்தும் நவீனச் சிந்தனையாளர்களும் ஏனைய துறை விஞ்ஞானிகளும், புற ஆதாரங்களையே ஆராய்வதைக் கொண்டு அகவாழ்வின் சிறப்பினைக் காணமுடியாது அவதியுறுகின்றனர்!

இயற்கைப் பௌதீக இயக்க விதியினின்று, உயிரின வளர்ச்சிப் போக்கு பெருமளவு மாறுபட்டு உயர்வது. உயிரினங்களின் வளர்ச்சிப் போக்கில் விலங்கு இயலிலிருந்து மானிட இயல்பு பெற்றுச் சமுதாயமாக பல உருமாற்றங்களுக்குப்பின், வளரும் போக்கு பெரிதும் மாறுபட்டது! இயற்கை தந்த கருவி கரணங்களைக் கொண்டு, சமுதாய நிலைமைகளில் இலௌகீக வாய்ப்பு வசதிகளைத் துய்க்கும் முயற்சியோடு நின்று விடுவதல்ல, கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின் இயல்பு! அன்பு, ஈகை, காதல், பண்பு, ஒழுக்கம், தியாகம், அருள் ஆகிய குணநலங்களால் சிறந்தொளிரும் மானிட இயல்பில் ஆன்மீயத் தன்மை வேரோடியுள்ளது புலனாகவே செய்யும்! மனித சமுதாயமே ஆன்மீய மதிப்பீட்டில் சிறந்தோங்கும் பெற்றியினுக்காக அவதரித்ததல்லவா? ஒரு குறிப்பிட்ட வரலாற்றின் சமுதாயச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட பொருளியல் இயக்க விதிப் போக்கில், எதிர் காலத்திய வாழ்வின் போக்கையே ஒரு நிர்ணயமான முடிவில் (Economic Determinism) நடைபெறுவதற்கு உள்ள ஒன்றாக சித்தரிக்கும் சமுதாய விஞ்ஞானம் மனித மேம்பாட்டுக்கும், மேதைமைக்கும் ஆக்கம் தருவதாயில்லை. சடவிதி (பொருளியல் விதி) வசத்திலேயே – புறநிலை

யிலேயே நின்று சிந்தித்தார் கார்ல் மார்க்சு. எல்லையற்ற அளப்பரும் ஆன்மிய மேம்பாட்டினை அடைய வேண்டிய மனிதனை குறுகிய கட்டுப்பாட்டினையும் எல்லையையும் கொண்டுள்ள வெறும் சடவிதிகளுக்கு ஆட்படுத்துவதும், உட்படுத்துவதும் சிறந்த இலட்சிய சித்தியாக வர்ணிப்பது தெளிந்த ஒன்றல்ல!

காந்தியடிகளோ மனிதனின் அகவாழ்வின் நெறியில் நின்று இன்றைய கால கதியிலிருந்து விலகி நின்றும் சுதந்திரமாகச் சிந்திக்க முடிந்தவர். வரலாற்றின் இன்றைய தாறுமாறான போக்கில் போய், விஞ்ஞான வளர்ச்சியின் பேரால் கட்டினை மிஞ்சிய கபோதி சக்தியை (Elemental Force) அவிழ்த்துவிட்டு, அதற்கு ஆட்பட்டு, அதற்குள் அகப்பட்டுக் கொண்டு, அவதியுறும் பரிதாப நிலைக்குத் தரங்குறைந்து விடாமல், இந்த சடவிதியினின்றும் விடுபட்டு சிந்தனைத் தெளிவும், செயல் திறனும் கொண்டு அழிவுறாத ஆன்மிய ஆற்றலில் நிலை கொண்டு, தாமே விதித்துக் கொள்ளும் சமுதாய விதியைத் தோற்றுவித்துக் கொள்ளவே காந்தியடிகள் வழிகாட்டினார். மார்க்சு புற சக்திகளை அவை தோன்றியுள்ள நிலைமைகளை அப்படியே அங்கீகரித்து, அவற்றை இயக்கி அதிலேயே இலட்சிய சித்தியெல்லாம் வளம் பெறுதாகவும் கண்டு, அந்த முறையிலேயே சிந்தித்து, தமது உழைப்பையும் சிந்தனையையும் நல்கினார். காந்தியடிகள் அகவாழ்வின் விதிகளில் ஊக்கம் காட்டி, புறச்சக்திகளை அகவாழ்வின் சிறப்புக்கேற்ப அதன் கட்டுக்குள் கொண்டுவந்து மனிதனின் ஆன்மீய மதிப்பீட்டை நிலை நாட்டினார். 'இனி யொருவிதி செய்வோம்!' என்று பாரதி ஊட்டும் போதமும், 'வினைத் திட்பம் என்பது ஒருவனது மனத் திட்பம்!' 'திண்ணியராக விருந்தால், எண்ணியாங்கு எய்துப!'— என்ற வள்ளுவர் காட்டும் வாய்மை நெறியும், மனிதனின் சிறப்புமிக்க ஆற்றலைத் தெளிவு படுத்தும். மனிதனுக்குத் தேவையான சமுதாய—பொருளியல் விதிகளைத் தோற்றுவித்துக் கொள்வதும், அவற்றைத் தமது கட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்வதும், ஆன்மீய நோக்கச் சிறப்பினுக்காகவே அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதும் மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல. மார்க்சிச சிந்தனையாளர் இதனை அங்கீகரிப்பது போல மார்க்சிய சிந்தனையும் நமக்குத் தேவையான அமைப்பையே காண்பதற்கான ஒரு கொள்கை யென்று கூறிக் கொண்டபோதிலும், அடிப்படை யாது என்பதிலும், அதன் நோக்கத்திலும் பெருமளவுக்கு வேறுபாட்டினைக் காண்கின்றோம். மனிதனுக்குள்ள இச்சை, செயலாற்றல் ஆகியவற்றை ஞானத்திற்கு உட்படுத்திப் (Free will) பெறும் சுதந்திரம் இருக்கவே செய்கின்றது — இருக்க வேண்டியதே. தம்மிடமுள்ள ஆற்றலை உணரச் செய்யும் கடமையே என்றென்றும் தேவைப்படும் கடமையாகும்! இதனை விடுத்து, புறச் சக்தியையே பெரிதும் நம்பி, அந்த வழியை அது கட்டுப்பாடற்ற நிலை

யில் வளர்ந்துள்ள நிலைமைகளிலேயே ஏற்றுக்கொண்டு, அதற்கே ஆட்பட்டு குற்றேவல் செய்வதல்ல நமக்குள்ள தனிச்சிறப்பு! ஆனால் இந்த விஞ்ஞான எந்திர சலசலப்பில் மதிமயங்கிச் செயல் குன்றி விடாது,

'துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி
இன்பம் பயக்கும் வினை!'' — என்றபடி நின்று வழிகாட்டிய மேதையே காந்தியடிகள்!

எந்திரப் பொருள் உற்பத்திமுறை மனித சமுதாயத்தில் தோன்றியது இரண்டு நூற்றாண்டு காலத்திய நிகழ்ச்சி. இதன் தோற்றமும் வளர்ச்சியும் உணர்ந்து திட்டமிட்டு மனித சமுதாய ஆக்கத்திற்காகச் செய்து கொண்ட ஒரு ஏற்பாடு அல்ல! தான்தோன்றி அராசகப் போக்கில் – வெண்கலக் கடையில் யானை புகுந்தாற் போல புகுந்ததே இது! தனிப்பட்ட சிலரின் பேராசை ஆணவம், பொருள் உற்பத்தி, அதனால் கிடைக்கும் ஆதிக்கம், – இந்தக் கருத்துடன் கூடிய 'ஆரா இயற்கை அவா' வினுக்குப் புறச் சின்னமாகிய எந்திர உற்பத்திமுறை புகுந்து சமுதாயத்தையும் தனி மனிதனையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியது! இந்த உற்பத்திமுறை புகுத்தப்பட்டு வளர்ந்த நிலைமைகளில் முதலாளி – பாட்டாளி, இதற்கு ஒப்ப அதிகார வர்க்கம் – சட்ட திட்டம் – அதற்குத் துணைநிற்கும் போலீஸ், இராணுவம் – இத்தியாதி சமுதாய சக்திகள் தோன்றுவதும், தோன்றி மோதிக் கொள்வதும் தவிர்க்க முடியாததாயிற்று. இந்த வளர்ச்சிப் போக்கை அப்படியே எடுத்துக் கொண்டு, இந்த வர்க்கப் பிரிவினையின் அடிப்படையில் எழும் வர்க்கப் போராட்டத்தை ஊக்குவித்து, பாட்டாளி வர்க்க ஆட்சியைக் குறிக்கும் 'சமதர்ம பொதுவுடைமை' அமைப்பை உருவாக்குவதே இயல்பான சமுதாய முன்னேற்றம் என்று மார்க்சும் அவரது சித்தாந்த வழித் தோன்றல்களும் தீர்மானமாக முடிவுக்கு வந்ததே உலகெங்கும் கருத்தோட்டத் துறையிலும், சமுதாய வளர்ச்சிப் போக்கிலும் பெரும் நெருக்கடிக்குக் காரணம்!

வர்க்கப் போராட்டத்திற்குத் தொழிற் சங்கம் தேவை. 'தொழிற் சங்கம் பொதுவுடைமைப் பயிற்சிப் பள்ளி' (Trade unions are Schools of communism.) என்பார் லெனின். ஐரோப்பா முழுவதும் முதலாளித்துவ சமுதாயத்தின் மிகவும் நெருக்கடியான கட்டம்! போராட்டமும் கொந்தளிப்புமாக வெடித்துக் கொண்டிருந்த காலம்! மார்க்சு இந்த இக்கட்டான நிலைமைகளைக் கண்ணுற்றவர். 'பொதுவுடைமை பூதம் ஐரோப்பாவை பிடித்து வருகின்றது! (The Spectre the The Spectre of Communism is haunting over Europe!)-என்று ஒரு நூற்றாண்டுக்கு முன் மார்க்சு வெளியிட்ட 'பொதுவுடைமை வாதியின்

அறிக்கை' (Communist Manifesto – Karl Marx) தொடங்கும். அந்த விதம் தொடங்கும் மார்க்சு மிகவும் உற்சாக மேலீட்டால் அதனை ஒரு வரப் பிரசாதமாகவே கருதி வரவேற்றார். வரலாற்றில் ஒரு புதிய 'அத்தியாயத்தை'த் தொடங்கி வைத்த பெருமையுடனேயே அந்த அறிக்கையை 'சர்வதேச தொழிலாளர்கள் மாநாட்டில்' வெளியிட்டார்! வரலாற்றின் இத்தகைய பிரசவ வேதனையான தருணத்தில், 'புரட்சி' நடவடிக்கையானது, மருத்துவச்சி செய்யும் பணிக்கு ஒப்பாகும் என்பது மார்க்சின் கருத்து. மார்க்சு வாழ்ந்த காலமும் நெருக்கடி சூழ்நிலையும் ஒரு பாட்டாளி வர்க்கத் தலைவனை அந்த வழியில்தான் சிந்திக்கத் தூண்டி யிருக்க முடியும். தம்மைச் சூழ்ந்து சுற்றி வளர்ந்து விட்ட, வெடித்துக் கொண்டுள்ள நிலைமைகளை விட்டுவிட்டு, வேறுவிதம் நிதானத்தோடு பார்க்கும் அவகாசம் அவருக்கு இல்லை என்பதுவும் உண்மையே! ஆனால் அவரைப் பின்பற்றும் சீடர்கள் அவர் காலத்தில் காணப்பட்ட 'பிரசவ வேதனையை'ச் செயற்கையாக உண்டு பண்ணவும் புரட்சிகரமான 'மருத்துவச்சி' பணி புரியவுமே ஆவல் காட்டி வந்துள்ளனர். 1949ல் இரணதேவ் தலைமையின் கீழ் அணிதிரண்ட பொதுவுடைமை இயக்கத்தினர் இந்திய மண்ணில் செயற்கையான புரட்சியைக் காணத் துடித்தனர். அதன் விளைவாக நாட்டிலும் கட்சியிலும் ஏற்பட்ட கொடுமையும் பலியும் அரசாங்கம் மேற்கொண்ட எதிர் நடவடிக்கையும் நெஞ்சைக் கலக்கும்! இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தினரே தவற்றை பின்பு காலம் தாழ்ந்து – படுபயங்கர விளைவுகளுக்குப்பின் உணர்ந்து திருத்திக் கொண்டதையும் நாம் அறிவோம்.

மார்க்சைப் பின்பற்றி, ஜார் இரஷ்யாவை சோவியத்து குடியரசுகளின் கூட்டு இரஷ்யாவாக மாற்றிய தலைவர் லெனின் வெளியிட்ட கருத்து மணிகள் மார்க்சிசப் பார்வை எந்தத் திசையில் சிந்தித்து இயங்கும் என்பதைப் புலப்படுத்தும்.

“முதலாளித்துவம் விட்டுச் சென்ற கலாச்சாரங்களை யெல்லாம் நாம் எடுத்து சோஷலிஸத்தைக் கட்டி வளர்க்க வேண்டும். அதன் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவாற்றல்கள், கலைகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும்” – (ஜனசக்தி வார மலர். 19–5–63) எனவே மார்க்சிசம் காணும் புதிய அமைப்பு முதலாளித்துவ அமைப்பினின்று எழும் ஒரு இயல்பான வளர்ச்சியாகவே லெனினுக்கும் மற்ற பொதுவுடைமை அறிஞர்களுக்கும் தோன்றியது. இதுவே மார்க்சிச விஞ்ஞான வரையறை. இதனை ஒரு புத்தம் புதிய பாதை யென்று சொல்லிவிட முடியுமா?

லெனினுடைய விஞ்ஞானப் பார்வை மேலும் அறிவுறுத்தும்; “முதலாளித்துவத்திலிருந்து நேரடியாக சோஷலிஸத்திற்கு மட்டுமே

மனித வர்க்கம் கடந்து செல்ல முடியும். நமது கட்சி மேலும் தீர்க்க தரிசனமாகப் பார்க்கிறது. சோஷலிஸம் தவிர்க்க முடியாத வகையில் படிப்படியாகக் கம்யூனிஸத்திற்கும் செல்ல வேண்டும். –" (ஜனசக்தி வாரமலர் 19–5–63)

எனவே முதலாளித்துவப் பொருள் உற்பத்திமுறையை – அதன் கலாச்சாரம், அறிவுத் துறைகள் யாவற்றையும் அப்படியே எடுத்துக் கொண்டு, சமதர்மம், அதிலிருந்து வளரும் பொதுவுடைமை உற்பத்தி முறையாக மாற்றிவிட்டால், முன்னேற்றத்திற்கான தெளிவான அடிப்படை கிடைத்து விட்டதாகவும், விஞ்ஞானக் கண்கொண்டு நோக்கினுல் அதுவே நிச்சயமான முன்னேற்றம் என்றும், சமுதாயத்தில் தோன்றியுள்ள கொடுமைகளையும் அநீதிகளையும் என்றென்றைக்குமாக ஒழிப்பதற்கான நிலைமையும் அதுவே என்றும் மார்க்சிசம் கருதும்.

ஆனுல் முதலாளித்துவ சமுதாயத்தில் மாத்திரமல்ல, சமதர்ம – பொதுவுடைமை சமுதாயத்திலும் கூட பயன்படுத்தக் கூடிய ஆசைக் கிளர்ச்சியின் புறச்சின்னமான உற்பத்தி முறைக்கான எந்திர சாதனமும் இன்னும் விஞ்ஞான முன்னேற்றமாகக் கருதி வளர்க்கப்பட்டு கையாளப்பட யிருக்கும் மிக மிக நூதனமான எந்திர சாதனங்களும் கொண்டிருக்கும் விளைவுகளும் பலா பலன்களும் சமுதாயத்திற்கு நீடித்த ஆக்கம் தரக்கூடிய ஒன்றல்ல. இன்றுள்ள உறவுகளிலுள்ள சீர்கேட்டுக்கு மாத்திரமல்ல, இனிவரப் போகும் மிக மிக ஆபத்தான உறவு முறைச் சீர்குலைவுகளுக்கும், எந்திர அமைப்பு முறையே காரணமாகவும் அமையப் போகிறதென்ற சிந்தனை சிறிதும் மார்க்சுக்கும் அவரது சீடகோடிகளுக்கும் உதயமாகவே இல்லை!

இத்துடன், இன்னும் உலகெங்கிலும் உள்ள பல சமுதாயச் சிந்தனையாளர்களும் ஜனநாயகவாதிகளும் கூட எந்திர நாகரிகம் கொண்டுள்ள சமுதாயப்பின் விளைவுகளைக் குறித்துப் போதிய கவனம் செலுத்தாமல் இன்று வளர்ந்துள்ள நிலைமைகளை அப்படியே அங்கீகரித்து, அந்த முறையிலேயே முன்னேற்றம் இருப்பதாக நம்பி, எந்திரப் பொருள் உற்பத்தி முறையை முதலாளித்துவ நோக்கத்திற்கென்ருே அல்லது சமுதாயப் பொது முன்னேற்றத்திற்கென்ருே எண்ணி, மேலும் மேலும் முடுக்கிவிட்டு சட சக்தி விதிவசத்தவராய் – அப்பாவிகளாய் மாறிக் கொண்டுள்ளனரேயன்றி, தாங்கள் போற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் இலட்சிய வழியில் சிந்திக்க இயலாதவர்களாய் காட்டிக் கொண்டுள்ளனர்! இதில் முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஜனநாயக – சமதர்ம வாதிகளுக்கும், பொதுவுடைமை நாடுகளிலுள்ள மார்க்சிச வாதிகளுக்கும் எந்திரக் கிறுக்கை அங்கீகரிப்பதில்

அவ்வளவாக வேறுபாடு இல்லை என்னலாம்! இரு தரத்தாரும் முந்தியும் பிந்தியும் சென்ற போதிலும் ஒரே பாதையில்தான் நடை போடுகிறார்கள். அவர்களுக்குள் பெரும் வேறுபாடு அடிப்படையில் இருப்பதாக காந்திப சிந்தனையாளர்களுக்குத் தோன்றுவதில்லை!

ஐரோப்பாவிலும் சரி, புத்தெழுச்சி கொண்டு விடுதலையடைந்துள்ள ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளிலும் சரி, அறிவோடு கூடிய சமுதாயப் பொருளியல் முறை உருவாகி வருவதாக எந்தவழியில் சிந்திக்கும் அறிஞனும் சொல்ல முடியாது! இன்று உலகின் எந்த நாட்டினை எடுத்துக் கொண்டாலும் மனிதனின் கட்டுக்கு உட்பட்ட பொருளாதார சமூக இயல் நடைபெறுவதாகச் சொல்லவும் முடியாது. "இன்று உலகின் நாடுகளில் எதுவும் பூரண சுதந்திர நாடாக இல்லை என்று பன்முறை நான் கூறியிருக்கின்றேன். ஏனெனில் அவைகளுக்குத் திட்டமிட்டு வேலைசெய்ய அதிகாரமில்லை. தமது நாட்டுத் திட்டங்களை வேறு தேசத்தினர் வகுக்கின்றனர். ஒவ்வொரு நாட்டுத் திட்டங்களும் தம் நாட்டின் விரோதிகளிடமுள்ள பயம் காரணமாகச் செய்யப்படுகின்றன" என்பது விநோபா அடிகளின் கணிப்பு. என்ன? நாம் திட்டமிட்டுத்தானே முன்னேறி வருகிறோம் என்று சொல்லத் தோன்றலாம்! ஆனால் இன்று உலகின் பல பகுதிகளிலும், திட்டமிடப்பட்டு பொருளாதாரம் உருவாவதாகச் சொல்லிக் கொள்ளும் நாடுகளிலும், மனிதனின் கட்டுக்குள் நிலவும் அமைப்பு உருவாகியுள்ளதாகவோ – உருவாகி வருவதாகவோ சொல்ல முடியாது. ஏனெனில் நமது 'திட்டங்களை'யும், குறிக் கோளையும்' மீறிக் கொண்டு திட்டமற்ற, தான்தோன்றி அராஜகப் போக்கு பீறிட்டு எழுவதும், மனிதன் செய்வதறியாது திகைப்புடனும் புதுவகையான அறியாமையுடனும், ஒருவருக் கொருவர் பய உணர்ச்சியுடனும் 'ஏதோ ஒருவித' முன்னேற்றத்தில் சென்று கொண்டிருக்கின்றான் என்றுதான் வர்ணிக்க வேண்டும்! இன்று நாடுகளின் திட்டங்களும் போக்கும், மக்களைத் தம் வசத்தவராய் நின்றொழுகவிடாது, எந்திர வளர்ச்சி காட்டும் விதி வசத்தில் ஒப்படைத்து, வேகமான சுழற்சி விதியில் மக்களை ஆட்படுத்தி, நிலைத் தோங்கி நிற்கும் அமைப்பு முறைக்கான ஆதார அடிப்படைகளை நொறுக்கிவிட்டு, செயற்கையான கால கதியில் மக்களை நிர்ப்பந்தமாகப் பிணைத்து, அதன் போக்கில் தள்ளியுள்ளன என்றே கூறவேண்டும்!

இந்தத் தவறுடைய சுழற்சி விதியிலிருந்து விலகி, சுதந்திரமாகப் பார்க்கக்கூடிய சிந்தனையாளர்களும், அறிஞர்களும் இன்றும் அருகியுள்ளார்களென்றே சொல்ல வேண்டும். மார்க்சிச சிந்தனையாளர்களும், ஏனைய அரசியல் – சமுதாயச் சிந்தனையாளர்களும், விஞ்ஞானிகளும் கூட இந்தக் காலகதியில் மக்களை அடித்து இழுத்துச் செல்ல

வழி கோலினவர்களாய் நிரூபித்துக் கொண்டுள்ளார்களேயன்றி, மனித நாகரிகம் நிலையான அடிப்படையில் உருக்கொள்ள வழிகாட்டின வர்கள் ஆகவில்லை. காரணம் – காலச் சக்கரத்தின் சுழற்சியிலிருந்து மீள முடியாது, அதன் போக்கிலேயே சிந்திக்கவும் செயல் புரியவுமே பழக்கப்பட்டுள்ளனர். தவறிலிருந்து எழுந்து, தவறுடைய வழியி லேயே வெகுதூரம் மனிதன் சென்று விட்டான்! பெருங் குடிகாரன் தான் குடிப்பது அறியாமை என்பதை உணர முடியாமல் இருக்கிறு னல்லவா? இவ்வளவு தூரம் நடந்துவிட்ட முயற்சியை – அது தவற் றின் வழியிலேயே எழுந்த தாயினும், விட்டு விட மனிதன் துணிவு கொள்வதில்லை. அதுவே 'சர்வ நிச்சயமான முன்னேற்றம்' என்ற கல்வியிலும் உபதேசத்திலும் பிரச்சார முழக்கத்திலும் தன்காதை யும் செவிடாக்கிக் கொண்டான். இன்றைய யுக மனிதன் இந்தப் போக்கிலிருந்து விலகிச் சிந்திப்பதும், வேறு வழியில் மனித முன் னேற்றம் இருக்கக்கூடும் என்று நம்புவதிலும் பழக்கம் குறைந்து விட் டதால் – தன்னுணர்வு அற்று – அதன் போக்கில் தன்னை அடித்துச் செல்லவிட்டு விட்டான்! நமது முன்னேற்றத்தைக் குறிக்கும் சாத னைகள் – அறிவு ஆராய்ச்சித் துறைகள் – வாழ்க்கை வசதிகள் – உரி மைகள் – இவைகளெல்லாம் இந்தப் போக்கின் விதிவசத்தில் வளர்ந் தெழுந்தவையே! நமது அரசியல் – சமுதாயப் பொருளாதார விஞ்ஞா னத் துறைகள் அனைத்தையும் இந்தவழியிலேயே விமர்சிக்க முன் வந்தால், அவற்றின் பலவீனத்தை, பிற்போக்கை சமூக விரோதப் போக்கை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்! அப்படியல்லாமல் 'முன் னேற்றத்தை' அதன் சடவிதிப் போக்கிலேயே காண நினைப்பது 'பரி தாபகரமான தற்கொலை' முடிவாகவே யிருக்கும்! இதில் சந்தேக மில்லை! இந்த வழியில் செல்லும் விஞ்ஞான சாதனையும் விஞ்ஞான மாக யிருப்பதில்லை. அஞ்ஞானத்திற்கும் – அறிவு சூன்யத்திற்குமே உறுதி செய்வதாயிருக்கும்!

சமுதாயப் பொருளாதார விதிகள் பண்பாட்டு வழியில் உருவாகி மானிட சமுதாயத்தின் நோக்கத்திற்குக் கட்டுப்பட்ட ஒன்றாக வள முற்றிருக்குமானுல், மனிதன் உண்மையான சுதந்திரத்தையும், ஜன நாயகத்தையும் அனுபவிக்கக் கூடியவனுகவும் பண்பில் உயர்ந்தவ னுகவும் மனிதப் பிறவியின் விழுமிய பேற்றை இகத்தே அடையப் பெற்றவனும் – உயரிய இலட்சிய சித்தியைப் பெற்றவனும் பரிண மித்து 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனுயிருக்கக் கூடும்! சிறப் புடைய மரபு, அறத்து வழியில் பொருளையும் இன்பத்தையும் நெறிப் படுத்தி வளரும் என்பது பண்டைப் பண்பாட்டுச் சமுதாயம் காட்டும்!

இவ்வளவு 'விஞ்ஞான வளர்ச்சியின் விளைவிலும், அறியாமையும் – பிற்போக்கும் – பயமும் – பேராசையும் – சுய நலமும் – பித்தலாட்ட

மும் - மனிதனை அழித்தொழித்துக் கொள்ளும் சாதனைகளும் - இந்த 'சர்வநாச அழிவிலிருந்தும் தப்பித்துக்கொள்ள வகையறியாது பேத லித்து நிலை குலைந்து நிற்பதுமான மானக் கேட்டையும் கண்டு வந்தோம்!

அரும் பெரும் சாதனைகளைச் சாதித்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளும் இன்றைய அணுயுக மனிதன் தன்னை உணர முடியாது பொறி புலன்களில் தனது ஆட்சியுமில்லாது, தனது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்திற்காக வன்றி, நோக்கமற்ற வீண் தேவைகளையும் - பொருள் உற்பத்தியின் உச்சத்தை எட்டிப் பிடிக்கவும் வேண்டி - தன் வசத்தில் இயங்காது 'ஆரா இயற்கை அவா'வின் விதி வசத்தில் தன் தலைவிதியை முடிச்சுப் போட்டுக் கொண்டு, அதிலிருந்து தப்பி வெளியேற வகையறியாது, விஞ்ஞானத்தின் பேரால் அஞ்ஞான இருளில் தட்டுத் தடுமாறித் திசை தவறிக் கெட்டு படுபாதாளத்தை நோக்கிச் செல்வதும் இன்றைய அவலநிலை!

இரண்டு உலகளாவிய போர்களும் மனிதனை மிஞ்சி, மனித இனத் தின்மீது அவிழ்த்து விடப்பட்டவைகளே. மூன்றுவது உலகப்போர் வந்துவிடுமோ அதனைத் தவிர்க்கத்தான் கூடுமோ என்று மலைத்துத் தான் செய்வதறியாது மயங்கித் தியங்குகின்ருன் மனிதன். இதனுல் நிகழவிருக்கும் பேரழிவினை உணர்ந்தும், உணராது வெறும் வீராப்பும் வரட்டுச் ஜம்பமும் வாய் வீச்சும் பேசிவந்தான் 'அரசியல் பேரறி ஞன்!' 'அமெரிக்கா பேரழிவு ஆயுதப் பரிசோதனை செய்தது என்ற காரணத்தால், சோவியத்து நாடும் அதனைவிட எந்த வகையிலும் குறைந்து விடவில்லை என்பதைக் காட்டிக் கொண்டிருந்துள்ளது! எனவே நம்மை ஆள்வது மனித சக்திக்கு உட்பட்ட விதியல்ல, குருட் டுத் தனமான சடவிதியே கோலோச்சும் என்ற நிலைமையைக் கண்டு வந்தோம். நமது காரியங்களின் செயல்களின் பின் விளைவுகள்-ஆபத்துக்கள் குறித்து உணர்ந்து செயலாற்ற முடியாது வெறும் சட விதிகளின் போக்கில் மனிதனின் தலை விதியை பிணைத்து விட்டுள் ளான் இன்றைய விஞ்ஞானத்தின் துணைகொண்டு அரசோச்சும் 'அரசியல் மேதை!'

பொருளாதார - சமுதாய விதிகளைத் தனது கட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளதாகவும் திட்டமிடப்பட்ட வழியில் வளர்வதாயும் சொல்லிக் கொண்ட 'மக்கள் சீனம்' உலக அமைதிப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பாரதத்தின்மீது இமாலய எல்லைப் பகுதிகளில் பெரும் போரைத் தொடுத்து, பல இலட்சக் கணக்கான வீரர்களைக் காவு கொண்டு, காவு கொடுத்து, மீண்டும் மீண்டும் போர்க்கால நெருக்கடியில் பாரதத்தைத் தள்ளி வருகின்றது.

நடுநிலை நாடுகளின் விவேகமான யோசனையையும் புரிந்துகொள்ள வில்லை. தனது சித்தாந்தத் தந்தையர் நாடான சோவியத்து நாட்டின் ஆலோசனைகளையும் புரிந்து கொள்ளாது, அதன் மீதும் தனது வெறிப் போக்கைக் காட்டிக் கொண்டது. இந்தப் போரில் உள்ள நியாய – அநியாயத்தை ஒரு நேருவோ, கிருபாளினியோ பேச வேண்டிய அவசியமில்லாது இந்தியப் பொதுவுடைமைத் தலைவர் டாங்கேயே எடுத்துப் பேசவும் நேர்ந்தது! இன்னும் உலகின் பல நாட்டுப் பொதுவுடைமை இயக்கமும் சீனத்தின் ஆதிக்க வெறிக் கொள்கையைத் தாக்க நேர்ந்தது. சீனத்தின் ஆதிக்க நோக்கம் பற்றிய கொள்கையில் பொதுவுடைமை அணி முழுவதிலுமேயே பெரும் வெடிப்பு ஏற்பட்டு விட்டது. எனவே சீனத்தைக் கண்டிக்கும் டாங்கே ஒரு 'மிதவாதி' ஆகிவிட்டார்! சோவியத்து ரஷ்யாவின் தலைமையில் பல பொதுவுடைமை நாடுகளும் 'மிதவாத' நோயினுக்கு ஆட்பட்டுள்ளன!

அண்மைக் காலங்களில் சீன நாட்டில் ஏற்பட்டு வரும் நிகழ்ச்சி களின் போக்கு சீனம் ஒரு நிலையான அடித்தளத்தில் எழுந்துள்ள அமைப்பினைப் பெற்றிருக்கவில்லை, அந்த நாட்டின் அடிப்படையில் கோளாறு இருக்கின்றது: தன்னைத் தானே அழித்துக் கொள்ளவும் கூடும் என்ற அபாயத்தினை எட்டியுள்ளது! தொல்புகழ் மணங் கொண்ட சீனத்தின் பண்பாட்டுச் சின்னங்களையும் வரலாற்று நினை வுகளையும் 'கலாச்சாரப் புரட்சி'யின் பேரால் அழித்தொழிக்க முனைந் துள்ளனர். 'சியாங்கே சேக்'குக்கும் அமெரிக்க ஆதிக்கத்திற்கும் எதிராக வளர்க்கப்பட்டு வந்த 'போர் உணர்வு' முடிவில் தன்னைத் தானே அழித்துக்கொண்ட 'பத்மா சூரன்' கதையை நினைவுக்குக் கொண்டு வரும்! இங்கும் நாம் வலியுறுத்தி உணர்த்த எண்ணுவது நம்மையும் மிஞ்சி ஆளும் விதி மனிதவிதியல்ல – கபோதித்தனமான சடவிதி தானே என்பது! மனித ஆற்றலை மடமையான வழியில் இயக்கிவிட்ட தற்செயல் விதியோத்த தல்லவா நாம் எங்கும் கண் ணுற்று வருவது?

நமது சமுதாயவிதிகளில் மனிதத் தன்மையில்லை; நம்மையும் மிஞ்சி கொடுங் கோன்மை ஆட்சி செய்கிறது. நமது பொருளியல் வாழ்வில் பண்பில்லை; பலவழியிலும் முறிவும் முரண்பாடும் மிகுந்து பகற் கொள்ளைக்கே வழிவிட்டுள்ளது. நமது அரசியல் ஜனநாயகத்தில் வேரோடி யிருப்பதாகச் சொல்லிக் கொண்டு, தண்ட நீதியில் உழலும் கேட்டினைக் கண்டு வருகின்றோம் நமது விஞ்ஞான முன்னேற்றமெல் லாம் மூடத்தனத்திற்கும் மீள முடியாத பேராபத்திற்கும் நம்மை சிறுமைப் படுத்தி – வெறும் சடவிதி வசத்தவராய் நம்மை மாற்றி – நமது செயல் திறனை யெல்லாம் கொன்று எந்திர அரக்கனின் கைப் பதுமைகளாக்குவதில் வந்து முடிந்துள்ளது!

சோவியத் விஞ்ஞானம் காட்டும் ஆன்மீயம்!

பைலோ இரஷ்ய – விஞ்ஞானக் கழகத்தின் தலைவர் வாஸிலி குப்ரேவிச் தமது 'பிரபஞ்சத்தில் உயிர்' என்னும் கட்டுரையில் விவரிப்பார்:

"சோவியத்து நாட்டின் விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவால், 'உயிரானது பிரபஞ்சத்தில் எங்கும் இருக்கிறது' என்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும். உயிரைச் சுமந்து செல்லும் 'வீடற்ற' நுண்ணங்கள் உலக வெளியில் இருக்க வேண்டுமென்று ஆகிறது. அவை அண்ட வெளியில் திரிந்து கொண்டு ஏதேனும் ஒரு கிரகத்திற் போய்க் குடியேறுவதற்குரிய அதிர்ஷ்ட வசமான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கும் மூளைகள் அல்லது வேறு உயிர்வடிவங்கள் ஆகும். இதைக் கவனிக்கும்போது உயிர் தோற்றத்தின் ஆரம்பக் கட்டங்களில் உயிர் வடிவங்கள் அண்ட வெளியிலிருந்து பூமிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கலாம் என்ற நிலைக்கு இடமளிக்கிறது.

எங்கும் உயிரணுக்கள் உள்ளன. எண்ணெயில், பெட்ரோலில், மிக ஆழமான கடலின் அடிமட்டத்தில், வெந்நீர் ஊற்றுக்களில் யுரேனியப் படிவத்தில், கந்தக அமிலக் கரைசலில் – இப்படி எங்கும் உயிரணுக்கள் உள்ளன. அப்படி யிருக்க மற்றக் கிரகங்களில் காணும் நிலைமைகளுக்கு ஏற்ப உயிர்வடிவங்கள் தங்களை மாற்றியமைத்துக் கொண்டு வாழக்கூடிய சாத்தியத்திற்கு நாம் ஏன் வரம்பு கட்ட வேண்டும்?" (ஜனசக்தி வாரமலர் 21—4—63)

இது ஆன்ம ஞானிகள் இந்த நாட்டில் தொன்று தொட்டு உணர்த்தி வந்த உண்மையை விஞ்ஞானச் சொற்றொடர்களால் சொல்வதாயிருக்கிறது. 'உயிர்த்தோற்றத்தின் ஆரம்பக் கட்டங்களில் உயிர் வடிவங்கள் அண்ட வெளியிலிருந்து பூமிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கலாம்'– என்ற கருத்து! உயிர் பௌதிக வளர்ச்சிப் பரிணாமத்தின் பயனாய்ப் பின்பு தோன்றியது என்ற கொள்கையை மறுப்பதாயும், பிரபஞ்ச வெளியில் எங்கும் சஞ்சாரம் செய்யும் உயிர்கள், வேறு எந்தக் கிரகங்களிலும் குடியேறும் சாத்தியம் கொண்டவை. இந்தக் கிரகத்திலும் குடியேறி, இந்தக் கிரகத்தில் காணும் நிலைமைகளுக்கு ஏற்ப வடிவங்கள் தாங்கி பரிணமிக்கத் தொடங்கின என்றும் வலியுறுத்தப்படுவதைக் காணலாம். எனவே இவ்வுலக பரிணாமத்திற்கு முன்னதாகவே உயிர்கள் இருந்திருக்க வேண்டும் என்பதாகிறது!

பாரத நாட்டின் மெய்யுணர்வு

இந்தப் பழம் பெருநாடோ மெய்ஞான உணர்வில் – பன்னெடு காலமாக சிறந்திருந்த காரணத்தால், 'உயிர்' – 'உலகம்' பற்றிய கொள்கையில் ஆழ்ந்து அகன்று சென்றுள்ளதைக் காண்கின்றோம்.

இந்நாட்டின் மெய்ஞ்ஞான உணர்வுக்கு முன்னோடியாய் அமைவது தென்னாட்டினர் வாழ்வில் சிறந்தொளிரும் 'சித்தர்கள் கொண்ட சித்தாந்த முடிவாகும்! பதியினைப் போல் பசு பாசம் அநாதி!'' என்பது திருமூலர் திருமந்திரம்! உயிரும், உலகமும், இவற்றின் தலைவனும் இறைவனுக்கொப்ப என்றும் நிலைத்துள்ளவை என்ற முடிவு மெய் யுணர்வுக் கலையில் புரட்சிகரமான அறிவிப்பாகும். ''மன்னுமா மகேந் திர மலையில் சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்'' என்றும், ''மா ஏடாகிய ஆகமம் வாங்கியும்,'' என்ற மணிவாசகர் கூற்று, நமது தொல்வரவாகிய (ஆகமம்) இறை-உயிர் – உலகு' என்ற முப்பொருள் பற்றிய ஞானத்தினை நல்கும்!

அநாதியான உயிர்கள் எண்ணிக்கையிலடங்கா. உயிர் (உய் – உய்வு – நிலை பெற்று வாழ்வது) உய்ந்து நிலை பெற்று – நித்தியமாய் ஒளிரும் பெற்றி கொண்டது. அது ஒருமை உணர்வில் சிறந்தொளிர வும் தன் முனைப்பில் – அகந்தையில் சிறுமைக்கும் இருளுக்கும் ஆட் படுவதுமாகும். உயிருக்கு இருளைக் கொண்டுதரும் அகந்தை–ஆணவம் எப்பொழுது தொடங்கியது? ஏன் வந்தது? – மெய்ஞ்ஞான வரலாற்றில் விடை காணமுடியாத புதிராகக் கருதப்படுபவை! சைவம் காட்டும் ஒரு விளக்கம் நுட்பமும் தெளிவும் நல்கும்.

தீபத்தில் இருள் ஒடுங்கிக் கிடக்கின்றது – 'மைப்பொதிந்த விளக்கு'–, கருமையும் இருந்து கொண்டேயிருக்கின்றது; கரிப் பிடித் துக் கொள்ளக் கூடும் – எந்த நேரத்திலும் இருள் வந்து கவ்விக் கொள் ளக் கூடும் – அதன் இயல்பில் கரிப்பிடிக்கும் நிலைமையும் உண்டு என்பது பெறப்படும்! இது உயிர்களின் நிலையினை விளக்கும். 'யான்– எனது' – என்னும் செருக்குக்கு தன் முனைப்புக்கு ஆட்படும் இயல் பினைக் கொண்டவை உயிர்கள். 'சார்தரு நோய்' என்றார் வள்ளுவர். தன்முனைப்பின் காரணமாக ஒளி யிழந்து, அறிவினை மறந்து, ஆற்றல் குன்றி, தன் நிலை மறந்து உயிர் அவதியுறும்.

ஆண்டவன் 'அம்மை அப்பர்' – 'தாயுமானவர்' – 'அன்பும் அறி வும்' சமமாகக் கொண்டவர்! (மாதொரு பாகன் – மங்கை பாகன் – உமை யொரு பாகன் – அர்த்த நாரீஸ்வரன் – சங்கர நாராயணர் – அரி அரன்!) 'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்! அறிவின் முழு மையாயும் ஒளிரும் ஆண்டவன் அன்பின் பிறப்பிடமுமாவான்! 'தென் பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான்!' ஒளி யிழந்து அவதியுறும் உயிரினுக்கு சிறிது ஒளியும் இயக்கமும் கொடுத்து, ஒளியும் அருளும் தெருளும் இன்பமுமான பெருவாழ் வினைக் குறிக்கும் 'தன்னடிப் பேற்றினை' – 'விட்டுப் பேற்றினை' – அருள ஆண்டவன் கருணை கொள்கின்றான்! அவன் 'இந்த நள்ளிருளில்' நட்டம் பயின்றாடும் நாதனல்லவா! தில்லையில் கூத்தன் ஆகின்றான்!

அண்ட வெளியில் 'நூற்றொரு கோடியில் மேற்பட விரிந்த' 'உண்டைப்' பிறக்கமாக - கோள்கள் - உலகங்கள் படைக்கப்படுகின்றன. உயிரினுக்கு அனுபவமே இந்த உலகங்கள். தானே ஒளியும் ஒப்பற்ற பெருவாழ்வும் பெற முடியாது 'இருளான மலத்தைத் தழுவிக் கொண்டுள்ள' – அதாவது 'சார்ந்ததன் வண்ணம் கொண்ட உயிர்களுக்கு வேண்டிய உடல்-உறுப்புக்கள் துய்ப்பினுக்குரிய போகப் பொருள் – இவற்றின் நிலைகளனை இந்த மண், விண், கோள்கள் இன்ன பிறவற்றை வள்ளன்மை மிக்க – அருள் கடலாம் இறைவன் வழங்குகின்றான். இந்த அறிவும் உணர்வும் கொண்ட உயிரினுக்குத் தான் இத்தனை கோடி படைப்புச் செயல்களும்! அவைதான் இவற்றை துய்த்து அனுபவிக்கக் கூடும். உயிரினைத் தவிர ஏனையவை யாவும் 'அறிவு – உணர்வு - செயல்' அற்ற 'வெறும் சடப்பொருளே! – 'நிலம் தீ நீர் வளி – விசும்போடைந்தும்' 'கலந்த மயக்கம் உலகம்' – என்பது தொல்காப்பியம். இந்த சடத் தோற்றங்களான உலகம் (உலவு – உலகு – உலகம்) (உருள்-உருட்டு-உண்டை)

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்

ஐம் பெரும் பூதத்தியற்கை சென்றளந்தறிந் தோர் போலவும், (–புறம்) 'பாரிடை யைந்தாயும், நீரிடை நான்காயும், தீயிடை மூன்றாயும், வளியிடை இரண்டாயும், வெளியிடை ஒன்றாயும்' திகழ்ந்து– அண்ட வெளியெல்லாம் உண்டை பிறக்க மாகி ஈற்பும் – பறிப்பும் கொண்ட உலகத் தோற்றமெல்லாம் அநாதியான 'மாயை' என்றும் ஒன்றிலிருந்து (மா+யா -மாய்வதும், ஆவதுமான–தோன்றி மறைவது Dynamic real) படைக்கப்பட்டன! 'தனக்குவமையில்லா–உலகத்திற்கெல்லாம் தலைவனாய் திகழும் இறைவன் தன்னிடமுள்ள அருள் சக்தி கொண்டு உயிரின் நோக்கத்திற்காக 'உலகெல்லாம்' படைக்கின்றான். 'இந்த பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு, என்பதும் அருள் மொழி வாசகம்.

உயிர் இருள் உலகிலிருந்து வெளியேற மாயையால் ஆன உடலினைப் பெற்றுத்தான் பிறப்பாகிய பெருங்கடலில் அடியெடுத்து வைக்கின்றது. இதனை 'மாயா தனு விளக்கு' என்றனர்! இருட்டிற்கு கைவிளக்கு போன்றது மாயையால் ஆன உடல்! உடல் (உடு – உடை உடல் – உடுத்திக் களையும் நிலையில் உள்ளது) என்ற சொல்லிலேயே மறுபிறப்பு – பிறப்பு வகையினைப் பற்றிய குறிப்புக் கிடைக்கும்.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு" – என்றும்,
"புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு" – என்றும் வள்ளுவர் குறளும் நிலையாமையை எடுத்தியம்பும். (Transmigration of soul) 'பிறப்பு வகை பேதைமை' உணர்வில் தோன்றுவதே! பல்வேறு உடல் பிறவிகளை விளக்க வந்ததே வினை – கன்மம் என்ற சட்டம்! வினையாகிய செயலில் வினையாகிய சட்டம் தோற்றம் கொண்டு வினைக்கீடான பிறவியைக் கொண்டு வந்து தருகின்றது.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே"

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"
"மக்கள் தாமே ஆறறி வுயிரே" எனவே பிறவி இவ்வாறு நெறிப்படுத்தும் படியாக 'நேரிதின் உணர்ந்தோர்' கண்டனர்!

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்தின்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் – எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன் –"
என்று தமது பிறப்பு வகையினைக் கூறுவதாக உயிரின பரிணாமத்தை விவரிப்பார் மணிவாசகர்!

புற ஆதாரங்களைக் கொண்டு ஆய்ந்தவர்களே விஞ்ஞான சிந்தனையாளர்கள். இவரும் அகக் காட்சி உண்மையை ஒப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். சோவியத்து விஞ்ஞானியும் ஆன்மீய உண்மை பற்றி பேசுவதை இனி கேட்கலாம். மெய்ஞானம் செழித்த நமது நாட்டில் பல்லாயிரமாண்டுக் காலமாகக் கொண்டிருந்த கொள்கைகள், இன்றைய விஞ்ஞானிகளின் ஆய்வுக்கும் ஓரளவு புலனாவதையும் இன்று கண்ணுற்று வருகின்றோம்.

இன்று இந்திய விஞ்ஞானிகள் "பொருள்கள் சேர்வதனால்தான் உயிர்த் தோற்றம் அமைந்தது என்பதல்ல, பொருள்களின் இயல்பிலேயே உயிரோட்டமான நிலையுண்டு என்பதாகக் கண்டனர். இது

விஞ்ஞானி போஸின் உயர்நிலை பற்றிய கொள்கையிலும் நுணுகிச் செல்வதாகக் கண்டனர். பாரதி சொன்னபடி 'விண் மட்டுமல்ல; 'இம் மண்ணும் தெய்வம்' என்ற போதம் அனைத்துயிரையும், அத்துடன் விண்ணையும் - மண்ணையும் ஒருமையுடன் அணைத்துக் கொள்வதான வேதாந்த நிலை!

உயிர் ஓம்பும் கொள்கை:

'உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்னும் தவத்தை மேற்கொள்வதும் - எல்லா உயிரும் தொழும்படியான அருள் நெறியை மேற்கொண்டு ஒழுகுவதும் - கொலை - புலை வழியை விடுத்து அன்பு-அறம்-அருள் நெறியில் நின்று வாழ்க்கையின் துறைகள் அனைத்திலும் அவற்றைக் கடைப்பிடித்தொழுக ஆவன செய்வதும், பிறவிப் பயனை உணர்வதற்கும் - பிறவிப் புதிரை விடுவிப்பதற்கும் உபாயமாகப் பயன்படும். இங்கு, தனி மனிதன் ஒருவன் அருள் நெறியில் உயர்வது அகிலமும் உயர்வதாகும். ஒருவனது வீழ்ச்சியில் அனைவரது வீழ்ச்சியும் அடங்கியிருப்பதென்றெல்லாம் கண்ட காந்தியடிகள் - வைய வாழ்வில் கடைப்பிடித்தொழுக வேண்டிய அருள் நெறியைத் திர்க்கமாக ஆராய்ந்தார்.

'நாமெல்லாம் விலங்கினமே - விலங்கிலிருந்தே மெதுவாக மனிதர்களாகப் பரிணமித்துள்ளோம் என்பதையும் நம்பத் தயாராகயிருக்கின்றேன்' 'மனிதன் மேல் நோக்கிச் செல்ல வேண்டும் அல்லது கீழ் நோக்கிச் செல்ல வேண்டும். ஆனல் அவனிடமுள்ள விலங்கியல்பு மேல் நோக்கிச் செல்வதை விடுத்து கீழ் நோக்கியே செல்ல நினைக்கும், சிறப்பாக அழகான போர்வையில் அவனுக்குக் காட்சி கொடுக்கும் கீழான போக்கே அவனை எளிதில் மயக்குவதாகும்.

'மிருக நிலையில் ஆன்மா பின்னப்பட்டுக் கிடக்கும்போது அவனுக்கு வேறு விதியொன்றும் தெரியாது மிருக சக்தியைத் தவிர, மனிதனின் கௌரவம் ஆன்மபலமான உயர்ந்த விதிக்குக் கட்டுப்படுவதை அவசியமாக்குகிறது. எந்தச் சமயத்தில் ஆன்மா விழி விழித்துக் கொள்ளச் செய்கின்ருனோ, அப்பொழுதே இம்சையைக் கைவிட்டு விடுகின்ருன்.' - இவ்வாறு காந்தியடிகள் ஆராய்ந்தார்.

'தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்ணுதே,
நினைந்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போது,
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ' - என்பது திருவாசகத் தேன்.

தினைத்தனை பயனில் மதிமயங்கிவிடாது - எக்காலத்தும் - எல்லா நிலையிலும் - எவ்விதத் தடையுமில்லாத ஒப்பற்ற - பெரிய

வாழ்வில் ஆழ்ந்துநின்ற காந்தியடிகள் 'இறைகளோடியைந்த இன்பம்' இன்பத்தோடியைந்த வாழ்வு' – என்ற நெறியைக் கண்டு காட்டினர்.

'உண்மை (சத்தியம்) இன்னு செய்யாமை – அன்பு செய்வது (அகிம்சை) என்ற கோட்பாட்டை எந்திரப் போக்கின் வழியில் பின் தொடர்வது, நெருக்கடியான நேரங்களில் அடிப்படை குலைந்து விடுவ தாகும். ஆகவேதான் உண்மையையே இறைவன் என்று சொல்வேன். இந்த இறைவனே வாழும் ஆற்றல். நமது வாழ்வும் அந்த ஆற்றலின் பாற்பட்டது. இந்த ஆற்றல் நம்மில் வதிகிறது ஆனால் இந்த உடலோ அதாகி விடாது. இந்தப் பேராற்றலை ஒப்புக்கொள்ள மறுப் பவன் – தனக்குக் கிடைத்துள்ள அளப்பரிய பேராற்றலின் பயனை இழந்துவிடுகிறவனுவான். செயல் ஊக்கமற்றவனுகி விடுகிருன். சுக் கான் இல்லாத தோணி எத்தகைய முன்னேற்றமும் காணுது ஆடி அசைந்து நிலை குலைந்து போகும்.

'இந்தப் பேராற்றலையும் இதில் மறைந்துள்ள வாய்ப்பினையும் அறிவதென்பது என்றும் விடாது முயலக் கூடிய ஆய்வாகவே யிருக்கும.

இந்த ஆய்வினைத் தொடர்ந்து நடத்தியதன் பயனுய் சத்தியாக் கிரக – அறப்போர் வழியைக் கண்டு பிடித்ததாகப் பெருமை கொள் கின்றேன். அறப் போர் விதிகள் அனைத்தையும் கண்டுவிட்டேன். என்று சொல்ல முடியாதென்று ஒத்துக் கொள்ளவும் தயங்கேன். ஆயினும், துணிந்து உறுதியோடு அறுதியிட்டுச் சொல்வேன். அறப் போர் வழியில் மதிப்பில் உயர்ந்த எதனையும் அடையக்கூடுமென்று. இதுவே உயர்வும், தவறே காண முடியாததுமான மிகப் பெரும் பேர் ஆற்றல். சமதர்ம இலட்சியம் இந்த வழியிலல்லாது, வேறு வழியில் அடையக் கூடிய தொன்றல்ல. சமுதாயத்திலுள்ள அரசியல் – பொரு ளியல் – ஒழுக்க சம்மந்தமான தீமைகள் யாவற்றையும் களைய வல்லது அறப் போராகிய சத்தியாக்கிரக மொன்றே

இந்த அருட் பேராற்றலைத் தமது காலத்தில் எவ்வளவு தூரம் பயன் படுத்தி, மனித குலத்தைக் கடைத் தேற்ற வழியுண்டோ, அவ் வளவையும் காந்தியடிகள் தமது வாழ்க்கைப் பணியாகக் கொண்டு செயல் படுத்தினுர்

'மனிதன் தனது பழக்க வழக்க நிலையினின்று வாழ்கின்ருன். என்பதையும் ஒத்துக்கொண்டு, தனது உளப் பாங்கினைப் பயன்படுத்தி வாழ்வதே சாலச் சிறந்தது என்பதையும் நான் சொல்லிக்கொள்வேன்' என்பார் அடிகள். மனிதன் தனது உளப்பாங்கினை எவ்வளவு தூரம் வளர்த்துக் கொள்கிருனே, அவ்வளவு தூரம் பிறர் சுரண்டுவது

குறைந்து சுய ஆட்சியில் சிறந்தோளிர முடியும். வாழ்க்கைக்கான போராட்டத்தை ஒருவருக்கொருவர் சேவை என்பதற்கான போராட்டமாகத் திருப்பி விடுவதிலேயே மனிதனின் வெற்றி அடங்கியுள்ளது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றார் ஒரு அருளாளர். 'கைமாறு வேண்டாத கடப்பாட்டினைச் சொன்னதோடு – நல்லவை யெல்லாமே கடன் என்றும் வலியுறுத்துவார் வள்ளுவர்! பிறர் கட்டாயத்திற்காகவோ – அல்லது சொந்த வாழ்க்கைக்காகவோ மாத்திரம் அல்லாமல் –, தொண்டு உள்ளத்தோடும் – பற்றற்ற உளப்பாங்கினைக் கொண்டு ஒழுகுவதே ஆன்மீய மேம்பாட்டினைக் குறிப்பதாகும். மனித மேம்பாடு தன்னை அழித்து ;நன் உணர்வு கெட்டு மேலோங்குவது. தன்னலமற்ற சேவையே வாழ்க்கையின் இரகசியம். நமக்குள்ள உயர் இலட்சியம் ஆசை-பற்று இவற்றினை விட்டொழிப்பதே. அறநெறிகள் ஆன்மஞானிகள் சொந்த அனுபவத்தில் எழுந்தவையே. தனது அனுபவத்தில் உயர்ந்தவனே ஞானி: துறவு என்பது கீதையின்படி காமியமான செயலைத் துறப்பதே. தனது உடல் தத்துவத்தை ஆளக் கூடியவனே துறவி" என்பார் அடிகள்.

வல்லநாட்டு வள்ளலார் கூறுவார்: 'ஆசையின் பயனால் இன்பமும் – துன்பமும் வரும். பற்றின் காரணமாக ஆண் – பெண் பிறக்கும். இவற்றைப் பெற்று அனுபவிக்கக் கடமைப்பட்டுள்ளான். ஆனால் ஆசை – பற்றைக் குறைத்துக் கொண்டு, அன்பையே வளர்த்துக் கொள்ள வேண்டும்!'

வள்ளுவ மறை உணர்த்தும்: 'வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை.' 'தூய்மை என்பது அவாவின்மை. அவா அற்றாரே பிறவி அற்றார். துன்பமும் அற்றார் – அதன் பயனாக இன்பம் இடையறாது ஈண்டும் – பேரா இயற்கை பெருநிலை அடையப் பெறுவர்.

காந்தியடிகள் இந்த விஞ்ஞான – அணுயுகத்தில், 'ஆரா இயற்கை அவாவினை வென்று வாழ்வதற்கான, ஆன்ம ஒழுக்கத்தைச் சமுதாயம் அளாவிய நிலையில் கண்டு, கடைப்பிடித்து ஒழுகிய வித்தகர். அவர் ஒரு வெறும் உபதேசியல்ல! எனவே தான் அவாவினை வென்று வாழ்வதற்கான சமுதாய அடிப்படையை நமக்கு அருள அவரால் முடிந்தது. இகத்தே பரத்தைப் பெற்று வாழ்வதற்கான ஒழுகலாற்றினை வழங்க முடிந்தது.

'எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் 'ஆன்மநேய உரிமையே – உயிர்களின் பழமையான நிலை. அந்த உரிமை உணர்வையே காந்தியடிகள் பெறுதற்கரிய உரிமையாகக் கொண்டு சமுதாயத் துறையில் செயல் படுத்தினர்.

'எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட் பெருஞ் சிவமே! என்ற வள்ளலார்

'அருள் நெறி ஒன்றே தெருள் நெறி மற்றெல்லாம்
மருள் நெறி என்றெனக்கு இயம்பிய சிவமே
அருள் நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள்நிலை காண்கெனப் புகன்ற மெய்ச் சிவமே!

என்றெல்லாம் தமக்கு ஆண்டவன் உணர்த்தியதாகச் சொல்வார். உண்மையை நாடிச் சென்ற ஆய்வின் பயனாக தனக்குக் கிடைத்த அருட் கொடை இன்னா செய்யாமை என்றும் ஒப்பற்ற நெறியே; அருள் ஒன்றே அனைத்தும் பெறுநிலை என்பதை சமுதாய மளாவிய அளவுக்கு வழங்கியவர் காந்தியடிகள். அரசியல் – பொருளியல் சமுதாய இயல் யாவினையும் – அருள் வழியில், ஆன்மீய நோக்க ஈடேற்றத்திற்காக நெறிப்படுத்தினர். அதன் பயனாக மனித குலத்திற்குச் சாகாத நெறியில் ஆட்படுத்தும் 'சன்மார்க்க சர்வோதயம் –' என்னும் ஆன்மநேய உரிமை உலகியல் கோட்பாடு' கிடைத்துள்ளது. இனிமேல் வையகமும், வானகமும் இந்த வழியிலேயே புதுமையையும் – புரட்சியையும் காணவேண்டுமென்பதனையே இனி வரலாறு உணர்த்தும். வள்ளலார் விண்டு முழங்குவதும்

"பொதுவது சிறப்பது புதியது பழைய தென்
றதுவது வாய்த்திக முருட் பெருஞ் ஜோதி!" என்ற பரநாத முரசே!

பண்டைச் சமுதாயம் தந்த கிராமிய அமைப்பு

'கிராமப் பஞ்சாயத்துக்களின் அமைப்பு, பாரதத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்று. இதனை உலக வரலாற்று வல்லுநர் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்' (வினோபா) ஆசிய நாடுகளின் குறிப்பாக பாரதத்தின் பொருளியல் சமுதாய நிலைமைப் பற்றிக் குறிப்பிடும்போது கார்ல் மார்க்சும், சாகாத பொருளாதாரமும்—ஜனநாயகக் குடியாட்சி முறையும் இந்த நாடுகளின் கிராமங்களின் ஆட்சிமுறையாக வரலாற்றில் பன்னெடுங் காலமும் திகழ்ந்துள்ளது என்பதாய் ஒத்துக் கொள்ளவே செய்கின்றார்.

பெருவாரியான உற்பத்தியைக் கருதும் புதிய உற்பத்திக் கருவிகள் கண்டு பிடிக்கப்படும் போதெல்லாம், சமுதாயத்தின் கூட்டுறவைப் பேணவும், நெடிய ஆக்கம் நிலைக்கவும் திட்டமிட்டே அந்தப் பெருவாரி உற்பத்தி முயற்சியைத் தடுக்கும் போக்கினை மேற்கொண்டனர் சான்றோர். சுயநிறைவு பெற்ற கிராமிய பொருளாதாரங்கொண்ட அடிப்படையான குடியாட்சி முறையே நிலைப்பெற்றுத் திகழ்ந்துள்ள

தாகத் தெரிய வருகின்றது. வரலாற்றுக் கால முழுவதிலும், நம் நாட்டில் மத்திய ஆட்சி எத்தகையதாயினும் கிராமிய அடிப்படையில் குடியாட்சி நிலைபெற்றே வந்துள்ளது. ஆங்கிலேயர் அரசாட்சி வந்த போதுதான் நாடு பராதீனமாக மாறியது. கிராமமும் பராதீனமாக இருந்தது. ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன் முகலாயர்கள், துருக்கியர்கள், பட்டாணியர்கள் ஆகியோரின் ஆட்சியும் நடைப்பெற்றுத் தான் இருந்துள்ளது. அப்போது நாடு அந்நியர் ஆட்சியின் கீழேயே இருந்தபோதிலும், கிராம சுதந்திரம் பாதிக்கப்பட்டதாயில்லை.' (வினோபா)

1908-ல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகள் வெளியிட்ட 'இந்திய அபிப்பிராயம்' (Indian opinion) என்ற செய்தித்தாளில், இந்திய நாட்டின் பண்டைய கிராமங்களின் அமைப்பை விவரித்துள்ளதைப் பார்க்கலாம்.

"இந்தியாவில் பரிணமித்துள்ள நாகரிகம் உலகில் எங்குமே தோல்வி காணாத ஒன்று என்று நம்புகிறேன். நமது முன்னோர்கள் விதைத்த விதைக்கு ஒப்ப வேறு எவருமே விதைத்ததில்லை. உரோம் போய் விட்டது. கிரேக்கமும் அதே விதிக்கு ஆட்பட்டு ஒழிந்தது. எகிப்திய-பரோக்களின் பலம் சிதைந்தது. ஜப்பான் மேலைய நாட்டுப் போக்கைத் தழுவிக் கொண்டது. சினவைப் பற்றியோ சொல்வதற்கில்லை. ஆயினும் இந்தியா மாத்திரம் எப்படியோ ஒருவாறு வலுவான அடிப்படையில் நின்றுளிர்கிறது பண்டைப் பெருமை இழந்து நிற்கும் கிரேக்க—உரோமானியர்களின் எழுத்துக்களிலிருந்து, ஐரோப்பிய மக்கள் பாடம் கற்கின்றார்கள். அவ்வாறு அவர்களிடமிருந்து கற்க முயலும்போது கிரேக்கர்களும் உரோமானியர்களும் செய்த தவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று கற்பனை செய்து கொள்கின்றார்கள். அவர்களது அவலநிலை அத்தகையது. இத்தகைய நிலைமைகளிலும் இந்தியா ஒன்றே அசையாது நின்றுள்ளது. அதுவே அதன் தனிச் சிறப்புக்குக் காரணமாகும்.

பல நூல் ஆசிரியர்களும் காட்டியபடி, இந்தியா இப்போது உள்ளபடியே இருக்கட்டும். யாரிடமும் எவரும் எதுவும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. மனமானது அமைதியற்ற பறவைக்கு ஒப்பிடலாம். கிடைக்கக்கிடைக்க திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டேயிருக்கும். நிறைவு கொள்வதில்லை. ஆசைப்பட ஆசைப்பட கட்டுக்கடங்காத ஆசை பிறிட்டெழும் என்பதையும் அறிவேன். எனவே, நமது முன்னோர்கள் ஆசைக் கிளர்ச்சிக்கு வரம்பு கட்டினர். இன்ப உணர்வு பெருமளவில் மனோ நிலையைப் பொருத்துள்ளது என்பதையும் பார்த்தார்கள். செல்வந்தனுயிருப்பதாலேயே ஒருவன் இன்பத்தில் திளைக்கின்றான் என்பதில்லை. ஏழையென்பதனுல் ஒருவன் துன்பத்தில்

தோய்ந்திருக்கிறான் என்பதில்லை. செல்வந்தன் இன்பத்தைக் காண முடியாததையும், எளியவன் இன்ப வாழ்வில் களித்து மகிழ்வதையும் பன்முறை பார்த்துள்ளோம். ஆனால் பலகோடி மக்கள் ஏழையர்களாகவே இருப்பர் என்று நன்கு கண்டறிந்த நமது ஆன்றோர் நம்மை ஆடம்பரத்தினின்றும் — இன்பக் கேளிக்கையினின்றும் தடுத்தே வந்துள்ளனர். பல்லாயிர மாண்டுகட்குமுன் நின்று நிலவிய அதே ஏர் கலப்பையைக் கொண்டே சமாளித்து வந்தோம்: பண்டைக் காலத்தில் நிலவிய அதே குடிசைத் தொழிலைத் தொடர்ந்து கைக்கொண்டும் வந்தோம். நமக்கே உரிய சொந்தமான கல்விமுறையும் எப்பொழுதும்போல் நீடித்து நிலவி வந்தது. வாழ்க்கையைப் பாழ்படுத்தும் போட்டிப் பூசல்களைத் தம்முட் கொண்ட அமைப்புக்கு இங்கு இடமில்லை. அவரவர் தத்தம் பணியை – தொழிலை மேற்கொண்டு ஒழுகினர். இம்முறையிலேயே ஊதியமும் பெற்று வந்தனர். எந்திரம் கண்டுபிடிக்க வழி தெரிந்திருந்தும் அதில் கருத்தைச் செலுத்தவில்லை. அதில் மனத்தைப் பறி கொடுத்தால் நமது ஒழுக்கத்தை கைநழுவ விட்டு விட்டு, அதற்கே ஆட்பட்டுக் குற்றேவல் செய்யத்தொடங்கிவிட நேரும் என்பதையெல்லாம் நமது முன்னோர்கள் கண்டறிந்தனர். எனவே நன்கு ஆராய்ந்த பின்னரே நம் கைகளுக்கும், கால்களுக்கும் வேலை கொடுத்தாக வேண்டுமென்பதை முடிவு செய்து கொண்டார்கள். மேலும் பெரும் நகரங்களெல்லாம் நம்மைச் சிக்கவைக்கும் வலையாகவும் – தேவையற்ற வில்லங்கமாகவும் நின்று மக்களின் இன்பவாழ்வுக் குரிய வழியைத் தடை படுத்தும் என்பதை அவர்கள் நினைத்தார்கள். அந்த நகர்ப் புறங்களிலெல்லாம் திருட்டுக் கும்பலும், கொள்ளைக் கூட்டமும் வதிந்தனர். விபச்சாரமும், வேறு பல தீமைகளும் அங்கு தலை விரித்தாடவே செய்தன. ஏழையர் செல்வந்தரால் கொள்ளையிடப்பட்டனர். அதனால் தான் சின்னஞ் சிறிய கிராம அமைப்பினைக் கொண்ட வாழ்வில் நிறைவு கொண்டிருந்தனர். அரசர்களும், அவர்தம் ஆயுதங்களும், அறநெறி யென்னும் ஆயுதத்திற்கு மட்டுப்பட்டவை என்பதையும் கண்டிருந்தனர். ஆகவே மண்ணாளும் முடிமன்னர்களினும் இருடிகளும் பக்கிரிகளும் உயர்ந்தோரே என்று மதித்தனர்! இத்தகைய சிறப்பினை யெல்லாம் கொண்டிலங்கும் அமைப்பினை கொண்டுள்ள நாடு, பிற நாடுகளிடமிருந்து தாம் கற்றுக் கொள்வதைவிட மிகுதியாகக் கற்றுக்கொடுக்கும் தகுதிகொண்டுள்ளதாகும்... பொது மக்கள் உரிமை உணர்வுடன் வாழ்ந்து தமது வேளாண்மைத் தொழிலையே தொடர்ந்து மேற்கொண்டு ஒழுகினர். உண்மையான சுயாட்சியை நன்கு பயின்றுள்ளனர்!'

சேமர் ஹேம (1883), விக்டர் குசின் (1792–1867), பிரடெரிக் மாக்சுமுல்லர், பிரடெரிக் வான் செலிக்கஸ், அபி. ஜே எ. டுபோங் (1820), ஜே. யங் – போன்ற பல்துறை அறிஞ பெருமக்களின் கருத்துக்களி

லிருந்தும், மெய்ன், டட், நௌரோஜி போன்ற ஆசிரியர்களின் நூல் முடிவுகளிலிருந்து மேலேகண்ட கொள்கையை நிலை நாட்டலாம்.

'இந்து சுயராஜ்யம்' என்ற தமது நூலின் முடிவில் மூன்றுகருத்து மணிகளைக் காந்தியடிகள் தருவார்.

1) உண்மையான சுய ஆட்சி என்பது சொந்த ஆட்சி அல்லது தமக்குத் தாமே விதித்துக் கொள்ளும் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள ஆட்சிமுறையாகும்.

2) அதனை அடைவது, அறவழியில் நின்று போரிடுவதன் வாயிலாகவே. அதுவே ஆன்ம சக்தி என்பதும் – அன்பு ஆற்றல் என்பதுமாகும்.

3) இந்த ஆற்றலை வெளிப்படுத்த எல்லாவழிகளிலும் சுதேசிய ஒழுக்கத்தைக் கைக் கொள்வதும் தவிர்க்க முடியாத தேவையாகும்.

நமது பழம் பெரும் வரலாற்றின் பொன் ஓவியங்களின் ஆதாரத்தில் நின்று மனிதன் தானே விதித்துக் கொள்ளும் விதியின் சிறப்பைத் தெளிவு படுத்துவார். எனவே அவர் வையத்திற்கு வழங்க ஆசைப்பட்ட சமுதாய இயல் – மனித சமுதாயம் தாமே உணர்வு பூர்வமாக பிறப்பித்துக் கொள்ளும் சொந்த விதியினைக் கொண்டிலங்கும் ஒரு கட்டுக் கோப்பில் உருவாகும் 'சர்வோதய சமுதாயமாகும்'. அதனை அடைவதற்குக் கையாண்ட வழிமுறையும் ஆன்மீய அடிப்படையில் எழுந்த அறம் சார்ந்த போர்முறை. அந்த அன்பு தோய்ந்த போர் முறையை அவர் தம் வாழ்நாளெல்லாம் வாழ்க்கையின் பல் துறைகளுக்கும் கொண்டுதந்து அதன் தன்னிகரற்ற சிறப்பை உணர்த்தியுள்ளார். இன்று வையத்தின் பெரும் அறிஞர்களும் – விஞ்ஞானப் பெருமக்களும் இம் முறையைக் கையாண்டு பெரும் சாதனைகளைக் கண்டு கொண்டு வருகின்றனர்.

ஆங்கில ஆட்சியில் சுய ஆட்சி அழிந்தது.

உரிமை பெற்ற வாழ்வுக்குக் கற்பிக்கப்படும் அத்தனை இலக்கணங்களும் நமது ஊராட்சியில் கிடைத்தே வந்துள்ளன. மத்திய அரசு வேற்று நாட்டாரின் கைமாறியும் இந்த நிலை மாறாதிருந்துள்ளது. இதெல்லாம் ஆங்கிலேயர் இந்த நாட்டில் அடியெடுத்து வைப்பதற்கு முன் ஊர் ஆட்சிகளின் நிலையாகும். இந்த ஊர்கள் யாவும் இணைக்கப் படாது சிதறிக் கிடந்த நிலைமைகளில் இவற்றை முறியடிப்பது எளிதாயிற்று. விஞ்ஞானமும், தொழிற் புரட்சியும் இந்த ஊர் அமைப்புகளின் சிதைவை நிறைவேற்றக் காரணமாயிருந்தன. ஆங்கில ஆட்சி இந்த நாட்டில் நுழைந்த பின்பே அதன் தொழிற் புரட்சி பெரும் பசித்

குத் தேவைப்படும் உபக்கிரகங்களாக நமது நாடு மாற்றப்பட்டு, இந்த நாட்டில் நீடித்த ஆயுள் பெற்று நின்ற உழவுத் தொழிலும், ஆயிரக் கணக்கான கைத் தொழில்களும், 'கலோனியல் – பொருளாதார முறைக்கு ஏற்பத் திட்டமிடப்பட்டு நசுக்கப்பட்டன. மேலும் அவை அந்நிய தொழிற் வளர்ச்சிக்காகவே இந்த நாட்டின் போக்கில் திசை மாற்றம் ஏற்படுத்தி சீர்குலைவுக்கு ஆளாக்கப்பட்டன.

இந்தியாவில் பஞ்சுநூல் ஆலைகள் தோன்றுதபோது நிலவிய கைத் தொழில் மூலமாகவே, இந்த நாட்டின் தேவை யாவும் நிறைவுசெய்யப் பட்டதோடு, (தமிழகத்தைப் பொருத்தவரை கி மு. 1000ல் தொடங்கி) மேல் நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தது என்னும் செய்தி தொழிற் புரட்சித் தொடக்கத்திற்கு முன்புவரை வரலாற்று நெடுகிலும் பேசப் பட்டுள்ளது. இவ்வாறு மேனாடுகளுக்கும் 'காதி' ஏற்றுமதியானதன் காரணமாக எழுந்த தொழிற் போட்டியைச் சமாளிக்க இங்கிலாந்து தேசம் சட்டமியற்றித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதையும் கண்டோம். அன்றைய தேவைக்கு மிஞ்சி யிருந்த நிலையில், அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்து அந்த நாட்டின் செல்வத்தைக் கவர்ந்து வருமளவுக்குக் கைத்தொழில் சிறந்தும், வளம் ஓங்கியும் இருந்ததைக் கண்டுள்ளோம். இப்படி உழவும் – தொழிலும் வளமுற்றுத் திகழ்ந்த இந்த நாட்டின் பண்புநலம் மிக்கொளிரும் கைத் தொழில்கள் செயற்கைக் காரணங்களுக்காக அழித் தொழிக்கப் பட்டதை இந்திய நாட்டின் வரலாற்று ஆசிரியர்களேயன்றி வெளிநாட் டறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். கார்ல் மார்க்சும் இதனைக் குறிப்பிடத் தவறவில்லை. 'இன்றைய இந்தியா (India Today) என்ற நூலை வெளியிட்ட ஆங்கிலப் பொதுவுடைமை அறிஞர் இரஜனி பாமிதத் இக்கொள்கைத் தெளிவுடனும், தக்க சான்றுகளுடனும் விவரித்துள்ளார்.

இதன் விளைவாக நமது செல்வம் கொள்ளை கொண்டு செல்லப் படுதலும், பஞ்சமும், பட்டினியும் நமது பொருளியல் வாழ்வில் தவிர்க்கமுடியாத அம்சமாதலும் – ஏகாதிபத்திய வெறிச் செயலுக்குப் பலியாதலும் – உலகப் போர்ச் சூழலில் தனது விருப்பத்திற்கு மாறுகச் சிக்கவைக்கப் படுதலும், இவைபோன்ற சடவிதிகளின் குருட்டுப் போக்கில் உழலுதலும் நேரலாயின.

இன்றைய உலகப் போக்கினை உருவாக்குவதில் எந்திரம் வகித்தபங்கு!

விஞ்ஞான வளர்ச்சியையும் – எந்திர சாதன வளர்ச்சியையும் நாம் ஒன்றுகப் பாவிக்கவில்லை. விஞ்ஞானம் அறிவின் பாற்பட்ட அறிவியல். எந்திர சாதனைக் கொண்ட உற்பத்தி முறை. சமுதாய வாழ்க்கையை

நேரிடையாகப் பாதிக்க வல்லது. விஞ்ஞானம் அறிவை வளர்க்கத் துணைநிற்கலாம். எந்திரம் வாழ்க்கைப் பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கல் மிக்க தாக்கி, வாழ்வின் புனித நோக்கத்தைப் பாழ்படுத்தி விடக்கூடும்! 'நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்றார் வள்ளுவர். ஆனால் எந்திர முறைக்கு அறிவுத் துறையான விஞ்ஞானம் அடிமைப் பட்டதே, இன்றைய அவல நிலைமைக்கெல்லாம் காரணம். விஞ்ஞான சாதனையின் பெயரால் அஞ்ஞானத்திற்கு மக்களை ஆட்படுத்தியதே இன்றைய நாகரிக யுகம்.

ஆனால் இந்த எந்திர உற்பத்தி தொடங்கிய கதை ஆயிரங்கால நெடிய கதையல்ல. ஓரிரண்டு நூற்றாண்டு கொண்ட அண்மைக்கால வரலாறுதான். ஆயினும் அதன் இரும்புப் பிடியில் மானிடசாதி பட்டுள்ள அல்லல் தொல்லைகள் அளப்பரியன. இத்தகைய உற்பத்தியுடன் சேர்ந்தே எழுந்த பொருளாதாரச் சிக்கல்களினாலும் – போராட்டங்களினாலும், பலர் வேலை வாய்ப்பு இழந்து பாமரராயினர். பாட்டாளிகள் சிறு சிறு கோரிக்கைகளுக்கெல்லாம் போராடி மடிந்தொழிவாராயினர். இவ்வாறு 'மூலதனம்' வளர்ந்த கதையும், அத்துடன், சந்தைக்காகவும், மூலப் பொருள் தேவைக்காகவும் நாடுகளை வேட்டைக் காடாக்கி, கொத்தடிமை கொள்ளும் நிலை ஏற்பட்டது. அந்த நாடுகளின் – ஆசிய – ஆப்பிரிக்க நாடுகள், அனேகமாக, முழுமையும் – பொருளாதார சுயநிறைவை வற்றடித்து அவ்வடிமை நாடுகளின் வேலை வாய்ப்பினை யெல்லாம் சீர்கேடு அடையச் செய்து அவற்றின் வருவாய்க்குள்ள வழிதுறைகள் அனைத்தையும் அடைத்துவிடும் நிலைமை ஏற்பட்டது. தங்கள் ஆலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களின் ஆக்கத்திற்கு ஊக்கம் கொடுத்தும், மிகவும் இன்றியமையாத தேவைகளின் ஆக்கத்திற்கு கேடு செய்தும் மீளாத வறுமைக்கும் – பஞ்சத்திற்கும் – பட்டினிக்கும் அந்நாட்டு மக்கள் நிரந்தரமாக ஆளாகுமாறு செய்த கொடுமைகளை நினைக்கும் போதே நெஞ்சம் கலங்கி நடுங்குகின்றது.

உழைப்பினை மிச்சப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டும் ஓய்வினை நல்கவே காத்திருப்பதாகக் காட்டிக் கொண்டும், சமுதாயத்தில் சொல்லமுடியாத கொடுமைகளைச் சுமத்தி, வாழ்வின் சுவையையெல்லாம் பாழ்படுத்தி நிலை குலையச் செய்து விட்டது எந்திர உற்பத்தி முறை. பணம் குவிப்பதையே தொழிலாய்க் கொண்ட ஒரு சிறு பிரிவினரைத் தயாரித்து, பெரும்பகுதி மக்களை கூலிகளாய் மாற்றி, கிராமாந்திரப் பகுதிகளில் ஆயிரமாயிரம் ஆண்டுக் காலமாய் சுயநிறைவுடன் திகழ்ந்த சமுதாய வாழ்க்கையை – தொழில்வளமும், வேலை வாய்ப்பும், பல்கலைகளின் சிறப்பும் கொண்டு நிம்மதியும், நிறைவும், மற்றும் நல்லனவெல்லாம் கொண்டிலங்கிய இலட்சக்கணக்கான கிரா

மங்களின் வாழ்க்கை நிலமையைத் தலைகீழாக மாற்றி, நகர்ப்புறங்களின் உபக்கிரகங்களாய் மாற்றிவிட்டது எந்திர பொருள் உற்பத்தி முறை என்னும் குருட்டுத்தனமான சக்தி!

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'
'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்' என்பது பொய்யாமொழி. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்'. என்பது பாரதியும் புகட்டும் நீதி. ஆனால் எந்திரம் புகுத்திய நெறி தலைகீழ்ப் பாடமாகும்.

அரை நூற்றாண்டளவில் உலகம் கண்ட இரு பெரும் போர்களும், அதனால் ஏற்பட்ட பேரழிவுகளும். பின் விளைவுகளும், மூன்றாவது உலகப் போரினுக்கு ஒத்திக்கையாக உலகின் பலபகுதிகளிலும் நிகழ்ந்து வரும் குழப்பங்களும் – தலையீடுகளும் – கெடுபிடி முறைகளும் – உள் நாட்டு போர்களுக்கு ஊக்குவதும், – இவை யாவற்றிற்கும் முத்தாப்பு வைத்தாற் போல் அணு ஆயுத சோதனைகள் மூலம் வான்வெளி, கடல், பாதாளம் எங்கும் நச்சுப் புகையை விடுத்து, பேராபத்துக்கு உலகை இட்டுச் செல்லும் கைங்கரியமும் இந்த எந்திர உற்பத்தியைக் கொண்டு உண்டானவைகள் என்பதனை யார்தான் மறுக்கக் கூடும்?

இத்தகைய முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறையினை அரசாங்க உடைமையாக மாற்றிச் சமதர்மப் பொருள் உற்பத்தி முறையை ஏற்படுத்தி விடுவோமானால், முன் சொன்ன பேரழிவுகளெல்லாம் தவிர்க்கப்பட்டு விடுமென்பது இன்றைய பல சேமநல நாடுகளின் (Welfare States) நம்பிக்கையாகும். புதிதாக விடுதலை பெற்ற நாடுகளும் இந்த வழியிலேயே பொருளாதார முன்னேற்றம் காணத்துடிக்கின்றன. ஆனால் இத்தகைய பொருளியல் விதிகளை நன்கு ஆராய்ந்திருந்த காந்தியடிகள், தமக்கேயுரிய பதிலைத் தந்துள்ளார். எத்தகைய யுக்தி முறையினாலும், இந்த எந்திரப் பொருள் உற்பத்தி முறை தன்னுள் வைத்துக் கொண்டுள்ள அழிவுத் தன்மையைப் போக்கிவிட முடியாது! இதன் தோற்றமும், வளர்ச்சிப் போக்கும் – நோக்கமும் – சமுதாயப்பின் விளைவுகளும் நன்மை செய்வதாயில்லை என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இந்த உற்பத்திப் பங்கீட்டு முறைகளின் பயனாய் எழுந்த அரசியல் – பொருளாதார விளைவுகளும், – சமுதாயச் சீர்கேடுகளும் இன்றைக்கும் தான் இருக்கக் காண்கின்றோம்!

மேலும் அசுர எந்திரங்களுக்கு அருகில் நின்று பணியாற்றும் மனிதனோ தனக்கு உற்பத்திச் செயல்களில் பங்கு இருப்பதாக உணர முடியாத நிலைமைகளில், மிகவும் அற்பமான பிராணியாகத் தன்னைக்

கருதியும், ஒரு பக்கம் அதனைக்கண்டு வியப்பும் - பின்பு மலைப்பும் அடைந்து, அவதியுறுவதைக் காண்கிறோம். அது மாத்திரமின்றி முன்பெல்லாம் உடல் உழைப்பினாலும், படைப்பு ஆற்றலைப் புலப் படுத்திய வாய்ப்பினாலும் ஏற்பட்டிருந்த தன்நம்பிக்கையும் - தெம்பும் - மனத்திட்பமும் கெட்டு; இவற்றின் காரணமாய் மூளைக் கோளாற்றுக்கு ஆளாகி நிற்கும் அனுபவ நிலையை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஸ்விடன் போன்ற ஏனைய மேனாடுகளிலும் நாம் கண்டு வருகின்றோம். மேலும் சிக்கல் படைத்த எந்திர நாகரி கத்தின் விளைவால் எழுந்துள்ள நகர்களின் வாழ்க்கையின் போக்கில் மார்பு வலியும், பிறவும் ஆங்கில நாட்டின் வைத்தியத்துறை நிபுணர் டாக்டர் டோனல்டு என். ரோஸ் கூறுவது போல 'நாகரிகத்தின் வியாதி'யாக வளர்ந்துள்ளன. அமெரிக்க நாட்டின் நகர்ப்புறங்களின் வானவெளி எப்படிக் கெட்டுவிட்டது, அதன் அபாயம் எத்தகையது என்பதையெல்லாம் அமெரிக்க விஞ்ஞானச் செய்தி வெளியீடுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவையல்லாமல், போர் வந்துவிடுமோ என்ற அச்சத்தினால் ஏற்பட்டுள்ள கோளாறுகள் பலவிதம்!

இன்று அமெரிக்காவும், சோவியத்து இரஷ்யாவும் காணத் துடிக் கும் 'தானே இயங்கும் எந்திரமுறை' (Autonation) இந்த அபாயங்களுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் உள்ளது. அதனை மனித குலம் ஒரு வரப்பிரசாதமாகக் கொண்டாடுவது விவேகமான செயலல்ல - மாறாக மனித குலத்திற்கு ஒரு சாபக்கேடாகவே நிரூபிக்கக் காத்துள்ளது!

இன்று ஆசிரிய - மாணாக்கர் உறவுகளைப் பற்றிக் கேட்டு வருகின்றோம். எதிர்காலம் அப்படிப்பட்ட உறவை அவசியமில்லாது செய்துவிடலாம். ஆசிரியர்களை அப்புறப்படுத்திவிட்டு, பாடங் களைக் 'கற்பிக்க' எந்திர சாதனங்கள் காத்திருக்கும், காவியங் களையும், பேரிலக்கியங்களையும் நமக்காகப் படித்து ஒப்பிக்கும் சாதனங்கள் நமக்குச் 'சேவை' செய்யத் தொடங்கி விடும்! பின்பு காசு செலவிட்டு நூல்கள் வாங்குவதோ - படிப்பகம் சென்று படிப்பதோ கூட அவசியமில்லாது போய்விடலாம். நாளடை வில் நமக்காக சிந்திக்கும் 'சிலர்' தமது சிந்தனையின் பயனை வள்ளன் மையோடு கருவியின் துணைகொண்டு வழங்குவர். நாமெல்லாம் செவி மடுத்து செம்மாந்து நிற்கலாம். நமது சிந்தனைக்கும் 'ஓய்வு' கொடுத்து விடலாம்!

வேளாண்மைத் துறையில் விளைவினைப் பெருக்கும் நோக்கத்தில் கையாளத் தொடங்கியுள்ள இரசாயன முறைகள் - உரவகைகள் மக்க ளுக்கு நீடித்த நன்மை பயப்பவையல்ல. நிலத்தின் இயல்பான

வளத்தை விரைந்து வற்றடித்து அவற்றைப் பயிர்த் தொழிலுக்குப் பயனற்றதாக்கி விடுகிறதென்பதை இன்றைய விஞ்ஞானிகள் உணர்த்தி வருகின்றனர்.

இன்றைய எந்திர இரசாயன பழக்கங்கள் வழக்கிற்கு வரவர, இயற்கை அன்னை காலமெல்லாம் சேகரித்து வைத்திருந்த கனிப் பொருள் - மற்றும் சேமிப்புகளை யெல்லாம் வரம்புமீறி விரையம் செய்யும் நுட்பம் கண்டு, ஊதாரி வாழ்க்கைக்கு வந்து கொண்டிருக் கிறோ மென்பதை விஞ்ஞானிகள் கண்டு எச்சரிக்கத் தொடங்கி யுள்ளனர்.

நவீன சாதனங்களின் மற்றும் அணு - நீர்வாயுக் குண்டுகளின் சோதனைகளின் விளைவெல்லாம் சேர்ந்து இன்னொரு வகையில் பேராபத் தைக் கொண்டு தரக் காத்துள்ளது! இயற்கையின் இணைபிரியா பகுதியாக மனித சமுதாயம் நிலைபெற்றுள்ளது. இதில் மனிதனுக்கும், இயற்கைச் சூழ்நிலைக்கும் தொன்று தொட்டு ஒரு 'சம நிலை' (Balance) இருந்து வந்துள்ளது! தற்போது இதில் மாற்றம் நிகழ்வதான ஆபத்து பெருகி வருகின்றது. இதன் விளைவைக் கற்பனை செய்வதே பயங்கரம்! எனவே நன்மை போல் தோற்றமளிக்கும் இந்தக் கேட்டினைக் காலமுள்ள போதே உணர்ந்து நடந்து கொள்ளத் தவறலாகாது.

மேலும் சமூகக் கண் கொண்டு பார்க்கும் போது, மனிதனின் படைக்கும் இன்பத்தைப் பறித்துக் கொண்டு, அவனது உழைப்புத் திறனையும் இயல்பான கலை ஆர்வத்தையும் கவர்ந்து கொண்டு, மக்களை எந்திர மோகத்திற்கு அடிமைப்படுத்தி, செயல் திறமற்றவர் களாய் அவர்கள் உடலும் உள்ளமும் பாழாகும் விதத்தில் அமைந்து வீண் கேளிக்கைகளிலும் - வேடிக்கை - விளையாட்டு - பொழுது போக்கிலும் உலகை வியர்த்த மாக்கிவரும் அவலநிலைதான் 'நவீன யுகம்' படைக்க இருக்கும் சாதனைகள்!

இந்தப் பெருவாரி உற்பத்தி முறை வெள்ள மெனப் பெருகிவரும் மக்கள் தம் உழைக்கும் வாய்ப்பினை அபகரித்துக் கொண்டு, தற்கொலைப் பாதையில் அவர்களை வழி நடத்தக் காத்திருக்கிறது. மனிதனின் படைப்பு ஆற்றலுக்குள்ள வாய்ப்பும், அதனால் மனிதனின் மனோ நிலையிலும், உடல் நிலையிலும் ஏற்படும் அமைதியும் அழிந் தொழிக்கப்பட இருக்கின்றன!

இந்த முறை, மனிதனின் இயல்பை - பண்பை வளப்படுத்தும் புனிதமான உழைப்பு நாளாவட்டத்தில் தேய்வதற்கான பாதையைக் காட்டி, உழைப்பிற்கு இருக்கும் தடைகளைக் களைவதாகச் சொல்லி, உழைப்பே அவசியமில்லாதபடியான ஒரு அமைப்பை உருவாக்க

முனைந்து சமூகத்தின் உழைப்பையும், சிந்தனையையும் கவர்ந்து திசை திருப்பி, மக்களின் ஆர்வத்தையும், இரத்தத்தையும் குடித்து, மனித மேம்பாட்டுக்கும், இயல்பான வளர்ச்சிக்கும் ஆபத்தான சிக்கல் படைக்கும் ஒரு நாகரிகத்திற்கு அழைத்துச் செல்ல காத்துள்ளது! மனிதப் பண்புக்கே புறம்பான எந்திர உறவு நிலைமைகளின் பின் விளைவுகள் மனித வாழ்க்கையில் தலையெடுத்து, சோம்பலிலும், பலவீனத்திலும், ஒழுக்கச் சீர்கேட்டிலும் நிச்சயமாகச் சென்று முடிவதே யாகும் என்பதைப் பல கோணங்களிலிருந்தும் ஆராயும் அறிஞர் பெருமக்கள் கண்டு வருகின்றனர்.

நிலையானவைகளைப் பற்றுவதற்கு நேர்முரணாகக் கானலை நீராக எண்ண ஏங்கும் சஞ்சல புத்திக்கு ஆக்கமும், ஊக்கமும் தரும் முயற்சியில் இறங்கி, அதனைப் பின் தொடர்வதே மனிதனின் பெருமை மிக்க போராட்டம் என்று மார்க்சிசமும் நம்பி வழி நடக்கின்றது. உலகியலில் சலனமுண்டாக்கி, தேவை மிகுந்து கொண்டே போகும் பிசாசுப் பசியுள்ள ஒரு மயக்கத்திற்கு மனித இனத்தைத் தள்ளிச் செல்வதே இன்றைய பொருளியல் – சமுதாய சடவிதிகளின் சாதனையாகும். சடவிதிகளால் உந்தப்பட்டு, இன்றைய முன்னணி நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன் முதலிய நாடுகள் ஓடுகின்றன. தலைதெறிக்கும் வேகத்தில் ஓடிக்கொண்டே இருக்கின்றன! எங்கே ஓடுகின்றோம், ஓட்டம் எங்கே சென்று முடியுமென்பவற்றில் தெளிவு பெறாது, தொடர்ந்தும், திரும்பிப் பாராதும் ஓடுகின்றன!

அவற்றைப் பின் தொடர்ந்து ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை பெற்ற நாடுகளும் 'முன்னேற்றம் அந்த ஓட்டத்தில் தான்' அமைந்துள்ளது என்று மயங்கிப் பின் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கின்றன. முந்திச் சென்றவர்கள் தாங்கள் மிகமிக முந்திக் கொண்டுதான் கர்வம் பிடரியைப் பிடித்து உந்தித் தள்ள, விடாது ஓடுகின்றனர்! முடிவு படு பாதாளத்தில் வீழ்தல் அல்லது பாறையில் முட்டிக் கொள்ளுதலாகவே இருக்கும் என்பது தெளிவாகி வருகிறது. முந்திச் சென்றவர்கள் தங்கள் ஓட்டத்தை நிறுத்திக் கொள்ளும் வரை, பின் தொடர்ந்து வருபவர்கள் நிற்கப் போவதில்லை! ஏனெனில், மிகவும் 'பின் தங்கி விட' அவர்கள் தயாராயில்லை! இது இன்றைய நாகரிகத்தின் அலங்கோலப் போக்கு!

'பொற்காலம்' பூத்துக் குலுங்குமா ?

வரலாற்று ஏடுகளில் பொற்காலங்கள் பற்றிய ஒரு வண்ண ஓவியம் தீட்டபட்டுள்ள சுவையான செய்திகள் கிடைக்கும். சங்க காலங்கள் – குப்தர்கள் காலம் – சோழர்கள் காலம் – போன்றவைகளும் மேல் நாடுகளில் கிரேக்க நாகரிகம். உரோம நாகரிகத்தின் சில

காலம், பிற்காலத்தில் தோன்றிய கலை மறுமலர்ச்சிக் காலம் – இத்தகைய ஒரு பொன் ஓவியம் எந்திர உற்பத்தி முறை வாழ்க்கையில் தலையெடுக்காத காலத்தில் நிகழ்ந்தவை. நல்ல நாகரிகமும் – பண்பாடும் – கலையும் கலை வாழ்வும் ஆயிரமாயிர மாண்டுகளாய் மக்களின் வாழ்க்கையில் நிலைபெற்றுத் திகழும் உழவினாலும் அதனைச் சார்ந்த கைத்தொழில்களின் சிறப்பினாலும் நிகழ்ந்தவையே! ஆனால் எந்திர உற்பத்தி முறை தோன்றிச் சில நூற்றாண்டுகளே ஆகின்றன. ஆயினும் தலைதெறிக்கும் வேகத்தில், சமுதாய வாழ்க்கையில் நிலை கொள்ள வேண்டிய ஒழுகலாறுகளை தலையெடுக்க வாய்ப்பு இல்லாத போக்கில் செல்வதாயிருக்கின்றது!

ஒரு எந்திரம் கண்டுபிடிக்கப்பட பல கோடி கோடி மூலதனம் தேவைப்படும். அதன் வளர்ச்சிக்காகச் சமுதாயம் பெரும் தியாகங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறது. இவ்வளவு தியாகங்களையும் பலி கொண்டு வளர்ந்த எந்திரம் அற்ப ஆயுளில், மேலும் வளர்ச்சி மிக்க எந்திரத்திற்கு இடம் கொடுப்பதையும் இன்னும் மிக்க சிக்கல் படைத்த வளர்ச்சியினைக் கொண்ட எந்திரத்திற்கு இடம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுவதையும் காண்கிறோம். இவ்வித எந்திரக் கிறுக்கில் வாழ்க்கையில் வேறு புனிதமான நோக்கமில்லாத – வெறும் சலிப்பும், அலுப்பும் தட்டும் நாகரிகத்தையே படைப்பதில் பெருமுயற்சி ஈடுபடுத்தப்படுவதைக் காண்கிறோம். இந்தச் சுழற்சி விதிப் போக்கில் ஒரு பொன் ஏட்டினை – பொற்காலத்தைக் கனவு கூடக் காண முடியுமா? அப்பாவித்தனமாக சிலர் கற்பனை செய்து ஒரு இலட்சிய புரிக்கு – இன்ப உலகிற்கு சென்று கொண்டிருப்பதாக அண்மைக் காலம் வரை சித்தரித்தார்கள்! மாறாக இன்று நமக்குக் கிடைக்கும் புள்ளி விவரங்கள் எந்திர யுகத்தில் கிறுக்கர்கள் எவ்வளவு பெருகியுள்ளனர். எத்தனை புதிய புதிய வியாதிகள் பரவியுள்ளன, குடும்ப வாழ்க்கைச் சீர்குலைவுகள் எவ்வளவு என்பன போன்ற சீர்கேட்டுச் செய்திகளைக் காட்டுகின்றன!

வாய்க்கும், கைக்கும் இன்று அடிபடும் 'விஞ்ஞானக் கண்கொண்டே' நோக்கினாலும், பெருவாரி மக்களுக்கு வேலை தரும் ஏற்பாடே நமது உற்பத்தித் திட்டத்திற்கு நியாயமான நிரந்தரமான அடிப்படையாக விளங்க முடியும் இந்தப் 'பெருவாரி உற்பத்தி' என்ற மயக்கம் மிகவும் பொல்லாதது! புறக் கவர்ச்சியினைக் கொண்டுள்ள இதிலிருந்து தெளிவு பெறுவது மிகவும் சிரமமான ஒன்றே! இந்த மயக்கந்தான் இன்றைய சீரழிவுகளை அனுமதித்துக் கொண்டிருப்பது அவசியமற்றவைகள் பெருகி வருகின்றன. செயற்கைத் தேவைகளில் மக்களைப் பழக்கப்படுத்துவதில், நமக்குக் கிடைக்கும் கல்வியும், போதனையும் விளம்பரமும் துணைபுரிந்து வருகின்றன!

சமூக ரீதியில் திட்ட வட்டமாகக் கட்டாயப்படுத்தும் முறைகளே இன்று செல்வாக்குப் பெற்று வருகின்றன. மக்களின் தேவைகளும்- விருப்பங்களும் இந்த விளம்பர நோக்கத்திற்கு ஒப்ப உருவாக்கும் மானக் கேட்டைப் பார்த்து வருகிறோம். இன்றைய சமுதாய அமைப்பின் நோக்கமே சீன நாட்டில் நடைபெற்ற ஒரு 'வரலாற்று' நிகழ்ச்சியை நினைப்பூட்டும் விதத்தில் அமைந்து வரக் காணலாம்! ஐரோப்பிய வியாபாரிகள் சீன நாட்டில் தங்களின் ஆதிக்கத்தின் காரணமாக, அந்த மக்களின் அபினிப் பழக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலாபம் கண்டு வந்தனர். அபினிப் பழக்கத்தை அந்த மக்கள் நிறுத்திக் கொள்ளும் காலமும் வந்தது. ஆனால் ஆதாயம் இந்த வழியில் கண்டுவந்த வெள்ளை முதலாளிகள் சீன மக்களின் மீது போர் தொடுத்து, மீண்டும் அந்தப் பழக்கத்தைத் திணிக்க முயன்றனர்! இது போன்றே, இன்றைய உற்பத்தி முறையும் தேவையற்ற ஒழுக்கக் கேடான பழக்க வழக்கங்களைப் புகுத்த சகல துறைகளிலும் ஒருவித விளம்பரப் போரை முடுக்கி விட்டுள்ளது என்றே கூறலாம்! எனவே வாழ்க்கையின் பல துறைகளிலும் எந்திரப் போக்கு கை வைக்கிறது! ஆகவே பொருளாதாரக் கண் கொண்டு நோக்கினாலும், பண்பாட்டு - ஒழுக்க முறையில் கவனித்தாலும், சமுதாயத்தில் இதன் விளைவுகள் தற்கொலைப் பாதையினையே காட்டுவதாக உள்ளன! காந்திய சர்வோதய மொன்றே மனிதப் பண்பினைக் கொண்ட தாய்மை - அன்பு - நிலையான அமைதி, உழைப்பின் உயர்வு என்ற பலமான அடிப்படையில் ஒரு நாகரிகத்தைக் காணத் திட்டமிடுகின்றது என்று உறுதியாகச் சொல்லலாம்.

மனிதனும், இயற்கையும்:

மனித சமுதாயத்தின் வரலாற்றில் பேராசை - செயற்கைத் தேவை - சிலமனிதர்களின் சித்த விகாரப் போக்கு ஆகியவற்றின் காரணமாக விஞ்ஞான வளர்ச்சியின் துணைகொண்டு சடவிதிகளை முடுக்கி விட்டு, அதன் வசத்தனாய் மனிதன் மாறி, வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அத்தியாயங்களை ஏற்படுத்தக் காண்கின்றோம். அப்போது இயற்கை உண்மை விளக்கம் ஒருவாறு பெற்றுள்ள அறிஞர்கள், இந்தக் கண்மூடித்தனமான போக்கைக் கண்டு எச்சரித்து, இடித்துரைத்ததோடு வேறுபல எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். என்பது புலனாகும். பதினெட்டாம் நூற்றாண்டில்...பிரான்சு நாட்டில் தோன்றிய பேரறிஞன் ரூஸ்ஸோ 'இயற்கையை நோக்கி திரும்ப' மக்களை அழைத்தலும் எந்திர வாழ்க்கை தொடங்கிய யுகத்தில் இயற்கை தன்னுள் கொண்டிலங்கும் இன்பத்தைக் குறித்து ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ச் வொர்த்து இசைத்ததும், அவர்கள் நிம்மதி நுட்பத்தால் - ஆழ்ந்த உள்ளுணர்வால் வளர்ந்து

வரும் கேட்டினைக் குறித்து உணர்த்தும் முன் முயற்றியாகவேகொள்ள வேண்டும்

இயற்கையின் போக்கில் நாம் கண்டு தெளிய வேண்டிய நியதி முறையைக் காந்திய சமுதாய விஞ்ஞானி பேராசிரியர் குமரப்பா, தமது 'சாகாத பொருளியல்' (Economy of permanance) என்ற ஒப்பற்ற நூலில் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"காலம், எல்லை இவற்றிற்கு உட்பட்டு ஒரு காலத்தில் தோன்றுபவை இன்னொரு காலத்தில் மறைந்தொழியும். இயற்கைத் தோற்றங்களில் விரைந்து தோன்றி மறைவதும், சற்று நீடித்து நின்று மறைவதும், இத்தனைக்கும் தாயகமாம், இயற்கை, கற்பனைக்கும் எட்டாத காலத்தில் தோன்றி, எண்ணத் தொலையாத ஒரு எதிர்காலத்தில் மறைவதுமாகிய செயல் நடந்து கொண்டே இருக்கின்றது. இதில் சமுதாய வாழ்க்கையில் நிலைபெற்றவைகள் என்று நாம் குறிப்பிடுவன வெல்வாம், ஒப்பிட்டு நோக்குதற்கு 'சற்று நிலையானது' என்ற கருத்தில் தான் எடுத்துக் கொள்கிறோம். முடிந்த கருத்தில் அவ்விதம் குறிப்பிடுவதாக இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உலகில் இயற்கை தரும் செல்வங்களில் நிலக்கரி, பெட்ரோலியம், தாதுப் பொருள்களான இரும்பு, செம்பு, தங்கம் ஆகியவைகள் ஒரு குறிப்பிட்ட அளவினைக் கொண்டவை. அவை எடுக்க, எடுக்க குறைந்து ஒரு சமயம் முழுவதுமே தீர்ந்துவிடக் கூடும்.

ஓடும் நீரும், வளரும் மரமும், காவும் அளவு தாண்டி நெடிது பயன் தந்து கொண்டிருப்பவை.

உயிர் வாழ்க்கையில் பல இணைந்து - பிணைந்தும் இயங்கி, மீண்டும் மீண்டும் தோன்றி தத்தம் சந்ததிகளின் மூலம் நீடித்து வாழ்வதைக் காணலாம்.

தாய்ச் செடியிலிருந்து விதை கீழ் விழுகிறது. மண்ணில் புதைந்து, முளைவிட்டு, ஆழத்தில் சென்று, அதன் மூலம் ஞாயிற்றின் தட்பவெட்பத் துணை கொண்டு, ஊட்டமளிக்கும் தாதுப் பொருள்களை மண்ணிலிருந்து வேர்கள் ஆகாரம் தேடிக் கொள்வது போல், செடியில் கிளைத்து வளரும் கொம்புகளிலுள்ள இலை தழைகளும் காற்றிலிருந்தும், ஒளியிலிருந்தும் ஊட்டம் பெற்று வளமுறுகின்றன. இதில் உதிர்ந்து சருகாகிவிடும் இலைகளும் மண்ணில் விழுந்து மக்கி மடிந்து பல தாதுப்பொருள்களாகி தாய்ச் செடி மண்ணிலிருந்தும், காற்று, ஒளிகளிலிருந்தும் பெறக்கூடிய பொருள்களாய் ஆகின்றன. இது இனி மேலும் தோன்ற விருக்கும் தலைமுறைச் செடிக் கொடிகளுக்கெல்லாம் மீண்டும் வளம் தந்து உதவுவதாகும்.

தேனீக்கள் முதலானவைகள் தங்களின் சொந்த நலனுக்காகச் செடியிலிருந்து தேனையும், மகரந்தத்தையும் சேகரிக்கும் போது பூவையும், வித்துக்களையும் செழிப்புறச் செய்து, அடுத்துவரும் தலைமுறை மீண்டும் தலைதூக்க வாழ்க்கை ஆதாரத்தைத் தோற்றுவிக்கிறது. பல தலைமுறைகளாய் இலை தழை உதிர்ந்து வளங்கொழிக்கும் நிலைமையினைப் பெற்ற மண்ணில் விழும் வித்து, மீண்டும் முளைத்துச் செழித்து வளரும். இவ்வாறு மீண்டும் வாழ்க்கைக சக்கரம் சுழல்வதாகிறது. இவ்விதமாக வாழ்க்கை தடையின்றி ஓடிக்கொண்டிருக்கிறது! இயற்கையில் வேலை தொடர்ந்து முடிவின்றி இவ்விதம் சென்று கொண்டுள்ளது. அது நிலைபெற்றுத் திகழ்கிறது!

இயற்கையில் பணியும், ஊதியமும்

உணர்வுள்ளவைகளும் அல்லாதவைகளுமாகச் சேர்ந்து, பலவற்றின் கூட்டு முயற்சியுடன் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று பூர்த்தியாவதாயுள்ளது. எப்போதாவது, எந்த இடத்திலாவது, அறிந்தோ, அறியாமலோ இந்தச் சக்கரம் நொறுங்கி, அதன் காரணமாக வன் செயல் எழுந்து, குறுக்கிடுமானால், வளர்ச்சி அல்லது முன்னேற்றம் தடைப்பட்டு, முடிவில் அழிவும் விரயமுமாகக் கழிகிறது. இயற்கையோ மன்னிக்கும் தன்மையில்லாததாயும், கொடுமை ஆற்றல் கொண்டு மிருப்பதாம் அன்பும் (அகிம்சை), ஒத்துழைப்பும் இயற்கையின் வழிகளுக்கு இயைந்து செல்வதால் தன்னல தற்காப்புக்குக் காரணமாய் அவசியப்படுகிறது. வாழ்வின் சுழற்சிவிதி யோட்டத்தில் தலையீடு இல்லாமலும், குறுக்கு வழியில் போக்குக் கொள்ளாமலும் இருந்தாலே நாம் நீடித்த வாழ்வைப் பேண முடியும்.

உணர்ச்சி வளர்ச்சி பெற்றுள்ள உயிர்வகைகளும் வாழ்வதானால், தங்களது சொந்த எல்லை மட்டத்தில் அணியாயத் திரண்டு முறையான வழியில் இயங்கியாகவே வேண்டும். மண்புழுவானது மண்ணில் அதனது இயக்கங்களினால், மண்ணை அசைப்பித்து, காற்றையும், நீரையும் இழுத்துக் கொள்ளும். தாவரச் சத்துள்ள மண்ணை உண்ணும்போது பலபொருள்களை வயிற்றிலிருந்து கலக்கம் செயது, செழுமையான மண்ணுக்கி வெளியில் தள்ளுகிறது. இவற்றிலிருந்து செடிகொடிகள் தத்தம் ஆகாரத்தை இலகுவில் கிரகித்துக்கொள்ளும்.

(மாட்டு உரம் போன்றவைகளைக் கைவிட்டுவிட்டு, இரசாயன உரவகைகளைப் பயன்படுத்துவதால், சிலகாலம் நல்ல விளைவைப் பெறலாம். தொடர்ந்து பயன்படுத்தினால், மண் புழுக்கள் அழிந்தொழியும். ஏனெனில் இரசாயன உரத்தை அவை உண்ண முடியாது. மண் புழு மடிந்துபோனால், மண் இறுகி இறுதியில். வளமிழந்து போய்

விடும். பண்ணை உரமும், தாவரச் சேர்க்கை உரமும் கைவிடப்பட்ட தன் பயனாக, இயற்கையின் சுழற்சி விதியில் குலைவு ஏற்பட்டு, நிரந்தரப் பொருளாதாரத்திற்குப் பதில் மனிதனால் தோற்றுவிக்கப் படும்நிலைமாறிப்போவதானபொருளாதாரத்திற்குஇடமாகி விடுகிறது.)

மண்ணுக்கும், செடிகொடிக்கும், கால்நடைகளுக்கும் இடையே நிலவும் உயிருள்ள இணைப்பு பிணைப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டு தேனீ, பட்டுப்பூச்சி ஆகியவை செடிகொடிகளின் பூக்களைச் செழுமை யுறச் செய்வதான இந்த ஒத்துழைப்பு ஆகும்.

இத்தகைய பணிக்கு அல்லது 'வேலை'க்குக் கைமாறாக உழைக்கும் பிரிவு உணவைப் பெறுகிறது. இவ்வாறு இயற்கையானது, காற்று, நிலம், நீர் ஆகியவற்றிலுள்ள உயிர், உயிரற்ற பல தொகுதிகளின் கூட்டு ஒத்துழைப்பினால் பெறும் நன்மைக்கெல்லாம் சேர்த்து, உண வாகவும், ஊட்டமாகவும் உண்மையான கூலியை நல்கும்.

தாவர உலகின் வாழ்க்கை இடம் பெயர்ந்து செல்லும் இயக்கம் இல்லை. அவற்றின் வித்துக்கள் அவற்றின் அடியிலேயே விழும். இப்படி விழும் வித்தெல்லாம் தாய்ச் செடியின் அடியில் கிடப்பதனால், மூச்சுக் கூட விட முடியாத நெருக்கம் ஏற்படும். எனவே வித்துக்களை தூர தொலைவில் எடுத்துச்சென்று விதைப்பது அவசியம். இந்தப் பணியை, இயற்கையானது பறவை, விலங்கினங்களின் மூலம் சாதித்துக் கொள்கிறது. இங்கும் இயங்கும் உயிரினம் அவற்றிற்கே உரிய பணியினைச் செய்கிறது. தாவரங்களினின்று பழவகையினைத் தின்னும் பறவைகள், பல மைல்களுக்கப்பால் அவற்றின் வித்துக் களைக்கொண்டு செல்கின்றன. பிறருக்கான கடமை உணர்வின் காரணமாகச் செய்யாது, தமது வாழ்வின்போக்கினிலேயே தன் உணர் வின்றிச் செய்வதும், பசிவந்து தின்பதும். இவ்வாறு தமது ஆகாரத் தேவை நிறைவுசெய்து கொள்ளும்போதே, வாழ்வுச் சக்கரம் முழுமை யாக சுழலுமாறு செய்விக்கின்றன.

இவ்வாறு, இயற்கையானது பல்வேறு பிரிவின் ஒன்றுபட்ட கூட் டுறவுடன் இயங்கும், இவை தத்தம் போக்கில் செல்லும் போதே, ஏனையவற்றின் இயக்கத்திற்கும் துணைபுரிவதுடன், அசைவுள்ளது - அசை வற்றது, உணர்வுள்ளது - உணர்வற்றது ஆகியவைகளுக்கும் உதவும் விதத்தில் இயைந்து செல்வதை நாம் காண்கின்றோம். ஆகவே இயற்கை யாவுமே ஒன்றோடு ஒன்று இணைந்து பொது நோக்கமொன் றிற்கு அணிதிரண்டு செல்வதாயுள்ளது. தனக்கேதான் என்ற முறை யில் எதுவும் காணமுடியவில்லை. இத்தகைய இயைபுடன் கூடிய இயக் கத்தின் பயனால், இம்சை குறுக்கிட்டு இச்சங்கிலித் தொடரைத்

தகர்க்க முடியாது. ஆகவே, நிலையான பொருளாதார வாழ்வினை நாம் பெறக்கூடும்''

கவி இரவீந்திரநாத தாகூர், 1930ல் மான்செஸ்டர் கல்லூரியில் நிகழ்த்திய ஹப்பர்ட் சொற்பொழிவில் 'மனிதனின் சமயம்' பற்றிப் பேசும்போது விவரிப்பார்.

"என் தார்மீக அனுபவத்தைப்பற்றி ஆராயும்போது, நான் இயற்கையோடு நெருங்கிப் பழகிய போதுதான் முதன்முதலாக இந்த மகத்தான உண்மையை உணர்ந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். இயற்கை என்றால், மனத்தில் பதியும்படி பலவிவரங்களை நமக்கு உணர்த்தும் சாதாரண ஒன்றையோ, உயிருடன் கூடிய இந்தப் பூதஉடலோடு தொடர்பு கொண்ட ஒன்றையோ அன்று; பல விதங்களிலும் அனுபவம் மூலம் வெளியாகி, ஆன்மாவிற்குத் திருப்தி தரும் இயற்கையைத்தான் குறிப்பிடுகின்றேன். இந்த அனுபவங்களே நம் வாழ்வு செழிக்கும்படி செய்கின்றன; பலவேறு உருவங்களிலும், வண்ணங்களிலும், ஒலிகளிலும், அசைவுகளிலும் ஒரு இசைவு – இலயம் (Hormony) இருப்பதை உணர்த்தி, நம் சிந்தனையைத் தூண்டுகின்றன.

விஞ்ஞான உண்மைக்குச் சான்றாக அமைந்து வெறும் சின்னமாக (Symbol) இருந்து மறையும் உலகம் அல்ல இது; ஆன்ம அனுபவமாகப் பல உண்மைகளை வாரி வழங்கி, நம் மனிதப் பண்போடு தொடர்பு கொண்டு அதில் மாறுதல் ஏற்படும்படி செய்யும் உலகமே இது."

இவ்வாறு இயற்கையில் காணும் இசைவான நியதி, மனித சமுதாயம் அகவாழ்வினின்றெழும் ஒழுக்க நெறியில் செல்லத் தூண்டும். இயற்கையில் உள்ளும், புறமும் நல்ல இணக்கம் காண்பது ஞானிகளுக்குரிய அனுபவம். மனித சமுதாயத்தில் இணக்கமான போக்கு நிலை கொள்வது தவிர்க்க முடியாதது. பிணக்கும், மோதலும் இருப்பது மனித குலம் நிலமிசை நீடு வாழத் துணைபுரியாது. அத்துடன் மனித இனத்திற்குத் தாயாக விளங்கும் இயற்கையுடன் நேரான உறவு நிலையை வைத்துக் கொள்வதும் அவசியம். இயற்கையின் பல கூறுகளிலும் நியதியையும், ஒழுங்கையும் கண்ணுற்று வரும் மனிதன் இயற்கையின் இணைபிரியாப் பகுதியாகவே வளருகின்றான். அவன் இயற்கைச் சூழலிலேயே வாழ்ந்து தீர வேண்டியவன். யாவற்றையும் உணர்ந்து செயலாற்றும் அறிவுத் திறமும், ஞானமும் படைத்த மனிதன் அறிவோடு கூடிய உறவு நிலையை இயற்கையினிடம் காண வேண்டும். முன்னேற்றம் என்ற பெயரால் பல வழிகளிலும் உறவு நிலையில் முறிவு ஏற்பட அடிகோலு

வது ஆக்கம் தரும செயலல்ல. ஆங்கில நாட்டின் கலை இரசிக மேதை இரஷ்கின் கலைத்துறையை விடுத்து, பொருளாதார வாழ்வில் நெறி கெட்டுச் செல்லும் போக்கைக் கண்ணுற்று திருத்த ஆர்வம் காட்டினார். இரஷ்ய நாட்டின் பெரும் தனவந்தர் குடும்பத்தைச் சேர்ந்த டால்ஸ்டாய் என்னும் கலை இலக்கிய பேரறிஞன் தமது ஆடம்பரத்தைக் கைவிட்டு, ஆன்மீய நோக்கில் உலகியல் சிக்கல்களை ஆராய்ந்து உணர்த்த முன்வந்ததும், அவர்களின் நுட்பமான உணர்வின் உள்ளெழுச்சி தூண்டல் என்றே கூறலாம். இயற்கை நல்லுணர்வு மிகுந்து விளங்கிய காந்தியடிகள் இன்றையச் சீர்கேட்டினுக் கெல்லாம் முழு வடிவம் நல்கி, ஆற்றல் மிக்க வாழ்க்கைக் கோட்பாடாய் உயிரூட்டி நமக்கு வழங்கினார். உலகின் வேறு எந்த அறிஞனுக்கும் உலக வரலாற்றில் கிடைக்கொணாத பெரும் பாத்திரம் காந்தியடிகளுக்குக் கிடைத்தது. இந்த பரந்த நாட்டினையே தமது ஆன்மவழி உலகியலைக் குறித்த விஞ்ஞான சோதனைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பாயும் ஆக்கிக் கொண்டார். இந்த நாட்டின் நிலைக்களத்தினின்று உலகின் போக்கைச் சீர்தூக்கி ஆய்ந்து, அதனை மனிதத்தன்மையுள்ளதாயும், ஆன்மீய வாழ்வின் விழுப்பம் ஓங்கத் தக்கதாயும் நெறிப்படுத்தும் பணியினை, வரலாற்றின் நெருக்கடியான கட்டத்தில் மேற்கொண்டிருந்தார் காந்தியடிகள். வில்டூரண்ட் தமது புகழ்மிக்க 'தத்துவ ஞானத்தின் கதை' என்ற நூலில் உணர்த்துவது போல், பலதுறை விஞ்ஞானக்கிளைகளும் பிரிவுகளும் மனித மூளை ஏற்றுக் கிரகித்துக் கொள்ள முடியாத அளவு மிகுந்து விட்டன. அதிலும் ஒன்றொன்றும் தத்தன் தனித்தன்மையயான சொற்றொடர்களையும், வார்த்தைகளையும் பெற்றெடுத்து புரியாத அளவுக்கு வளர்க்கப்பட்டு வளமுறுகின்றன. தேவைப்படுவதான முயற்சி, இவற்றில் பொதுத் தன்மைகளைக் கண்டு மனிதன் எடுத்துக் கொள்ளும் விதத்தில் பண்பினைப்பெறச் செய்வதென்பதே! எனவே மனிதப் பண்பினை வளர்க்கும் கொள்கையினைக் கருத்தில் கொண்டு உலகின் பித்தைத் தெளிவித்து, நேர் பாதையில் நெறிப்படுத்த அவர் முனைந்த வழியின் மதிப்பை இன்று பலதுறை சமுதாய விஞ்ஞானிகளும் அவர்களின் சொந்த வழியிலேயே சென்று, கடைசியாக காந்தியடிகள் தமது உள்ளுணர்வின் சிறப்பினால் கண்டு கையாண்ட கோட்பாட்டின் முடிவுக்கே வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதில் வியப்பொன்றுமில்லை.

காந்தியடிகள் கண்டு கையாண்ட "சுதேசியம்"

நமது பாரம்பரியமாயும், புதிய சூழ்நிலைகளில் நாம் தேடிக் கண்டு கொண்ட மகத்துவம் கொண்டதாயும் உள்ளது காந்தியடிகள் வழங்கிய சுதேசியம் என்னும் கோட்பாடு. சுதேசிய விதியை — காந்தியடிகள் கண்ட முறையினைக் காண்போம்.

''இயற்கை விதிகளைப் போலவே, சுதேசியின் விதியும், மனிதனின் அடிப்படையான இயல்போடு தொடர்புள்ள ஒன்று. ஆனால் இன்று மனிதன் அதனை மறந்து விட்டான். எனவேதான் சுதேசியம் என்ற 'சபதம்' எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. இதன் முடிவான – ஆன்மீய கருத்தில் பூமியின் கட்டுத்தளைகளி லிருந்து விடுபட்ட ஆன்மாவின் முடிவான விடுதலைக்காக சுதேசி நிற்கின்றது. புவியுடன் இதற்குள்ள தொடர்பு, இதன் இயற்கையான அல்லது நிரந்தரமான உறைவிடமல்ல. இதன் முன்னேற்றிற்குத் தடையாகவும் இருக்கக்கூடும். அனைத்து உயிர்த்தொகுதிகளுடனும் ஒத்திணைந்து செல்வதற்கும் குறுக்கே நிற்பதே. படைப்பு அனைத்தி லும் தன்னையே காண முயலும் 'சுதேசி பக்தன்' இந்த உடலின் கட்டுத்தளையிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளவே முயல்வான்'' வள்ளுவன் கூற்றுப்படி ''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்'' – என்ற தெளிவினைப் பெற்று, 'பிறப் பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை' என்ற நிலையும் அடையப் பெறுவர்!

எனவே இங்கு சுதேசியம் என்னும் போது, முடிந்த விளக்கமாக எல்லா உயிர்த் தொகுதியும் ஒரே தன்மையது எனறும் ஆன்ம நேய உரிமை உணர்வுடன் கூடிய முழு விடுதலையே யாகும். அதுவே ஆன்மாவின் இயல்பான நிலை என்பதாகவும் உணரப்படும்.

கீதை சொல்லும், 'ஒருவனுடைய சொந்தக் கடமையை சுதர்மத் தைச் செய்வதிலேயே மடிவது நல்லது. பரதர்மம் அல்லது பிறர் செய்ய வேண்டிய கடமையை கைக்கொள்ள எண்ணுவது ஆபத்தை விளைவிக்கும்! ஒருவனது சுற்றுச் சார்புக்கு ஏற்ப இதற்குப் பொருள் கொள்வதானால், இதுவே சுதேசி விதிக்கு விளக்கமாயும் அமையும். கீதை சொல்லும் சுதர்மமே சுதேசிக்குப் பொருந்துவதாயுள்ளது. ஏனெனில் ஒருவனது சுற்றுப் புறங்களுக்குச் சுதர்மத்தைக்கொண்டு வருவதிலேயே சுதேசி அடங்கும்.'

இங்கு வள்ளுவ பேராசான் தெருள் உரையினைக் கருதி பார்க்க நயம் பயக்கும்.

''தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார் மற் றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு.''

'சுதேசி விதி என்னிடம் எதிர்பார்ப்பது, எனது குடும்பத்திற்குரிய நியாயமான கடமைகளை, நேரிய வழியால் செய்ய வேண்டுமென்பதைத் தவிர வேறல்ல. இந்த முயற்சியிலேயே அனைத்துக்கும் பொருத்தும் படியான நடத்தை விதியையும் அறிந்துகொள்ள முடிகிறது. சுதேசி யத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவது, எவருக்கும் தீமை பயப்பதில்லை.

அப்படி தீமை தருவதானல் அது சுதர்மமல்ல. அகந்தையே என்னை அப்படி இயங்க வைத்ததாகும்.

'எவனொருவன் தன் வாழ்க்கையைப் பேணுவானே, அவன் அதனை இழந்துவிடவே செய்வான். எவனொருவன் இறைபணியில் தன்னை இழக்கின்றானே, அவனே அதனைப் பெறுவான்' என்னும் வழக்குமொழி தனி மனிதனுக்குப் பொருந்துவதுபோல், குடும்பத்திற்கும் நன்கு பொருந்தும். சுதேசியத்தில் சுயநலத்திற்கு இடமில்லை. அல்லது அதில் சுயநலமென்பது இருக்குமானல், அது யாருக்கும் பணி செய்வதற்கு உரியமனப்பாங்கினைக் கொண்ட, உயர்ந்த ஒன்றெனவே கொள்ள வேண்டும்.

இந்த மாதிரியான கருத்துப் போக்கைத் தொடர்ந்து. சமுதாயத்தில் சுதேசியக் கொள்கையைக் கொண்டுவரும் முறையிலேயே அதன் முழுமுதற் கொள்கையாய் 'காதி' எனக்கு உதயமானது: எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன்; இந்திய நாட்டின் பல கோடி மக்களுக்கும் இத்தருணம் மிகவும் அவசியப்படுவது யாவரும் எளிதில் உணர்ந்து, புரிந்து கொள்ளக்கூடியதான – சுலபமாகக் கையாளக் கூடியதான ஒன்றாகும் – அதே தருணத்தில் நமது நாட்டின் அரைப் பட்டினியாய்க் குறைவுற்ற வாழ்வினில் உழலும் கோடானுகோடி மக்களுக்கு வாழ்வு அளித்து உதவுவது எத்தன்மையான தொழில்? இதற்குக் கிடைத்த பதில் தான் 'காதி' அல்லது நூற்புக் கருவியை எங்கினும் பரவச் செய்ய வேண்டும் என்னும் பணியாம்.

காதி மூலம் சுதேசியத்தைக் கையாள்வதால், வேற்று நாட்டு அல்லது இந்திய ஆலை அதிபர்களுக்குத் தீமை பயக்குமே என்று கருத வேண்டியதில்லை. திருடனைத் தீய செயலிலிருந்து விலக்குவதாலோ, அல்லது திருட்டுச் சொத்தை திருப்பி உரியவர்க்குச் சேர்த்துவிடச் சொல்வதாலோ கெடுதல் ஏற்பட்டு விடும் என்று சொல்ல முடியாது அதற்கு மாருக. உணர்ந்து அடையும் பெரும் பயன் ஒரு பக்கமும், உணர முடியாத நிலைமைகளிலும் பெறக்கூடிய பயன் இன்னொரு பக்கமும் அடையப் பெறுவான். இது போல் உலகிலுள்ள அபினிப் பழக்க வழக்க முள்ளவர்களோ, குடிகாரர்களோ இத் தீமையைக் கைவிட்டு விட்டார்களானல், ஆதாயத்தை இழக்கும் கடைக்காரர்களையும், அபினி வியாபாரிகளையும் இழப்பவர்களாகச் சொல்ல முடியாது. உண்மையான பொருளில், அவர்களே ஆதாயமடைந்தவர்களாவர். பழிபாவச் சுமையைக் களைவது சம்பந்தப்பட்டவனுக்கோ, அல்லது சமுதாயத்திற்கோ இழப்பு ஆவதில்லை. தூய்மையான ஆதாயமாகவே கொள்ள வேண்டும்.

மேலும் 'நடிப்பு சுதேசி' அபிமானிகளையும், வாயை திறந்து, சும்மா 'வந்தே மாதரம்' – 'காந்திக்கு ஜே!' போடுபவர்களையும்பற்றி பின்வருமாறு படம்பிடித்துக் காட்டுவார் அடிகள்.

'சுதேசிக் கடமை சிறிது நூற்பதோடும், நூற்றதைக் கொண்டு நெய்த காதியை அணிந்து கொள்வதுடனும் தொடங்கி அதனோடு முடிந்து விடுவதில்லை: அப்படி நினைப்பது நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகும்: காதிதான் சமுதாயத்திற்குத் தர்மத்தை நிறைவேற்றும் முழுமுதல் தவிர்க்கவொண்ணு ஏற்பாட்டினைக் கொண்டதாகும். ஆனால் காதியை மாத்திரம் அணிந்துகொண்டு பிறவற்றில் வேற்று நாட்டு – விதேசிச் சரக்கினிலே மதிமயங்கித் திரிபவர்களையும் சந்திக்கவே செய்கிறோம். இப்படிப்பட்டவர்களை, சுதேசியத்தில் ஒழுகுபவர்களாக நாம் சொல்லமுடியாது. அவர்கள் காலத்திற்கேற்ற கோலத்தையே தழுவுகின்றார்கள். அவ்வளவே!

உண்மையான சுதேசி அபிமானி கருத்துடன் தன் சுற்றுப்புறத்தை ஆராய்வான். தரத்தில் குறையுடையதாயிருந்தாலும், வேற்று இடங்களில் தயாரிக்கப்படும் பொருள்களிலும் விலை அதிகமாயிருந்த போதிலும், தத்தம் பகுதிகளில் தயாராகும் பொருள்களிலேயே விருப்பம் கொண்டு, எந்தெந்த வழிதுறைகளிலெல்லாம் அண்டைவாழ் மக்களுக்கு உதவமுடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் உதவ முயல்வான். அவற்றின் குறைகளை நிவர்த்திக்கவே முயல்வான். குறைகள் இருக்கின்றதென்பதற்காக, அன்னியச் சரக்கினை விரும்பிச் சொந்தச் சரக்கினைக் கைகழுவி விடமாட்டான்.

மேலும் அடிகள் சுதேசி அபிமானம் மாத்திரம் இருந்து போதிய ஊக்கமும், உழைப்பும் காட்டாத தவற்றையும், சுதேசி அபிமானம் காரணமாக வேற்று நாட்டாரைப் பகைவராய்க் கருதி நடக்கும் தவற்றையும் நன்கு சுட்டிக் காட்டுவார்.

'ஆனால் ஏனைய நல்லவைகள் பல அழிந்தொழிந்தன போல் சுதேசியும் நோக்கமற்றதாகி விடுமேயானால், அழிந்தொழிய வேண்டியதே. இந்த அபாயத்திலிருந்து நீங்கா விழிப்புடன் இருக்க வேண்டும். அன்னியச் சரக்கு என்பதற்காகவே அவற்றைப் புறக்கணிப்பதும், நமது நாட்டின் காலத்தையும், பொருளையும் நாட்டிற்கும் பொருந்தப் உற்பத்தி நடவடிக்கைகளில் விரயமாக்குவதும் தண்டனைக்குரிய மடமையாகும். சுதேசி உணர்வுக்கும் எதிர்மாறானது. உண்மையான சுதேசி அபிமானி அன்னியர்களின் மீது மனக்கசப்பைப் பேணிவரவே மாட்டான். உலகின் மீதுள்ள எவரிடத்தும் பகைமைகொண்டு செயல்பட மாட்டான். சுதேசியம் பகைமை பாராட்டும் கோட்பா

டல்ல. தூய்மையான அகிம்சையில் – அன்பில் வேரூன்றி தன்னல மற்ற பணியினை மேற்கொண்ட கோட்பாடே இது.'

இந்த வழியில் நமது கவனத்தைத் திருப்பிவிட்டு, இனி நாம் அடிகளின் இலச்சிய அமைப்பினைத் தன்னுள் கொண்டுள்ள கிராம வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும் நமது கவனத் திற்கு கொண்டு வருவார்.

'எனவே, நமது தெளிவான கடமை கிராமீய இராட்டை, கிராமீயச் செக்கு, உரல் போன்றவைகளை நிலைபெறச் செய்யவு மான வாய்ப்புகளை ஆராய்வதும், அவற்றைக் கொண்டு தயாராகும் பண்டங்களை விளம்பரஞ் செய்யவும் அவற்றின் குணச் சிறப்பைக் கண்டு பிடிப்பதும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் நிலைகளைக் கணித்து விசை எந்திரத்தால் விரட்டியடிக்கப்பட்ட உழைப்பாளிகளின் தொகையை நிச்சயிப்பதும், கிராமீயக் கருவிகளின் பண்பியல்பை அப்படியே வைத்துக்கொண்டு, திருந்திய முறைகளைக் கொண்டு, ஆலைகளின் போட்டியிலிருந்து தாக்குப் பிடித்து நிலைக்கத் தகுதிமிக்கதாய் வளமுறச் செய்யவும் ஆராய வேண்டும். எவ்வளவு, பயங்கரமாக, தண்டனைக்குரிய நிலையில் நாம் அவற்றைப் பாராமுகமாய் இருந்துள்ளோம்! இங்கு நூற்பு, சர்க்கரை, அரிசி ஆலைகளின் மீதெல்லாம் நமக்குப் பகைமையில்லை!

காந்தியடிகளின் இணையற்ற சீடரும். உலகின் பொருளியல் வளர்ச்சியினை நேரில் கண்டு ஆராய்ந்து. தேர்ந்த மதிநுட்ப திட்பம் படைத்த மேதையான குமரப்பா, இத்துறைக்காகத் தம் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்துக்கொண்டு, சாகா வரம் பெற்ற கிராமீயக் கைத்தொழில்களின் தன்னேரில்லாச் சிறப்பினை உலகினுக்கு விரித்து உணர்த்தியுள்ளார்! அந்த வழியில் இந்த நாட்டில் பல இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டு, பல இலட்ச மக்கள் தமது வாழ்க்கையில் மேற்கொண்டு பயனடைவதை இன்று காணலாம். இந்த வழியில் காந்தியடிகளைப் பின்பற்றி விநோபா அடிகளும் இயக்கி வைத்துள்ள பல அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. விடுதலை பெற்ற பாரத நாட்டின் மத்திய–மாநில அரசுகளும் சில அமைப்புகள் கண்டு ஒரு சிறிது செயல்பட்டு வந்துள்ளன!

இந்தத் தொழில்களைக் கொண்டு பல்கிப் பெருகிவரும் மக்களுக்கு வேலை வாய்ப்பும், தேவைப் பூர்த்தியும் உறுதிப்படுத்தக் கூடுமா?— என்ற ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமில்லாது அறுதியிட்டுக் காந்தியடிகள் கூறுவார். ''இந்தத் துறையில் முறைப்படுத்தப்பட்ட வேலை நடக்குமானால், இந்த பிரிவு இலாகா தன் நிறைவு பெற்றும், புதுத் திறமை கொண்டும், எவரையும் வெளியேற்றாது வேலையற்ற படித்த

வர்களையும், படிக்காதவர்களையும் கௌரவமான வேலை வாய்ப்பினுக்கு ஆட்படுத்தக்கூடும். வறுமையுற்றுவரும் இந்த நாட்டின் செல்வம், ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் பெருக்கப்படும் என்பதும் எனது உறுதியான நம்பிக்கை!

ஒரு புள்ளி விவரம்!

காதித் தொழிலிலும், ஆலைத் தொழிலிலும் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ள மக்களின் தொகை—அதற்கான செலவு ஆகிய விவரங்களை சென்னைக் கதிர் (காதி) இலாகா தருவதனை இங்கு கொடுப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்தியா முழுவதும் 1957—58ல் 11—36 இலட்சம் பேர் கதர் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்' அவர்களின் எண்ணிக்கை 1958—59ல் 15 இலட்சத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. சென்னை மாநிலத்தில் மட்டும் சுமார் 4—32 இலட்சம் பேர் கதர் தொழிலில் வேலை வாய்ப்பினைப் பெற்றுப் பயனடைந்தனர்.

1959 புள்ளி விவரங்களின்படி, இந்தியாவில் 479 பஞ்சாலைகள் இயங்கின. அவற்றில் 292 ஆலைகள் நூற்பிலும், நெசவிலும் ஈடுபட்டுள்ளன. மற்றவை நூற்பை மட்டுமே மேற்கொண்டுள்ளன. இவையனைத்திலும் மொத்தமாக 8-9 இலட்சம் தொழிலாளர்களே வேலை பெற்றிருக்கின்றனர். இந்த ஆலைகளை நிறுவுவதற்கான மூலதனமோ ரூ. 122 கோடியாகும்! ஆனால் ரூ. 55·5 கோடி மூலதனத்துடன் நடத்தப்படும் கதர்த் தொழில் வாயிலாக 15 இலட்சம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

சென்னை மாநிலத்தில் 133 நூற்பு, நெசவு ஆலைகள் உள்ளன. அவற்றில் 1-32 இலட்சம் பேர் வேலை செய்கின்றனர். ஆனால் கதர் நிறுவனங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றிருப்பவர்கள் 4-32 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

சுமார் 30 ஆண்டுகளாகப் பஞ்சாலைகளின் பாதுகாப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் ரூ. 1176 கோடி வரை உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்வதற்கும், பஞ்சாலைகளுக்குச் சலுகைகள் எவ்வளவோ அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே பஞ்சாலைகளின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் செலவிடப்பட்டுள்ள தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் கதருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை மிகமிக குறைவு என்பது தெளிவு!''

கிராமங்களின் தொழில் வளம்

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக் கின்றேன்!
பிரம தேவன் கலையிங்கு நீரே!
மண் ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

இவ்வாறு உழைப்பாளி மக்களை வாழ்த்தும் விதத்தில், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வார் பாரதி. தாய்த் தொழிலாம் பயிர்த் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் துணைக் கொண்டு, இயற்றப்படும் தொழில்கள் ஏராளம். அத்தனை கிராமீயத் தொழில்களும் தடையின்றி யியங்குமானால், அந்தநிலை தொழில் வளத்தைக் குறிக்கும் ஏற்பாடுதானே! ஆயிரமாயிரம் கிராமக் கைத்தொழில்களை விடுத்து, வெள்ளமெனப் பெருகிவரும் மக்கள் தொகுதிக்கு உழைக்கும் வாய்ப்பினை அபகரித்துக்கொண்டு, கிராமங்கள் பேணி வளர்த்துக் காத்துவந்துள்ள கைத்திறப் பணிகள், கலைநிறை தொழில்கள் மற்றும் செயல் திறம் சாகடிக்கப்படும் ஒரு ஏற்பாடுதான் தொழில் வளமென்று கொள்ள வேண்டுமா?—குமுறி ஓலமிட்டுவரும் இன்றைய உலகினுக்கு விடுதலை பெற்ற புதிய பாரதம் இதனைவிட வேறு நல்லற வழி காட்டத்தான் கூடுமா? உயர்ந்த இலட்சியம்— எண்ணம், சிறந்த சிந்தனை என்பதெல்லாம் பணத்தாசைக்கு வந்தனையும், வழிபாடும், பூசனையும் செய்யும் 'விரைந்த வேகத்தைக் கொண்டுள்ள சிக்கல் படைத்த' பொருளாதார அமைப்பினுக்கு புறம்பான ஒன்றே! வாழ்க்கையின் எழிலும், இரசனையும் மேன்மை கொண்டிலங்கும் வாழ்க்கைக் கலையைக் கற்று உயர்வதிலேயே அடங்கும். 'எளிய வாழ்க்கை' இலட்சியம் தனி மனிதனுக்கு மாத்திரமே பொருந்துவதான ஒன்று என்று சொல்லக் கூடியதல்ல—மாறாக, சமுதாய முழுவதற்குமே பயன்தரவல்ல ஒரு பண்பில் சிறந்து ஒளிரும் பண்

பாட்டு வழிமுறையாகும். எனவே இந்திய நாட்டின் பண்டைச் சிறப்புமிக்க தொல்குடி பயின்ற கிராமிய கைத்தொழில்களுக்கு வரக்கூடிய வளரும் இலட்சிய அமைப்பிலும் பெருமை நலமிக்க இடமுண்டு! அத்துடன் அதுவே மக்கள் தொகுதி வாழும்—வாழ வேண்டிய வாழ்வு முறையுமாகும்!

புதிய மால்தூசிய சிந்தனை

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற" —என்பது வள்ளுவர் தந்த பொய்யா மொழி! மக்கள் பேற்றினை இனிது இனிது – அமிழ்தினும் இனிது – மழலைச் சொல் குழலினும் இனிது, யாழினும் இனிது – மக்கள் தம் மெய் தீண்டல் உடற்கின்பம், மற்று அவர் சொற்கேட்டல் இன்பம். ஈன்ற பொழுதிற் உவக்கும் தாய் – தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட போது பெரிதும் உவக்கும்! இத்தகைய மக்கட் பேற்றினை தவத்தின் பயனாகப் போற்றுவது நமது மரபு! – இந்த மரபினை கத்தோலிக்க கிருத்தவனிலிருந்து – பொதுவுடைமை புரட்சிக்காரன் வரை போற்றுவான்!

இன்று வைய வாழ்வுக்கு நேரான வழி சொல்ல மறந்துவிட்ட அறிஞர்களுக்கு மால்தஸ் வழி ஒரு 'வரப்பிரசாதமாகும்'! உலகில் மக்கள் தொகை பெருகிவருவதைப் பெரும் அபாயமாக எச்சரிக்கும் பணியினை மேற்கொண்டவர் மால்தஸ் என்னும் பொருளாதார நிபுணர்! கோளாறு படைத்த இன்றைய சமுதாயப் பிற்போக்கு இப்படித் 'தத்துவ வக்கரிப்புக்களையும்' வள்ளன்மையோடு வழங்கும்! மக்கள் வெள்ளத்தைத் சமாளிக்க முதலாளித்துவ உற்பத்தி முறை பல உபாயங்களைக் காண முயன்றது! தொழில் முதலாளித்துவம் தோற்றுவித்த வேலையின்மை – மூலப் பொருள் தேவை வியாபாரச் சந்தைக்கான போட்டி – ஆகிய சிக்கல்களுக்கு இனவெறி – போர் வெறி மார்க்கங்களைக் கொண்ட 'நாசிஸம் – பாசிஸத்தை' கண்டது! இந்த அடிச் சுவட்டில் சென்ற 'வியாபாரிகள் போக்கே' சர்வநாசக் குண்டுகளை வைத்துக்கொண்டு உலக அரங்கில் பேரம் பேசுவதும், பயமுறுத்தல், கெடுபிடிப் போர் – பயங்கரப் படு செயலான அணு சோதனைகளைக் கையாள்தல் முதலிய 'திருவிளையாடல்கள்' புரிந்து வருவதாயிருந்துள்ளன!

புதிய மால்தூசிய சிந்தனையாளர்களின் இனவிருத்தக் கட்டுப்பாட்டு உபாயங்களான 'கருச்சிதைவு, கற்ப்பை அறுவை, காய் அடித்தல்' போன்றவைகள், தும்புக் கயிற்றை விடுத்து கன்றின் வாலைப் பிடிக்கும் கதையாகவே அமையக் காண்போம். மானிடப் பூண்டுச் சிக்கல்களுக்கு இவ்விதம் தீர்வுகாண எண்ணும்போது மனித

னின் ஆன்மீயச் சிறப்பு, ஒழுக்கசீலம், பண்பு வளர்ச்சி ஆகியவை அடிபட்டுவிடும். மனிதனின் ஒழுக்க சீலத்தையும், பண்பு நலத்தையும் கருத்தில் கொள்ளாத இந்த உபாயங்களெல்லாம், மனிதனை விலங்கினத்தையும்விட கீழாக மதித்து, வெறும் சடபூதமாகவே அவனை மதிக்கும் தவற்றினைக் கொண்டதாகும்! புறச் சக்திகளை நம்பி, நம்பி அகவாழ்வினை கீழ்த்தள்ளி அதன் சிறப்பை குலைத்து வருகின்றனர். காரணம் அவர்களைச் சூழ்ந்து அவர்களே அவிழ்த்துவிட்டுள்ள சடபூத விதி வசத்தவராய் அவர்கள் ஆனதே இந்தப் பரிதாப நிலைக்கும் அடிப்படையாகும். எந்த வழியிலும் மக்களினத்தைக் குறைத்து விடுவது என்ற இந்த போக்கு எந்த நல்லப்பலனைக் குறிக்கின்றது என்பது நமக்குப் புலனாகவில்லை! மனிதன் அறிவுள்ளவன், தன்னை ஆட்சி பண்ணிக்கொள்ளும் இயல்பு மிக்கவன் என்ற கொள்கையினைக் கொன்றுவிட்டு, வெறும் சடபூத விதி வசத்தவனே மனிதன் என்று சிறுமைப்படுத்தும் இந்த 'வாதம்' விநோதமானதே! இவர்களின் கணக்கையும், முதற்சியினையும் பொய்யாக்குவது திருவருட் செயல்!

உணவு, உடைக்காகச் செலவிடும் உழைப்பு !

மனித இனத்தின் உணவு, உடைத் தேவையானது. காற்றுக்கும் தண்ணீருக்கும் அடுத்தபடியான சிறப்புமிக்க பங்கு வகிப்பதாகும். இவற்றின் உற்பத்திக்காகச் செலவிடும் உடலுழைப்பு மிகவும் இன்றியமையாததே யாகும். இவற்றை உற்பத்தி செய்வதற்கான உழைப்பைக் குறைத்து விட்டு, அல்லது ஒழித்து விட்டு உண்டாக்கப் படும் ஒரு 'நாகரிகம்' உயிரின வளர்ச்சி விதிப்படி நோக்கினாலும், உடற்கூறு விஞ்ஞானப்படி பார்த்தாலும் உள இயல்பு அறிவியலின்படி ஆராய்ந்தாலும் சமுதாயப் பண்பு – ஒழுக்க விதிகளின் வழியில் நின்று அணுகினாலும் மிகமிக அபத்தமான ஏற்பாடாகவே முடியும்! இயற்கையான சூழ்நிலை வாய்ப்பினைக் கொண்டு இயற்றப்படும் இலௌகிகத் தேவைக்கான உழைப்பின் காரணமாக, விலங்கியலில் லிருந்து விடுபட்டு. பண்பு நெறியில் செலுத்தத் தக்க பயிற்சியினைக் கொண்டுள்ளது, ஒரு அரும் பெரும் ஏற்பாடே யாகும். மாட்டைப் பயன் படுத்துவதிலும் உடல் உழைப்பே மிகுவதான ஏற்பாடே சிறப்புடையது என்பது விநோபா அடிகளின் கருத்து! உடல் உழைப்பினைக் கொண்ட ஏற்பாடே நீடித்து நெடிது காலம் நின்றொளிர வேண்டிய தலைமுறையினருக்கும்-சமுதாயத்திற்கும் உதவக் கூடியது. இந்த அடிப்படை ஒழிக்கப்படுமானால், வலுவான தலைமுறையைத் தோற்றுவிக்க ஆற்றலில்லாது போய்விடும். 'இயங்கும் இயல்' பற்றி (On Dialecties) வரைந்த எங்கல்ஸ் என்னும் மார்க்சின் அறிவுலகத் தோழர், 'மானிடக் குரங்கிலிருந்து மனிதன் மாறி வளர்ந்த காலத்தில் உழைப்பு வகித்த பங்கு' என்பது பற்றி ஒரு அத்தியாயம் (The part

played by labour in the transition from Ape to Man) எழுதியுள்ளார். அதில் உடல் உழைப்புக் காரணமாகவே மூளை – நாடி – நரம்பு மண்டல வளத்துடன் கூடிய பண்பாட்டு மனிதன் உருவானான் என்றும், உழைப்பில்லா திருந்தால் இத்தகைய மனிதப் பரிணமம் ஏற்பட்டிருக்க முடியாதென்றும் காட்டியுள்ளார். இவ்வாறு உழைப்பின் காரணமாக மனித உடலாகப் பரிணமம் ஏற்பட்ட நிலப் பகுதி தமிழர்கள் இலக்கியம் கூறும் மறைந்த இலெமோரியாவென்னும் தென்குமரி நாடாகும்!

இன்னும் நூறு வயதுக்கும் மேல் வாழ்பவர்கள் பலர் சோவியத்து நாடான ஜார்ஜியக் குடியரசில் உள்ளனர் என்றும் அவர்கள் நோய் வாய் படுவதில்லை – டாக்டர்கள் சந்திப்பு அவர்களுக்கில்லை – சிறந்த நரம்பு மண்டலமும், நினைவு ஆற்றலும் உண்டு –, என்றும் செய்தி வருகிறது. சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, பலனுள்ள – (உ-ம்) திராட்சைத் தோட்டம் போடல், தேனீ வளர்த்தல். மற்றும் தோட்ட வேலைகள் – ஆகியவைகளில் ஈடுபடுதல் – நீண்ட வாழ்க்கைக்குத் தூண்டு கோலாக உள்ளது என்பதை அவர்கள் வாழ்க்கை நிரூபிக்கிறது. குடி, புகையிலைப் பழக்கத்திற்கு ஆளாகாது, பழங்கள், திராட்சை, தேன், கீரை (வைட்டமின் 'சி' யுள்ளது) ஆகியவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்வது நீடித்த ஆயுளுக்கு ஆக்கம் கொடுக்கிறதாம்.

கீதையின் துணைகொண்டு பாரதியும் உழைப்பின் சிறப்பை விளக்குவார். ''யாவரெனும் (மனத்தாலும், வாக்காலும், உடலாலும்) சும்மாயிருத்தல் ஒரு க்ஷணத்தில்கூட சாத்தியப்படாது. இயற்கையிலேயே பிறக்கும் குணங்களால் ஒவ்வொருவனும், தன் வசமின்றியே எப்போதும் தொழில் செய்து கொண்டிருக்கும்படி வற்புறுத்தப்படுகிறான்'' என்று கண்ணபிரான் பகவத் கீதையில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். உயிருள்ள ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங்கொடாது!'

காந்தியடிகள் உழைப்பின் உயர்வை உணர்ந்த விதம்

''வாழ்வதானால் உழைத்தே வாழ்வது என்ற விதி டால்ஸ்டாய் எழுதிய 'உண்டிக்கான' உழைப்பு (Bread Labour) என்ற நூலைப் படித்ததிலிருந்து எனக்குத் தோன்றியது. ஆனால் இதற்கு முன்னதாக இரஷ்கின் வெளியிட்ட 'கடைனுக்கும்உதயம்' (Unto the Last) என்ற நூலைப் படித்த காலத்திலிருந்தே, இந்தக் கொள்கைக்குத் தலைவணங்க ஆரம்பித்தேன். மனிதன் தன் கைவினையின் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டே வாழ்வது என்ற தெய்விகமான விதியை போண்டார்ப்வ் (T. M. Bondaref) என்ற இரஷ்ய ஆசிரியர் வலியுறுத்

னர். டால்ஸ்டாயோ இதற்கு விளம்பரம் கொடுத்து, பெருமளவில் பரப்பும் பணியை மேற்கொண்டார். கீதையின் மூன்ருவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளபடி 'வேள்வி' இயற்றது எவனெருவன் உணவு உண்பானே, அவன் உண்டது திருட்டு உணவேயாகும். வேள்வி என்பது இங்கு உண்டிக்கான உழைப்பே யாம்! இவ்விதம் இக்கொள்கை சொல்லப்பட்டிருப்பதாகவே நினைக்கின்றேன்.

'உடல் உழைப்புச் செய்யாதவன், உண்ணும் உரிமை எப்படிப் பெறக் கூடும்? – என்ற முடிவுக்கே பகுத்தறிவும் நம்மை அழைத்துச் செல்லும் 'நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உண்டி அருந்துவாயாக!' என்று பைபிள் அருளும்.

'உண்டிக்கான உழைப்பு' என்பது அகிம்சையை – அன்பினைப் பின் பற்றி, சத்தியத்தை – உண்மையை வணங்கி, பிரம்மச்சரியத்தையும் இயற்கையான சட்டமாக மதித்து நடப்பவனுக்கு ஒரு உண்மையான வரப்பிரசாதமாகும். இந்த உழைப்பு உண்மையான உழவுத் தொழில் ஒன்றுடனேயே தொடர்புள்ளது. ஆனுல் இன்று எந்த வழியிலும், ஒவ்வொருவரும் அத்தொழிலை மேற்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆயினும் ஒருவன் நூற்பு, நெசவு, தச்சு, கொல்லு போன்ற யாதேனு மொன்றில் உழவுத் தொழிலுக்குப் பதிலாகச் செய்ய முடியும். ஆயினும் உழவுத் தொழிலே இலட்சிய அமைப்பு என்பதை மதிக்கக் கடமைப்பட்டிருக்கிருேம்.

'மனிதன் மூளை உழைப்பால் உணவைத் தேடிக் கொள்ளலாமல்லவா? – என்ருல், அப்படியில்லை. உடலின் தேவை உடலால்தான் நிறைவு செய்யப்பட வேண்டும். 'சீசருக்கு அளிக்க வேண்டியதை சீசருக்கே அளிக்க வேண்டும்.' – என்ற பழமொழி இதற்கு நன்கு பொருந்தும்.

'கிராமத்தை நோக்கித் திரும்புக.' வென்பது உண்டிக்கான உழைப்பையும், அது குறிக்கும் ஏனைய கடமைகளையும் உணர்ந்து கொள்வதே யாகும்.

'ஒரு ஆண்டானுக்குக் கட்டாயத்திற்காகப் பணி புரிவது அடிமைத் தனம். தனது தந்தைக்கு, மனே உணர்வுடன் கீழ்ப்படிந்து நடப்பது மகன் தந்தைக்குச் செய்யும் பெரும் பேருகும்' அதேபோல் உண்டிக்காகக் கட்டாய வேலை செய்வதுவறுமை, பிணி, அதிருப்தி ஆகியவற்றிற்குக் காரணமாகும் அடிமைத்தனமாகும். உணர்வுடன் மனமிசைந்து மேற்கொள்ளும் உழைப்போ ஆறுதலும், ஆரோக்கியமும் ஆகும். உடல் நலனே உண்மையான செல்வம். வெண் காசும், பொற்காசுமல்ல. கிராமக் கைத்தொழில்களின் சங்கம் உணர்வோடு கூடிய உண்டிக்கான உழைப்பினுக்கு ஒரு ஆய்வாகவே அமையும்.

உழைப்பின் மகிமையை ஆன்மீயக் கண்கொண்டு நோக்குவதை வல்லநாட்டு அடிகளார் கருத்து மணிகள் உணர்த்தும் 'அயன் – விவசாயம்; உருத்திரன் – கைத்தறி; சிவன் – நந்தவனம்' பயன் கருதா பற்றற்ற வாழ்க்கைக்கும், தெய்வப் பணிக்கும் – தொண்டு வாழ்க்கைக்கும் எடுத்துக்காட்டாகும்,

மேலும் 'வேலையே – சிவகலை; தொண்டே – தூய்மை' ஏழைக்கு உதவுவது காசிக்கு உதவுவது. காசி, வாசி, நாசி! தான் உண்டது மண் உண்டது, பிறர் உண்டது பரன் உண்டது. 'நமது செய்கையைப் பொருத்தே வாழ்க்கையில் புயல், புயலில்லாமை என்றெல்லாம் எடுத்தோதி தொண்டின் சிறப்பையும், அதற்கெல்லாம் அடிப்படையான உழைப்பின் மாண்பினையும் நயம்பட அருள்வார்கள்.

உழவுக் கருவியைக் கைவிட்டு விட்டு எந்திரக் கலப்பையான ட்டிராக்டரைப் பயன்படுத்துவது குறித்து வினோபா அடிகள் சொல்லுவார்: மாடு பால்தரும். உழவுக் கானைகளையும் ஈன்று தரும், அவை போடும் சாணம் நிலத்திற்கு நல்ல உரமாகக் கிடைக்கிறது. மிகுந்திருக்கும் வைக்கோலையே அவை உணவாகக் கொள்ளும். ஆனால் எந்திரக்கலப்பையோ வைக்கோலைத் தின்பதில்லை. சாணம் போடுவதில்லை. இனவிருத்தியும் செய்வதில்லை. மேலும் எந்திரக் கலப்பை புகுந்து விடுவதானால், மாட்டை என்ன செய்வதென்ற சிக்கல் கிளம்பும். இதற்கு ஐரோப்பியர்களைப் போலவே நாமும் அவற்றைக் கொன்று தின்னப் பழகிக் கொள்ள வேண்டியதுதானே. – என்று வேதனையுடன் இடித்துக் கூறுவார்.

பசுவளர்ப்பும், தேனீ வளர்ப்பும், ஏனைய குடிசைத் தொழில் பலவற்றையும், யாவருமே அசாத்திய பயிற்சியோ – அனுபவமோ இன்றி – எளிமையுடன், அதிக முதலீடும் போடவேண்டிய அவசியமும் இல்லாது, இயற்கையான சூழ்நிலையிலேயே – இன்னும் இருந்த இடத்திலேயே, இயற்றக்கூடிய இன்பமும், எழில் மிக்கதுமான ஏற்பாடாகும். கிராமீயத் தொழில்கள் யாவும் மனித இலக்கணமாம் அருள் நோக்கிலும் – அன்பின் வழியிலும் – இம்சை குறைந்த நிலைமையிலும் – இயற்கை – சுற்றுச் சார்பிலும் இயற்றக் கூடியதான – என்றும் நிலைபெற்றிலங்கும் நிரந்தர பொருளியல் வாழ்க்கைக்கு அடிகோலுவனவாகும்.

வினோபா அடிகள் காட்டும் காந்தியம்!

இன்று எங்கு பார்த்தாலும் வறுமை பற்றுக்குறை – கட்டுப்பாடு கள்ளச்சந்தை இன்னபிற செய்திகளாகவே நமக்கு கிடைக்கின்றன.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்!" எம்மிடம் யாதொரு பொருளும் இல்லையே என்று வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால், அவனுடைய அறியாமையை எண்ணி – நிலமகள் தன்னுள் சிரித்துக் கொள்வாளாம்! வள்ளுவர் போற்றும் உழவும் – தொழிலும் அதற்கு நிலைக்களனான நிலமும் உணர்த்தும் செய்தி இது.

இன்று நமது கவனத்தையும், கருத்தையும் தன்வயமாக்கிக் கொண்டுள்ள பெரும் சிக்கல் கிராமத்தையும் – நிலத்தையும் – நமது உறவையும் பற்றியது. கிராம வாழ்க்கையில் நிலமே தாய். நிலச் சிக்கல் கிராம வாழ்க்கையில் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்று வித்துள்ளது. இதில் ஒரு தீர்வு காண்பது உலகின் நெடிது ஆக்கம் கருதும் நாகரிகத்திற்கும் பெரிதும் துணை செய்வதாகும். இச்சிக்கலில் காந்தியம் காட்டும் பாதையையே விநோபா அடிகளும் காட்டுவார்.

'நிலதானம்' என்ற ஒரு புதிய இயக்கம் ஆந்திர நாட்டின் கிராமமொன்றில் 1951-ல் எப்ரல் மாதம் 18ந் தேதி யன்று முதன் முதலில் தோன்றியது, இந்தக் 'கருத்து' கருத்தோட்ட உலகினில் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் குறிக்கக் கூடிய ஒன்றாகும். காந்திய சிந்தனையின் வளமையையும், செழுமையையும் இங்கு காண்கின்றோம்.

'ஈத்துவக்கும் இன்பத்தை'ப் பற்றி நமது இலக்கியங்கள் முழங்கும். வள்ளல்கள் மரபுகளை தன்னுள் கொண்டவை நமது இலக்கிய மரபு. ஆற்றுப்படுத்தும் மரபு நமது இலக்கியத்தில் மிகவும் நயமான பகுதியே. இந்த பண்பு நலம் சிறந்த ஒரு கொள்கையில் சமுதாயப் புரட்சி இயக்கம் கண்டவர் விநோபா அடிகள்!

விநோபா அடிகள் கண்ட 'நிலதானம்' பின்பு கிராமதானம் வட்டார தானம் – மாவட்ட தானம் – மாநில தானம் என்றபடி வளமுறும் சர்வோதயமாக ஒளிபெற்று உயரும் ஒப்பற்ற புரட்சி இயக்கமாகும்.

இதன் உட்பிரிவுகளான 'சர்வோதய பாத்திரம்' ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வண்ண வேலைபாடு கொண்ட மண்பானையொன்றை வைத்து, பூதான – கிராமதான இலட்சியங்களில் – அதாவது, சிக்கல்களுக்கு, அமைதியான தீர்வில் நம்பிக்கைவாக்கு, தெரிவிப்பது தங்களது ஈடுபாட்டைக் காட்டும் விதத்தில் – ஒரு புதிய காசோ அல்லது ஒரு கைப்பிடி அரிசியோ போடும்படி செய்வது. 'போலீஸ்' போன்ற எதிர்மறை அமைப்புக்கு மாற்றான 'சாந்தி சேனை' போன்ற

கருத்துப் போக்கு வளர்ச்சிகளுக்கெல்லாம் இந்த நிலக்கொடை இயக்கம் வித்திட்டுள்ளது.

இந்த விஞ்ஞான சலசலப்பிலும் நாகரிகத்தின் நிலேயான அடிப் படைகள் யாவை என்பதை உணர்த்தும் ஆற்றல் மிக்க இயக்கம் வினோபா அடிகளின் பூதான இயக்கம். இது பரந்த கொள்கைத் தெளிவுடன், உண்மை உணர்வு ஊட்டி, அன்பு – அருள் – என்ற கோட்பாட்டில் வளமுற்றோங்கும் மனித மதிப்பீடுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

தனக்கென வாழா பிறர்க்குரிய தகைமை சான்ற வண்மை மிக்க வள்ளல்கள் நினைவில் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை இன்ன பிற ஆற்றுப்படுத்தும் எழுத் தோவியங்கள் எழுந்தன. மாரியுடன் போட்டி போட்டு வளம் செய்த பாரியும், காரியும், குமணனும் வாழ்ந்து சிறந்த மண்ணில் ஆன்மீயப் பண்பு சிறந்தொளிர்ந்தது. இலௌகீகம் என்பது சில சுயநலமிகளின் நலனுக்கே யென்று விட்டு விடாது, இகத்தே பரத்தைப் பெற்று மகிழ் வதற்கென்று, பாதை காட்டிய திறத்தை வள்ளல் வினோபா அடிக ளின் ஒளித் திட்டத்தில் கண்ணுற்றோம். இது வெறு கற்பனை உலகி னுக்கு (utopia) பாதை காட்டுவது அல்ல. பண்டைப் பெரும் பாரம் பரியத்தில் முளைத்தெழுந்த 'பூதானம்' மனிதனைப் புதிய உலகினுக்கு இட்டுச் செலுத்தும் வலுமிக்க ஆன்மீய இயக்கமாகும்.

காந்தியடிகள் அமர நிலை எய்தியபின், நாட்டில் விஞ்ஞானமும், அறிவுத்துறைகளும், ஆன்மீயக் கல்வியும் நோக்கமற்றுச் சென்று கொண்டிருந்ததை திசைதிருப்பிவிட்ட பெருமை வினோபா அடிகளைச் சாரும். இதன் ஆற்றலை வினோபா அடிகளுடன், பாத யாத்திரை ஒன்றில் கலந்துகொண்டவர்கள் கூறக்கேட்கலாம். வினோபா அடிகள் பல்லாயிரம் மைல்கள் கால் நடையில் புனித யாத்திரையாகக் கைக் கொண்டு இந்தப் புரட்சி இயக்கத்தை வளமூட்டினார். கிராம மக்களை வினோபா அடிகள் நெருங்க முடிகிறது, கிராம மக்களின் இதயத்தை நன்கு புரிந்து கொண்டுள்ளார். கிராம மக்களும் தங்களது உள்ளத்தை அடிகளுக்கு பறிகொடுக்கின்றனர்.

பதினறு ஆண்டுகட்கு மேலாக 'பூதான வேள்வி' வளர்ந்து இது வரை நாடு முழுவதிலும் 50,000 கிராமங்களுக்கு மேல் கிராம தான இயக்கத்தில் சேர்ந்துள்ளன. வட்டாரம் வட்டாரமாக வழங்கப்பட்டு மாவட்ட தானமும் ஆகி வருகின்றது தமிழ்நாட்டில் கிராம தானங் கள் 5000க்கு நெருங்கி வருகின்றன. நெல்லை மாவட்டமே முழுவது மாக இப்புனித புரட்சி இயக்கத்தில் சேர்ந்து தமிழ்நாட்டிற்கே வழி

காட்டக்கூடியளவுக்கு உயரக்கூடும். இந்த நாடு முழுவதிலும் மத்திய – மாநில அரசுகள் செய்துள்ள காரியங்களை யெல்லாம்விட பெரியளவுக்கு இந்த இயக்கம் வெற்றி முனையில் சென்று வருகின்றது.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக, நமது நாட்டின் தற்காப்பினை உத்தேசித்து. 'அவசர காலச் சட்டம்' பிறப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும். 'கிராம தானமே' தன்னைக் காத்துக் கொள்ள வலுமிக்க தற்காப்பு, அவசரகால! நடவடிக்கை என்று முழங்கி வந்தார் வினோபா அடிகள். அமரகவி பாரதி நெல்லை மாவட்டத்தில் – கடயத்திலிருந்து கொண்டு கிராமதான உலக இயக்கத்தைப் பற்றி அன்று எண்ணமிட்டார். இன்று அந்த இயக்கம் 'தேசிய ஒருமைப்பாடு' போன்ற ஏனைய பல இயக்கங்களை யெல்லாம்விட, மிக ஆழமும், உள்ளடக்கமும் கொண்டு மாபெரும் இயக்கமாக மலர்ந்து வருகின்றது.

தனிப்பட்ட ஒருவர் வழங்கிய நிலத்தை நிலமற்றவர்களுக்கு கொடுக்கும் நிலையிலிருந்து, இன்று கிராம மக்கள் அனைவருமே கூடித் தங்களுக்குள் திட்டமிட்டு உயர்வதற்கான அளவில் வளம் பெற்று வளர்கின்றது இந்த இயக்கம். இந்த அமைதியான புரட்சி உலகின் கவனத்தைத் தம்பால் சிறிது சிறிதாகக் கவர்ந்து வருகின்றது. சமுதாயத்தில் காணப்படும் சிக்கல் பலவற்றையும் அமைதியான வழியில் தீர்த்துக் கொள்ளவும், சொந்த பலத்திலேயே நின்று வளரவுமான தன்மையினைக் கொண்ட ஒரு பெரும் புரட்சிமிக்க இயக்கம இது.

உலகின் பல பாகங்களிலும் சில 'இலட்சிய சிந்தனையாளர்கள்' புதிய உலகினை – தொல்லைகள அற்ற – இன்பமும், எழிலுமிக்க இலட்சியபுரியினை, உருவாக்க கனவு கண்டு வந்தனர். அவை வெறும் கனவாகவே இருந்துள்ளன. காந்தியடிகள் தந்த பொறுப்பாண்மைத் தத்துவம் (தர்மகர்த்தாக் கொள்கை) 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு' — என்ற அருள்மொழியை விளக்க வந்ததாய் அமைந்தது. இன்றைய காலச் சூழ்நிலைக்குப் பொருந்துமாவென்று ஐயுற்றவர் பலர் உளர். வினோபா அடிகளின் அருட்கரத்தில், பொறுப்பாண்மைத் தத்துவம், சர்வோதயம் மலர்வதற்கான 'கிராம தானமாக' வளம் பெற்று ஒங்கலாயிற்று.

இதற்குப் பொருத்தமான இலட்சிய வேட்கையுடன் 'சாந்திசேனை' யென்ற அமைப்பும் தோற்றம் கொண்டுள்ளது இது உலகளாவிய நிலையில் செயலாற்றுகின்ற ஒன்று. நாடு முழுவதும் பெருமளவில் வளரவேண்டிய ஒன்று. இது முடிவில் போலீஷ் இராணுவம் போன்ற எதிர்மறை அமைப்புக்களை அப்புறப்படுத்திவிட்டு, உடன்பாடான வழியினைக் கொண்ட சீர் அணியாக வளர்ந்து வையவாழ்வில் நல்லதொரு பணியாற்ற காத்துள்ள ஒன்று. தொண்டர்கள் தங்களின்

தொண்டு காரணமாகவே மக்களிடையே அன்புத் தளைகளால் பிணைக்கப்பட்டு மக்களைத் தொண்டர் குலமாகவே – ஒன்றே குலமாகவே அணிதிரட்டக் கூடும்.

எனவே உயர்ந்த தன்னாட்சி இலட்சிய அமைப்பாம் சர்வோதய இலட்சியம் செயல் முறைக்கு வரக்கூடிய பெற்றியை விநோபா அடிகள் கண்டு கையாண்டு, வையத்தின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பம் நல்கியுள்ளார் என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. இனி வரலாற்றின் பொற்காலம் இந்த வழியில்தான் மலர வேண்டும் என்பதைக் காண்போம்.

உண்மையான ஜனநாயகம் தழைக்க அடிப்படைகள்

'எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை, எல்லாரும் இன்னாட்டு மன்னர்' என்ற ஜனநாயக உணர்வு மேலோங்கி வரும் காலம் இது. 'மக்களுடைய – மக்களால் – மக்களுக்காக அரசு' என்ற முழக்கத்தைச் செய்தார் அமரர் லிங்கன்! சிறந்த ஒரு இலட்சிய முழக்கமாயிருந்து வந்த போதிலும், அதற்கான வளமையான சூழ் நிலையும், 'மண்ணும்' அமையாது – வெறும் ஏமாற்றமும், ஏக்கமுமாயே இருந்துள்ளது. காரணம் யாதோ வென்று தியங்கவும், மயங்கவும் வேண்டியதில்லை. சிக்கல் படைத்த அமைப்பினைக் கொண்ட எந்திரயுகம் மனிதனின் இதய தாகத்திற்கு முரணாகவும், 'மதிப்பீடு', 'அமைதி'. ஆகிய கோட்பாட்டிற்கு எதிராயும் உருவாகி அழிவினையும், சுரண்டல் தன்மையும் கொண்டு பொருளும், பிறவும் பெருமளவில் விரைய மாக்கிப் போர் நெருக்கடியுள்ள ஒரு செயற்கையான சூழ்நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளது. மேலும் பொருள்கள் உற்பத்தி செய்வதிலும் தருவிக்கப் படுவதிலும், விநியோகிக்கப்படுவதிலும், உலகப் பொருளாதார நிலைமைகளில் நெருக்கடி மிக்க காரணங்கள் பொதிந்துள்ளன. இந்த மாதிரியான வாழ்வு– இந்த மாதிரியான விரைய வாழ்வு தலைதெறிக்கும் வேகத்தில் வளர்ந்து வருகின்றது. தம் வளர்ச்சியும், போக்கும் எங்கு வந்து முடியுமேன்பதை உணர்வதற்கே அவகாசமில்லாது கண்மூடித்தனமான திசையில் தள்ளப்பட்டுள்ளது, இன்றைய மேற்கத்திய சடபூத சமுதாய இயல். புதிதாக விடுதலை பெற்ற ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளும் தமக்குமுன். தள்ளப்பட்டு ஓட்டத்தில் சென்று கொண்டிருக்கும் நாடுகளை எட்டிப் பிடிக்கவே திட்டமிடுகின்றன. மனிதனின் சிறப்பான பண்புகள் கெட்டுப்போய், தான் செய்து கொண்ட வினையின் காரணமாகத் தன்னையே சாப்பிட்டு ஏப்பம் விடுவதான ஒன்றினை கட்டவிழ்த்து விட்டு, அதன் சுழற்சி விதியில் கட்டுண்டு, அதன் போக்கில் ஓடிக்கொண்டுள்ளான் மேலைய நாட்டு மனிதன். என் ஓட–

வேண்டும்? எங்கு ஓடுகின்றோம்? – என்ற உணர்வு வராது காலத்தின் வசத்தில் தள்ளப்பட்டுள்ளான். மீள முடியாத அபாயத்தினைக் கண்டுதான் உணர்வு பெற்று, அறிவு பூர்வமான வழியில் திரும்பி நடக்கத் தொடங்க வேண்டும். முந்திச் சென்றவர்கள் திரும்ப வந்து உருமாறி, பட்ட கதையை விட்டுச் சொல்லியே தெரிய வேண்டும் என்ற அவலநிலையில் விடுதலை பெற்ற நாடுகள் நிற்கின்றன. அடிமைத்தனத்தில் உழன்றதன் பயனாக சுயமான சிந்தனையும் – செயலும் இன்னும் நம் கைவரப் பெறவில்லை. 'என்று தணியும் எங்கள் அடிமையின் மோகம்'! என்று இடித்துரைத்தார் பாரதி! இந்த சடபூத இயக்க விதியில் சிக்கிக் கொண்டுள்ள ஒருவித குவியல் முறை (Centralisation) அமைப்பினில் ஜனநாயக உணர்வுகள் சிறந்தொளிர முடிவதில்லை.

எந்திரப் பொருளியல் அமைப்பினைக் கொண்ட நாடுகளின் அரசியல் – சமுதாய அமைப்புகளின் அரசியல் அதிகாரம், ஏனைய பலதுறைகளும் குவியல் முறையினையே இயல்பாகக் கொண்டுள்ளவை. பரந்து விரிந்து நிலைகொள்ள வேண்டிய பரவல் முறைக் குடிமை நீதிக்குப் பகைமை கொண்டவைகளாகவே இருந்துள்ளன. இந்தக் குவியல் முறை அமைப்பில்தான் சர்வாதிகாரமும், ஏதேச்சாதிகாரமும் வளர்ந்து வருவதாயுள்ளன. இட்லரின் நாசிக் கொள்கையும், முசோலினியின் பாசிசக் கொள்கையும் இந்த குவியல் முறை நியதியின் இயல்பான விளைவுகளே. சரோக்கின், இரஸ்ஸல், அஃசிலி போன்ற அறிஞர்கள் இந்த நிலைகள் குறித்து எச்சரிக்கை செய்வார்கள். இத்துடன் தொடர்புள்ள மற்றைய சமூக விளைவுகள் குறித்தெல்லாம் அமெரிக்க நாட்டின் விஞ்ஞான – பேராசிரியர்கள் ரெவிலி, எஸ். டில்லன் ரிப்ளி, டாக்டர் ஜேமஸ், எ. சேர்னன், எட்மண்ட் எஸ். முஸ்கி, மார்டன் மிண்ட்ஸ் போன்ற பெருமக்கள் ஆராய்ந்து வெளியிடுவதும், எச்சரிப்பதுமாயுள்ளனர்.

இத்தருணம் வலுவான அடிப்படையில் நெடிதுகாலம் நிலைத்து நிற்கும் பண்பினைக் கொண்ட பண்டைக் கிராமீய அமைப்பின் தளத்தில் நின்று, இன்றைய விஞ்ஞான யுகத்திற்கொப்ப ஒரு இலட்சிய அமைப்பை உருவாக்குவதே இன்றைய தலைமுறையினர் செய்யவேண்டிய பணி. அந்தக் குருட்டுச் சக்தியை வலிந்து முயன்று தழுவிக் கொண்டு, நமது ஆன்ம பலத்தையும் சிதறடிப்பதல்ல நாம் செய்யும் கடமை. ஆன்மீயப் பண்பில் நிலைத்த உலகியலாம் சர்வோதய இலட்சியத்தை உருவாக்குவதே நமது தலையாய தனிமுதற் கடமை. தங்கள் வாழ்வில் அலுப்பும் சலிப்பும் தட்டிச் சோர்ந்துள்ள வையகம் இந்தியாவிடமிருந்து எதிர்பார்ப்பது அதுவே.

இங்கு பண்டை அமைப்பில் உள்ள குறை நிறைகளைச் சீர்தூக்கி ஆய்ந்து, இந்த யுகத்தில் தோன்றியுள்ள புதிய நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, உருவாக்கப்படும் பரவல் முறை அமைப்பே இன்றைய ஜனநாயக உணர்விற்குத் திருப்தியளிக்கக் கூடியதாய் அமையும். வினோபா அடிகள் இதனை அணுகும் முறை மிகவும் பொருத்தமாய் அமையக் காணலாம்.

''நன்று, எந்திர யுகத்திற்கு முன் பரவல் முறை அமைப்பு இருந்தது என்று சொல்லிவிட முடியாது. சுயேச்சையான சிறு சிறு பகுதிகளான கிராமங்களில் நடைபெற்ற தொழில்கள் பரவல் முறையினைக் கொண்டு இருந்தவை என்று சொல்லிவிட முடியாதவை. எல்லாத் தொழில்களையும் தம்முள் கொண்டுள்ள விரிந்த அமைப்பைக் குறிப்பதே பரவல் முறையாகும். சிறுசிறு அளவில் குவியல் நிலையை அடையாத வெறும் தொழில்கள் சிதறிக் கிடக்கும் தொழில்களாகவே கொள்ள வேண்டும். இந்த மாதிரி சிதறிக் கிடந்த அமைப்புக்கள் எந்திர யுகத்திற்கு முன் நிறைய இருந்தன. எந்திரயுகம் தொடங்கியவுடன், அதன் விளைவாக அவை அடித்துச் செல்ல விடப்பட்டன. பரவல் முறை (அறிவோடு கூடிய குவியலற்ற இணைப்பு) பலமான அடிப்படையினைக் கொண்ட ஒன்று. அத்தகையது, தான் அடித்துச் செல்லப்படாது என்பதோடு. எந்திர யுகத்தையே தகர்த்து எறியும் ஆற்றலும் கொண்டது. தற்போதைய எந்திரயுகம் பெயரளவிலே எந்திரம் என்று சொல்லக்கூடிய நிலையில் உள்ளது. ஆயினும் முற்றிலும் கட்டுப்படுத்த முடியாத ஒன்றே அது. பொதுவுடைமையினர் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட எந்திர யுகத்தைப் படைப்பதற்கான மாற்றம் காண விரும்புகின்றனர். ஏனைய கருவிகளைப் போல், மனிதன் தானுகே தோற்றுவித்துக் கொண்ட கருவியே எந்திரம் என்ற போதிலும், அந்த எந்திரம் இயல்பிலேயே மனிதத் தன்மையற்றதே. எனவே ஓரளவுக்கு மேல், அதனை மனித சக்திக்கு உட்படுத்த முடியாது. அதற்குமாறுக, மனிதன்மீது அவை தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, ஏவல் கொண்டுவிடும். குறிப்பிடப்படும் எந்திரங்களும் மேலும் வேலையின்மை, சோம்பல், அறிவை மழுங்கடிப்பது ஆகிய சுரண்டல்தன்மை கொண்டுள்ளவைகளே. ஒருவன் பாடுபடும்போது ஓடிவந்து உதவும், உடலின் துணை உறுப்புப் போன்று, பயன்படக்கூடிய மனிதப் பண்பினைக்கொண்ட, மனிதனுக்கு அடங்கியவையல்ல அவை. பரவல்முறை எந்திர யுகத்தையே நொறுக்கிவிடுமென்று நான் சொல்லும் போது, அதன் நல்ல தன்மைகளை எடுத்துக்கொண்டு, அதன்பின் அதனைத் தகர்த்து விடுவதென்பதே அதன் பொருள். அதுவரையிலும் தகர்க்க வொண்ணு ஒன்று என்றே கொள்ள வேண்டும். முந்திய சிதறிக் கிடந்த கிராமத் தொழில்கள் எந்திர யுகத்தின் சாதகமான பயன்களைத் தனதாக்கிக் கொண்டு வளரும் ஆற்றலற்றவை. நோக்கத்தோடு உரு

வாக்கப்படும் பரவல்முறை தொழில்களுக்கும், பழைய இணைப்பற்ற சிதறிக்கிடந்த கிராமத் தொழில்களுக்குமுள்ள அடிப்படையான வேறு பாடு இதுவே. எனவே பரவல்முறையென்பதும், அது உணர்த்தும் கருத்தும் மிகமிகப் புதியதே. இந்தப் பாகுபாட்டை மனத்தில் எடுத் துக்கொண்டால், பரவல் முறைக்கு எதிரான வாதங்களெல்லாம் மலை மீது வீசிய வாளியைப் போல் தகர்ந்தொழியும்.

''ஆனால் பரவல் முறை என்பது தொழில்களுக்குத்தான் என்று குழப்பிக்கொள்ளலாகாது. பரவல்முறை அரசாங்க அதிகாரத்திற்கும் மிகவும் பயனுள்ள வகையில் பொருந்தவே செய்யும். எனவே காந்தி யடிகள் அரசியல் அதிகாரம் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு காலக் கட்டத்திலும், இனி எக்காலத்திற்குமாகப் பரவல் முறையாக்கப்படு வது அவசியமெனக் கண்டார். தொடக்கத்திலும், இடைக்காலத்தி லும் – ஏன்' கடைசிவரைக்கும் அது தவிர்க்க முடியாத தேவையே.''

பரவல்முறை ஜனநாயக அடிப்படைப்பற்றி விநோபா அடிகள் வெளியிட்ட தெளிவுரை இது. இத்தகைய பரவல் முறையைத் தன் னியல்பாகக் கொண்டுள்ளதும், கிராமப் பஞ்சாயத்துக்களைக் கொண் டதுமான தன்னிறைவு பெற்றிலங்கும் சன்மார்க்க சர்வோதய பரிணா மத்திலேயே, வைய வாழ்க்கையை ஆன்மீய மறுமலர்ச்சிக்குக் கொண்டு வரும் 'வரலாற்றின் பெருமை மிக்க பணி' அடங்கும்.

'ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை!'

என்று பாரதம் காட்டும் 'சமுதாய வியல்' சர்வோதய மதிப்பீடுகளைக் கொண்டு மிளிரும் ஒன்றாகவே திகழும்.

பாரதி இசைத்த காந்தி பஞ்சகம்

காந்தி யுகத்தின் தொடக்க காலத்தில் வாழ்ந்த அமரர் பாரதி காந்தீயத்தின் ஏற்றத்தை அந்தத் தொடக்க காலத்திலேயே புரிந்து போற்றியது மிகவும் அற்புதமானதே.

"வாழ்க நீ! எம்மான் இந்த. வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

"அடிமை வாழ்வகன்றிந் நாட்டார் விடுதலை யார்ந்து, செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி, ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்;
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்! புவிக்குளே முதன்மை யுற்றாய்.

வேறு

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
    மூலிகை கொணர்ந்தவன் என்கோ?
இடிமின்னல் தாங்கும் குடை செய்தான் என்கோ?
    என் சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
    வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவும் எளிதாம்
    படிக் கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
    பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
    கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
    இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
    பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

பெருங் கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்.
    அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த் தொண்டர் தங்கள்
    அறவழி யென்று நீ அறிந்தாய்
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
    நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
    வையகம் வாழ்கநல் லறத்தே!

துணை பயத்த நூல்களும், செய்தித் தாட்களும்

1. Hind Swaraj or Indian Home Rule — M. K. Gandhi
2. Towards Non-violant Socialism ,,
3. Cent Per cent Swadeshi or The Economics of Village Industries ,,
4. Gandhi and Marx — M, G. Mashruvala.
5. Economy of Permanance — J. C. Kumarappa.
6. On Dialecties — Engels.
7; India Today — Rajani Palmi Dutt.
8. Man the unknown — Dr - alexis carrel.
9. Reconstruction of Humanity — Pitirum A. Sorokin.
10. The Modern Review oct, '63, Prof. Toynbee and western Civilization, By, Prof. Debiprasad Bhattacharyya.
11. The Illustrated Weekly of India - Sep 8 '63. The Bhoodan movement - Mankumar Sen.
12. Gandhi Marg issues.
13. மனித வாழ்க்கையும் – காந்தியடிகளும் — திரு. வி. க.
14. மகாத்மா காந்தி வாழ்க்கை — லூயி ஃபிஷர்.
(தமிழாக்கம் : தி. ஜ. ர.)
15. மனிதனும் – சமயமும் — தாகூர்.
16. ஜனசக்தி வார மலர்கள் ;
(19 - 5 - 63., 21 - 4 - 63)
17. Sunday Standard Jan 15, 1967
(Technology has emptied Amarican - Women's life.)
18. இறுதிப் போர் கதருக்காக — வினோபா.
(சர்வோதய சங்க வெளியீடு)
19. திருக்குறள்.
20. திருவாசகம்.
21. தொல்காப்பியம்.
22. பாரதி பாடல்கள்.
23. புனிதர் ச சா. சிதம்பரசாது அவர்களின் குறிப்பேடுகள்
இன்னும்பிற.

இரண்டாவது உலகத் தமிழர் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை—'68